1124

# தமிழரசு

ஆ



## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத் தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

**மாதிரி சஞ்சிகை இனம்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

**ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.**

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 20—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 12—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 6—8—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 30—0—0 |
| ,, | 4 ,, | ,, | 50—0—0 |

**இதர விவரங்களுக்கு எழுதவும்.**

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

‘எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...’

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | யுவ௵ மார்கழி௴ | இதழ் |
|---|---|---|
| 6 | 1935௵ டிசம்பர்௴ 15௳ | 12 |


பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 882
ஊக்கமும் முயற்சியும் ... 888
மாறாட்டங்கள் ... 891
மூக்குத்தூளின் மகத்துவம் ... 894
தங்கக் கம்பி ... 897
வடஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் ... 901
சோதனை ... 906
அது ஒரு பிழைக்கும் வழிதான் 909
கைலாயத்தின் அந்த புரத்தில் ஒரு காக்ஷி ... 915
சுந்தர கோகிலம் ... 917
ஏ சரசா! ... 923
கோமளசேகரன் ... 929
‘மனவிரோத மணத்தின் முடிவு’ 936
வெளி விகடம் ... 943
தற்செயலாய் நடந்த சம்பவம் 945
புஷ்பாவதி ... 948
‘மாணிக்கம் கண்ட மகுத்துவம்’ 956

குறிப்பு:—‘தமிழரசி’ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்மிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## நேயர்கட்கு

இம்மாதத்துடன் தமிழரசுக்கு வயது ஆறு பூர்த்தியாகின்றது. தமிழரசு, நேயர்கட்கு சிறந்த கதையும் கட்டுரையும் நல்கி நேயர்கட்கு மனக்களிப்பையும் உற்சாகத்தையும் அளித்திருப்பதை அவர்கள் நன்கு அறிவர். அதுபோலவே இனியும் தமிழரசு செய்துவரும். எனவே தமிழரசு நேயர்களை வழக்கம்போல் அடுத்த ஆண்டுக்கும் முன்பணம் அனுப்பி தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## காங்கிரஸ் தலைவர்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை வகிக்க வேண்டுமாய் கனம் S சீனிவாச ஐயங்காரை கனம் முத்துரங்க முதலியாரும் கனம் கே. பாஷியம் ஐயங்காரும் பல காங்கிரஸ் பிரமுகர்கள் முன்னிலையில் கேட்டுக் கொண்டதாய் அறிகிறோம். இதுசமயம் கனம் ஐயங்கார் தலைமை வகிக்கும்படி செய்தால் பதினாயிரக் கணக்கில் மோசம் செய்யக்கூடிய சிலர்கள் பாடு திண்டாட்டமாக முடியும் மதிப்புடையவர்கள் காங்கிரசில் சேர ஆசைப்படுவர். ஆனால் கொள்ளையடிக்கும் சிலர் ஐயங்கார் வருவதை எதிர்ப்பார்கள் என்பது நிச்சயம். எத்தகைய எதிர்ப்பையும் பொருள்படுத்தாது சட்டதிட்டங்களை தூரத் தள்ளி ஐயங்காருக்கு தலைவர் ஸ்தானத்தை ஒப்படைக்க வேண்டுமாய் கோருகிறோம். எனவே கனம் S. சத்தியமூர்த்தி யவர்கள் உடனே ராஜினாமா செய்துவிட்டு அவர் ஸ்தானத்தில் ஐயங்காரை ஏற்படுத்த வேண்டும் என்பதே பொதுமக்கள் நோக்கமாகும்.

## பிரிட்டிஷ் தேர்தல்.

சென்ற மாதம் நடந்த பிரிட்டிஷ் தேர்தலில் தேசிய சர்க்காருக்கு எதிர் பார்த்ததற்கும்மேல் பேராதரவு கிடைத்து விட்டது. சர்க்கார் கட்சி சார்பாக தேர்தலில் நின்றவர்களில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் 387 பேர் வெற்றி பெற்றுள்ளார்கள். தேசிய லிபரல்களில் 33 வெற்றி யடைந்துள்ளனர். தேசிய தொழிற் கட்சியினரில் 8 பேர் தப்பிப் பிழைத்தோம் என்னும் நிலையில் வெற்றி பெற்றிருக்கின்றனர். தேசிய வாதிகளில் இருவர் வெற்றியடைந்திருக்கின்றனர். எனவே தேசிய சர்க்கார் கட்சியில் கன்சர்வேட்டிவ் கட்சியினரே அதிகமாய் இருக்கின்றனர். அதிலும் முந்திய தேசிய சர்க்கார் கட்சியில் இருந்ததையும் விட இப்போதைய தேசிய சர்க்காரில் அவர்கள் மிகப்பெரும் பான்மையோராய் இருக்கின்றனர்

ஏனைய தேசியப்பட்டம் சூட்டிய லிபரல்கள் தொழிற் கட்சியினர் முதலியோர் இல்லாமலே, அவர்கள் சர்க்காரை நடத்தக்கூடிய நிலைமையிலிருக்கின்றனர். 615 பேர்களைக் கொண்ட சபையில் 380 பேர்களை கொண்ட கட்சி என்னதான் செய்ய முடியாது? எனவே பெயருக்கு தேசியசர்க்கார் என்றிருந்த போதிலும் அதில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் கொள்கையே அநுசரிக்கப்படும் என்று கூறுவது மிகை யாகாது. ஆகவே இந்த சர்க்காருக்கு கன்சர்வேட்டிவ் கட்சி சர்க்கார் என்று கூறுவதே சாலப்பொருத்தமாகும்.

நிற்க, கன்சர்வேட்டிவ் கட்சியார் இவ்வளவு பெரும்வெற்றி பெறுவதற்கு காரணம் என்னவென்று ஆராயப்புகின், அவர்கள் வெற்றிக்கு அவர்கள் தேசியசர்க்கார் என்ற பெயரினால் சாதித்துள்ள காரியங்களல்ல. அவர்கள் வெற்றிக்கு அவர்களின் தலைவரும் பிரதம மந்திரியுமான திரு. ஸ்டான்லிபால்டுவினின் சமயோசித மதிநுட்பமே காரணம். தேசியசர்க்கார் ஜனங்கள் மனதை கவரும்படியான காரியங்கள் எதையும் சாதித்து விடவில்லை. அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எதுவும் செய்யவில்லை அத்துடன் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கவும் கிராமங்களை சீர்திருத்தி செழிப்புறச் செய்யவும் திரு லாயிட் ஜார்ஜ்--மகாயுத்தத்தின்போது பிரதமமந்திரியாயிருந்து காரியம் செய்து எதிரியைவென்று வெற்றிக் கொடி நாட்டி புகழ்பெற்ற திரு. லாயிட் ஜார்ஜ்:—கொண்டு வந்த கிராமப் புனருத்தாரண திட்டத்தை, அது அநுஷ்டான சாத்தியமானதல்லவென்று கூறி, ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனர். இதனால் நாட்டில் தேசிய சர்க்கார்மீது சிறிது மனக்கசப்பு இருந்ததென்றே சொல்ல வேண்டும். இப்படியிருந்தும் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அதற்கு மேலே குறித்தபடி அவர்களின் தலைவர் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும் முதுமொழிக்கிணங்க சமயோசிதமாய் நடந்து கொண்டதே காரணம். நாட்டில் சர்க்கார்மீது கசப்பு ஏற்பட்டிருப்பதை அறிந்த அவர் இத்தலி--எதியோபியா சச்சரவை தனது கட்சிக்கு ஆக்கம்தேடுவதற்காக உபயோகித்துக் கொண்டார். அவர் அகில தேசசபையின் மூலம் கூட்டு ஒத்துழைப்பினால் காரியம் செய்யவேண்டுமென்னும் கொள்கையை கைக்கொண்டார், அகில தேசசபை இத்தலி--எதியோபியா சச்சரவு சம்பந்தமாய் எவ்விதம் நடந்துகொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கு நன்கு தெரியும். எனவே அகிலதேசசபையின் செய்கையை தங்கள் ஆதரிப்பதாய் வெளியிட்டுக் கொண்டார். மற்றும் இத்தலி—எதியோபியா சண்டை நடப்பதாலும். அதில் அகில தேசசபை நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தவதாலும், அப்பொழுது இத்தலி இங்கிலாந்தை எதிர்க்கலாமென்றும், எனவே தேசப் பாதுகாப்புக்காக கடற்படை முதலியவைகளை பெருக்கவேண்டும் என்றும் திட்டம் வெளியிட்டார். இத்தலி உண்மையாகவே சண்டையிலிறங்கி விட்டதையும், ஜெர்மனியும் தனதுகடற்

படை முதலியவைகளை பெருக்கி வருவதையும் கண்ட நாட்டினர் இத்திட்டத்தை ஆதரித்தனர். இவ்விரண்டு கொள்கைகளையும் ஆதாரமாகக் கொண்டு அடுத்த வருஷம் நடத்தவேண்டிய தேர்தலை, இப்பொழுதே பார்லிமெண்டை கலைத்து தேர்தல் நடத்தினர். நியாயமாக தேர்தல் அடுத்த ஆண்டிலேதான் நடைபெற வேண்டும். பார்லிமெண்டுக்கு ஆயுள் ஐந்து வருஷங்கள். அதற்கு 1931ம் வருஷம் மத்தியில்தான் தேர்தல் நடந்தது. எனவே பார்லிமெண்டுக்கு ஏற்பட்ட ஆயுள் அடுத்த ஆண்டிலேதான் முடிகிறது. மற்றும் பெண் ஓட்டர்கள் அங்கு இதற்கு முன்னிருந்ததை எல்லாம்விட அதிகமாகிவிட்டனராம். அவர்கள் கன்சர்வேட்டிவ் கட்சியினர் சார்பாகவே ஓட்டுச் செய்ததாகவும் கூறப்படுகிறது. எதிர்கட்சியாரின் நிலைமையோ பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. அவர்களில் பிரபலஸ்தர்கள் எல்லாம் தோற்று விட்டனர். சாதாரணமானவர்களோ தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றனர். லிபரல் எதிர் கட்சித்தலைவரான சர். ஹெர்பர்ட் சாமுவேல் தோற்றுவிட்டார். மற்றும் தொழிற்கட்சியிலும் பல பிரபலஸ்தர்கள் தோற்று விட்டனர். எதிர்கட்சியினரின் தொகை 185. அவர்களில் தொழிற்கட்சியினர் 154 லிபரல்கள் 16. சுயேச்சைவாதிகள் முதலியோர் 15. தொழிற்கட்சியினர் இத்தேர்தலில் வெற்றி பெற்றிருக்கலாம். நாட்டில் அவர்கட்கு ஆதரவு அதிகரித்து வருகிறது என்பதற்கு சென்ற தேர்தலைவிட இத்தேர்தலில் தொழிற்கட்சி அபேட்சகர்கட்கு அதிக வோட்டுக்கள் கிடைத்திருப்பதும், சென்ற தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிஅபேட்சகர்கட்கு கிடைத்திருந்த பெரும்பான்மை ஓட்டுக்கள் குறைந்திருப்பதுமே அறிகுறியாகும். நாட்டில் இவ்வித நிலைமை இருக்குப்போது தொழிற்கட்சியினர் அதை ஆதாரமாகக்கொண்டு தங்கள் பலத்தை பெருக்கிக்கொள்ளத் தவறிவிட்டது அவர்களின் துர்பாக்கியமே. அதற்கு காரணம் அவர்கட்குள்ளே பிளவுகள் ஏற்பட்டன. பார்லிபெண்டு தொழிற்கட்சித் தலைவராயிருந்த திரு. ஜார்ஜ்லான்ஸ்பரி தனது தலைவர் பதவியை ராஜநாமாச் செய்தார். மற்றும் தொழிற்கட்சியின் விவகாரங்களை சரிவர விவேகத்துடன் நடத்தக்கூடிய தலைவர் ஒருவரும் அதற்கு இல்லை. எனவே அவர்கள் சிறுபான்மைக் கட்சியினராகத் தேர்தலில் வெளிவந்துள்ளனர். லிபரல் கட்சியின் நிலைமையைப் பற்றியோ கூறவேண்டியதே கிடையாது. ஏற்கனவே அக்கட்சிக்கு ‘அவிந்துபோன எரிமலை’ என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இத்தேர்தலில் அக்கட்சி அபேட்சகர்களில் பலர் தங்கள் டிபாசிட் தொகையையும் இழந்துவிட்டனர். மற்றும் முந்திய பார்லிபெண்டில் இருந்த தொகையில் பாதிகூட அவர்கள் இந்த பார்லிபெண்டிலில்லை. இப்படியாக கன்சர்வேட்டிவ் கட்சியாரின் பெரும் வெற்றிக்கு இத்தலி-எதியோபியா யுத்தமும், அதை ஆதாரமாகக்கொண்டு தேசப் பாதுகாப்புப் படைகளைப் பெருக்கத் திட்டம்போட்டு அடுத்த வருஷம் கலைக்க வேண்டிய பார்லிமெண்டை

இப்பொழுதே கலைத்து தேர்தல் நடைபெறச் செய்த அக்கட்சித் தலைவரின் சமயோசிதமான சாமர்த்தியச் செயலும், தொழிகட்சியினருக்கு ஆற்றல் படைத்த தலைவரில்லாது போனதுமே காரணமாகும். மற்றைப்படி அவர்கள் சாதித்துள்ள காரியங்களல்ல.

இந்த தேர்தலில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் திரு. ராம்சேமெக்டொனல்டின் தோல்வியே. அவர் தனது கட்சிக்குத் துரோகம் செய்து அதை உதறித் தள்ளிவிட்டு தேச நாணயத்தை காப்பாற்ற வேண்டும் என்னும் பேரில் 1931-ல் தேசிய சர்க்கார் அமைத்து அதில் பிரதம மந்திரியானர். அதனல் தொழிற் கட்சியினருக்கு அவர்மீது அதிக ஆத்திரம் பொங்கியது. எனவே இத்தேர்தலில் அவர் தொழிற்கட்சி அபேட்சகரால் தோற்கடிக்கப் பட்டார். அவருக்கு 17882 ஓட்டுக்களும் அவருக்குப் போட்டியாக நின்ற திரு. ஈ. சின்வெல் என்பவருக்கு 38380 ஓட்டுக்களும் கிடைத்தன. தேசத்தின் நாணயத்தை காப்பாற்ற வேண்டும் என்று தனது கட்சியின் பேரால் 1931ல் ஓர் திட்டம்போட்டு அதை ஆதரிக்கும் நாட்டினரை வேண்டித் தேர்தல் நடத்தியிருப்பாரானல் அவருக்கு இப்பொழுது இக்கதி கிடைத்திருக்காதென்று நம்புகிறோம்.

இந்தியா சம்பந்தப்பட்டமட்டில், இத்தேர்தலினல், அதற்கு எவ்வித நன்மையும் கிடையாது. எதிர்பார்ப்பதற்கும் இல்லை. ஏனென்றால் இந்தியாவுக்கு சீர்திருத்தங்கள் வழங்கக்கூடாது என்று கூறும் திரு. சர்ச்சில் போன்ற பிற்போக்காளர்கள் அதிகமாய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். எனவே திரு. சர்சிலின் கை முன்னையும்விட இப்பொழுது பலம் பெற்றிருக்கிறது.

## மன்னராட்சி

மகா யுத்தத்திற்குப்பின் உலகமெங்கும், முக்கியமாய் ஐரோப்பிய நாடுகளின் 'ஜனநாயக ஆட்சி' என்ற ஆட்சி வெகு தீவிரமாகப் பரவிவந்தது. அதன் பயனாக பல நாடுகளில் குடியாட்சிக் கிளர்ச்சி தோன்றின. அதனல் பல முடிமன்னர்கள் அரசிழந்தனர். சில நாடுகளில் பெயரளவிற்கு மட்டும் முடிமன்னர்கள் இருந்து வருகின்றனர். மகா யுத்தத்திற்குப் பின் குடியாட்சி நாடாகியவைகளில் கிரீஸ் தேசமும் ஒன்று. ஆனல் இப்பொழுது அது மறுபடியும் முடிமன்னர் ஆட்சி நாடாகிவிட்டது. கிரீஸில் குடியாட்சி ஏற்படுத்துவதற்காக அங்கு இதுவரை ஆறு கலகங்கள் நடந்துள்ளன. இப்பொழுது முடிமன்னராட்சி ஏற்பட்டதற்கும் குடியாட்சிக்காரர்களின் கலகமே காரணம். கிரீஸில் மன்னராட்சி வேண்டுமென்ற ஒரு கூட்டத்தார் சமீபத்தில் அதிகாரத்தை கைப்பற்றி பலம் பெற்றனர். அவர்கட்கு எதிரிடையாய் குடியாட்சிக்காரர்கள் சென்ற

மார்ச்சு மாதத்தில் கலகம் செய்தனர். அவர்களை அதிகாரத்திலிருந்தவர்கள் அடக்கி ஒடுக்கினர். குடியாட்சிக்கட்சியின் தலைவர் திரு. வெனிஸெலாஸ் உயிருக்குத் தப்பி நாட்டைவிட்டு வெளியேறும்படி ஏற்பட்டது. கலகத்தை ஒடுக்கிய மன்னராட்சிக் கோஷ்டியினர் 1923-ல் சிம்மாசனத்திலிருந்து துரத்தப்பட்ட இரண்டாம் ஜார்ஜ் அரசரை கிரீஸ் வந்து ஆட்சி புரியும்படி வேண்டினர். ஆனால் அரசர் ஜனங்கள் அவ்விதம் விரும்புவதாக தனக்கு நம்பிக்கை ஏற்பட்டாலல்லாமல் தாம் திரும்ப சிம்மாசன மேறப்போவதில்லை என்று பதிலிறுத்தார். அதனால் நாட்டில் பொதுஜன வாக்கு (ஓட்டு) எடுக்கப்பட்டது. அதில் சுமார் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மன்னர் திரும்ப வேண்டுமென விரும்புவதாய் ஓட்டுக் கொடுத்தனர். எனவே இப்பொழுது அரசர் கிரீஸ் வந்து சேர்ந்து சிம்மாசன மேறிவிட்டார். தனது ஆட்சியின் நற்கால அறிகுறியாக 1000 கைதிகளை விடுதலை செய்துவிட்டார். நாகரிகத்தின் பெயரால் உலகில் எவ்விதமான மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும், கடைசியில் உலகம் பழைய முறைக்கே திரும்பிவரும் என்னும் அபிப்பிராயத்திற்கு இஃதோர் சான்றாகும் என்று கருதுகிறோம்.

## இத்தலி-எதியோபியா யுத்தம்

இத்தலி-எதியோபியாயுத்தம் ஆரம்பித்து இன்றைக்கு $2\frac{1}{2}$ மாதமாகிறது இன்னும் அவ்யுத்தம் விரைவில்முடிவுபெறும் என்பதற்கு அறிகுறியொன்றையும் காணோம். ஆனால் இப்பொழுது யுத்தச் செய்தி மாறுபட்டு வருகிறது. எங்கும் இத்தாலியருக்கு தோல்வி என்றே செய்திகள் வருகின்றன. இத்தலியர்கள் எதியோபிய முடிசூடிய இளவரசர் மாளிகையின்மீது ஆகாயவிமானங் களிலிருந்து குண்டுகள் வீசினர். அ சமயம் டெஸியிலிருந்த எதியோபியா சக்கரவர்த்திதெய்வாதீனமாய் உயிர்தப்பினர். 'திக்கற்றோருக்கு தெய்வமே துணை' என்ற முதுமொழி சக்ரவர்த்தி உயிர் தப்பியதற்கு சாலவும் பொருத்தமாகும். இத்தாலியர் இவ்விதம் குண்டு வீசியதினால் செஞ்சிலுவை ஆஸ்பத்திரியும் இன்னும் சிலகட்டிடங்களும் சேதமாயுள்ள. பலர் உயிர் நீத்துள்ளார்கள். இதைப்பற்றி எதியோபியா சக்காவர்த்தியும் மற்றைய மேனாட்டு கான்ஸலர்களும் அகில தேசசங்கத்துக்கும் இத்தாலிக்கும் கண்டனம் அனுப்பியுள்ளார்கள். நிர்பந்த முறைகளும் இத்தலியை சிறிதளவு பாதிக்க ஆரம்பித்திருப்பதாய் தெரிகிறது. ஆனால் அகில தேசசபை இன்னும் எல்லா நிர்ப்பந்த முறைகளையும் கையாளவில்லை. அவ்விதம் செய்திருக்குமானால் இதற்குள்ளாகவே இத்தலி தனது மனோபாவத்தை மாற்றிக் கொண்டிருக்கும். அகில தேசசங்கம் இத்தலிக்கு கப்பல், விமானம் முதலியவைகளுக்கு அவசியமான பெட்ரோல் முதலிய எண்ணெய் வகைகளை ஏற்றுமதி செய்

வதைத் தடுக்கத் தங்குகிறது. இத்தயக்கத்துக்கு காரணம் பிரான்சு நாட்டின் உள்நாட்டு விவகார நிலைமையே காரணம் என்று கூறப் படுகிறது. இத்தலிக்கு எண்ணெய் யேற்றுமதி செய்வதற்கு தடை விதிப்பது பிரான்சு உள்நாட்டு விவகாரத்தை எவ்விதத்திலும் பாதிக் கும் என்று நாம நினைப்பதற்கில்லை. இப்பொழுது அந்த சாக்கும் இல் லாது போய்விட்டது. பிரான்சு உள்நாட்டு விவகாரம் ஒருவிதமாய் தீர்த்துவிட்டது. பிரான்சு பிரதமமந்திரி திரு. லவாலின் கைபலப் பட்டு விட்டது. எனவே இனியும் சுணக்கமின்றி அகில தேசசபை விரைவாய் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடை ஏற்படுத்தி யுத்தத்தை விரைவில் முடிவுக்குக்கொண்டுவர உதவிசெய்து உலக சமாதானத் துக்கு அடிகோலி, உலகின் நன்றிக்குப் பாத்திரமாகும் என்று எதிர் பார்க்கிறோம்.

நிற்க, சமாதானப் பேச்சும் நடப்பதாய் விடாது வதந்தி வெளிவந்துகொண்டேயிருக்கிறது. திரு. லவால் இன்னும் அம் முயற்சியைவிட வில்லையாம். அவர் சமாதானத்திற்கு கூறியிருப்ப தாய் தெரிவித்திருக்கும் ஆலோசனை மிக விநோதமாக இருக்கிறது. அவர் ஒகதான் மாகாணத்தை எதியோபியா, இத்தலிக்கு கொடுத்து விடவேண்டும் என்றும், டைகிரிஸ்மாகாணத்தில் மாறுதல்கள் செய்ய எதியோபியா சம்மதிக்க வேண்டுமென்றும், அதற்குப் பதில் இத்தலி எரிட்டிரியா மாகாணம் வழியாய் கடலுக்கு எதியோபியாவுக்கு தொடர்பு ஏற்படுத்த அகிலதேச சங்கத்தின் மேற்பார்வையில் ஒரு ரயில்பாதை போட சம்மதிக்க வேண்டும் என்றும், மற்றும் ஒருதுறை முகத்தையும் இத்தலி எதியோபியாவுக்கு கொடுக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறாராம். இவ்விதம் நாட்டைப் பறி கொடுப்பதற்காகத் தான் எதியோபியா யுத்தத்திலிறங்கி நூற்றுக்கணக்கான வீரர் களையும் பெண் மக்களையும் உயிர்ப் பலி கொடுத்திருக்கிறதோ? இந்த உயிர்ப் பலிகளில்லாமலே இவ்விதமான ஏற்பாடுகள் செய்திருப்பது எளிதல்லவோ? அகிலதேச சபை திரு. லவாலின் யோசனையை ஒப்புக்கொண்டு, அதன்படியே காரியம் செய்யுமாயின், அதை எதியோபியா சக்கிரவர்த்தி ஒப்புக்கொள்ளுவாரோ என்பது ஒருபுற மிருக்க, இதுவரை அது செய்துவந்த காரியங்களினால் அதற்கு ஏற்பட்டிருக்கும் நன்மதிப்புப் போய் மீண்டும் வெள்ளையர் சங்கம் என்ற பெயர் நிலைபெற இடமாகிவிடும். அத்துடன் முதலில் எதியோபியாவை ஆதரிப்பதுபோல் நடித்து, பின்னர் இவ்விதம் செய்து, தங்கள் யோசனையை எதியோபியா கேட்கவில்லை, அதனால் இப்பொழுது அதற்கு அதரவளிப்பதை நிறுத்திவிட்டு, இத்தலியை ஆதரிக்கிறோம் என்று சொல்லும் கருத்துடனேயே ஆதிமுதல் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றனவோ என்று ஐயுறவும் இடங்கொடுக்கும்.

# ஊக்கமும் முயற்சியும்

[திருவையாறு கே. வைத்தியநாதன்]



யாதானுமொரு பொருளைத் தொட, சுவைக்க, பார்க்க, நுகர, கேட்க நம் உள்ளத்தெழும் அவாவின் முதிர்வே ஊக்கமாம். அந்த ஊக்கத்தின் விளைவால் எழும் நம் அவயவங்களின் அசைவே முயற்சியாம். ஊக்கம் யார் கண்ணுக்கும் புலப் படாததாய் மனத்தைப் பிணித்துக்கொண்டு வெளி வர உந்துவது; முயற்சி செய்கையளவில் அந்நியரால் காணத்தக்கது. ஊக்கம் மனோலோகத்தில் தன் வேலையைச் செய்கிறது, முயற்சி மண்ணுலகத்தில் தன் தொழிலைச் செய்கிறது. ஊக்கம் உள்ளத்தைத் தூண்டுவது; முயற்சி உடலை—உடல் அங்கங்களை ஏவுவது. எனவே ஊக்கமும் முயற்சியும் நெருங்கிய இரு நண்பர்கள் என்னலாம்.

* * *

ஒரு பொருளைக் காணும்போது, சிந்தையும் கட்புலனூடே பாய்கிறது. பொருளின் அழகில் ஈடுபட்ட சிந்தை அதைப்பெற விழைகிறது. ஆசையால் ஊக்கம் எழுகிறது. ஊக்கத்தால் முயற்சி உண்டாகிறது. இஃதேபோல் ஐம்புலன்களும் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் ஆசையை எழுப்பிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன. ஆகவே புலன்கள், உள்ளம், ஊக்கம், முயற்சி இவை யாவும் ஓர் வகை உறவுகொண்டுள்ளன. இந்த உறவை ஏற்படுத்திவிட்ட இறைவன் மறைந்து நின்று அவற்றின் வேலைத்திறனைக்கண்டு மகிழ்கிறார்.

* * *

முயற்சி குன்றினால் சோம்பல் மிகும். 'சோம்பல் ஒரு பெரிய பாவமாவதோடு அனேக பாவங்களுக்கும் காரணமாகிறது.' (Sloth is in itself both a great sin and the cause of many more) என்பது ஒரு பெரியாரின் அநுபவ வாக்கு. மனிதனது வாழ்க்கைப் பயிரை நாசஞ்செய்யும் சோம்பற்களையை அழித்து வாழ்வைச் செழுமையுறச் செய்வது, ஊக்கம் முயற்சிகளாகிய எரு உணவே. சோம்பலாகிய அரக்கன் நம்மை யணுகுஞ் சமயத்தைத் தினமும் எதிர்பார்த்து நிற்கிறான். அவனது ஆதிக்கத்துக்கு இடங் கொடுக்காதவாறு ஊக்கமும் முயற்சியுமே நம்மைப் பாதுகாக்

கின்றன. உள்ளத்தில் ஆசை குறையக் குறைய, சோம்பற் பேய் மனிதனைபற்றத் தலைப்படுகிறது. ஆதலால் ஆசையைத் தளரவிடாது ஊக்கத்திற்கும், முயற்சிக்கும் மனிதன் ஆக்கமளிக்க வேண்டும்.

* * *

விளையாட்டிலும், வேடிக்கையிலும் ஈடுபடும் சிறுவர்கள் அவற்றில் கொண்டுள்ள ஊக்கத்தில் தளர்வதில்லை. தம் பெற்றோர்களது வசை மொழிகளையும், அடி யுதைகளையும் சிறிதும் லட்சியம் செய்யாது தங்கள் விளையாட்டலுவல்களில் கண்ணாகவே யிருப்பர். மேலும் இளமைப் பருவத்தில்தான் ஊக்கமும், முயற்சியும் பலபல வகைகளில் பெருகத் தலைப்படுகின்றன. அவ்வாறன்றி அவைகளில் அவர்கள் தளர்வார்களானால், அவர்களது உள்ளமும் உடலும் வளர்ச்சி யுறுவதேது? அப்போது அவர்களுடைய அறிவும் சோம்புமன்றோ!

* * *

இளமையில் மட்டும் ஊக்கம் முயற்சிகளின் ஆதிக்கம் போதாது. மனிதவாழ்வு முழுதுமே அவற்றின் கண்காணிப்பி லிருக்க வேண்டும். இன்றேல் நாம் இக்காலத்தி லனுபவிக்கும் இன்பங்களெல்லாம் நமக்குக் கிட்டியிருக்க முடியுமா?—நிலத்திற் செல்ல புகை வண்டி, காற்றையும் எதிர்த்துக் கடலிற் செல்ல மரக்கலம் (ரோவிக் கப்பல்) பறவைகளேபோல் வானத்திற் பறந்துசெல்ல விமானம் முதலானவை. இவைகளெல்லாம் அனேக மேதாவிகளது மாளா ஊக்கமும், விடா முயற்சியுமன்றோ! பஞ்சபூதங்களும் மனிதனது ஏவலின்படி நடப்பதெல்லாம் ஊக்கம் முயற்சிகளின் விளைவேயல்லவா?

* * *

உடல் வன்மையும், மனத்திட்பமும் இருந்தாலன்றி உள்ளத்தில் ஊக்கம் பிறக்காது; முயற்சி எழாது. உடல் வன்மையைக் காட்டிலும் மக்களுக்கு இன்றியமையாதது மனோபலம். அந்த மனோபலம் ஒன்றினாலேயே மனிதன் பல அபாரமான காரியங்களைச் சாதித்து விடுகிறான். மனோவலி குறைந்தவன் தக்கமுயற்சியுடன் ஒரு தொழிலில் இறங்கு வானானாலும், இடை நடுவே வரும் எதிர்பாரா இன்னல்களைக்கண்டு களைத்துப்போவான். எத்தகைய இடையூறுக்கும் அஞ்சாது போராடி எதிர்த்து நிற்க வல்லவனே ஊக்கம் முயற்சிகளாகிய வாட்களால் பயன்பெறுவான்.

* * *

தனது சிறுமை வறுமைகளை நோக்கி 'இது என்னாலாகாது' என வாளாயிருத்தல் மனித வாழ்க்கைக்குப் பொருந்தாது. வெற்றியும் தோல்வியும் வாழ்க்கைக்கு இயல்பு என உணர்ந்து யாரும் ஊக்கத்துடன் சன்மார்க்கத்தில் முயலவேண்டும். எத்தகைய அருங்காரியமும் முயற்சித்திறத்தால் அல்லது தற்காலப்பயனால் சித்தியாவதுமுண்டு. அல்லாமலும் 'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன், மெய்வருந்தக் கூலி தரும்' என்ற பொய்யா மொழிப்படி முயற்சியின்

அளவுக்கேற்றவாறு - உழைப்பின் வன்மைக்கேற்றவாறு பயன் கிடைக்காமற் போகாது.

* * *

தொடக்கத்தில் துன்பந்தருவது முடிவில் இன்பந்தருவதுண்டு. இது பழமை தொட்டுவந்த பலருடைய அனுபவம். ஆதலால் ஆரம்பத்தில் வரும் ஆபத்துகளுக்கஞ்சி எந்த நல்ல காரியத்தையும் இடையில் விட்டுவிடுவதால் முடிவில் எய்தப்பெறும் இன்பம் கிட்டாமற் போகிறது. மேலும் எந்த நற்கருமம் ஒருவன் செயப்புகும் அளவில், அல்லது செய்துகொண்டிருக்கையில் பற்பல இன்னல்களை விளைவிப்பது சர்வசாதாரணம். அத்தகைய சீரிய செய்கைகளில் ஊக்கம் குன்றாது, முயற்சி தளராது இருந்தோமாயின், முடிவில் நாம் வெற்றி யின்பம் பெறுவது திண்ணம்.

* * *

பெருமை மிகுந்த ஒரு செயல் ஒரு தனி மனிதன் ஆற்றலுக்கு மேற்பட்டதாயின், அவன் திறமைமிக்கோர் பலரின் கூட்டுறவால் அதைச் செய்து முடிக்கலாம். எவ்வளவு பெரிய காரியமும் பலருடைய முயற்சியில் மிக எளிதில் கைகூடும். இதையே கூட்டுமுயற்சி யென்பது. இக்கூட்டு முயற்சியால் உலகில் பலர் அனேக அரும் பெரும் நன்மைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

* * *

முயன்ற காரியத்தில் தோல்வி நேரிட்டால் உள்ளச்சோர்வு கூடாது. மேலும் மேலும் முயற்சி செய்து வெற்றி பெறவேண்டும். வெற்றி பெற்றபின்பே உழைப்புக்கேற்ற ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சியைத்தான் 'விடா முயற்சி' என்பார்கள். இதைச் சிலர் 'பகீரதப் பிரயத்தினம்' என்று கூட சொல்லுவதுண்டு. பகீரதப் பிரயத்தினத்தால் நாம் சாதிக்கும் காரியமே நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரவல்லது. அதுவே நமக்குப் புகழைத் தேடிக் கொடுப்பதும்.

* *

'திருவருள் உண்டானால் தானே நடக்கும்' எனச்சிலர் சொல்லித்திரிவதுண்டு. இது சோம்பேரிகளின் மனப்பான்மைக்குப் பொருந்துமேயன்றி ஒரு ஆண்மகனது உள்ளக்கிடக்கைக்கு ஏற்புடைத்தன்று. ஊக்கம் அற்றவனுக்கு, முயற்சி குன்றியவனுக்கு, உழைப்பு விட்டவனுக்கு எவ்வாறு இறைவன் இன்னருள் பாலிப்பார்? படைப்பிலேயே மனிதனுக்கு வேண்டிய அவயவாதிகளை அமைத்துக் கொடுத்து உலகவாழ்வில் தன் முயற்சியால் இன்பம் பெறட்டும் என்று அவர் விட்ட பின்பும், அவன் ஊக்கங்குன்றி உறங்குவானாயின், அதனால் விளையும் நஷ்டம் அவனுக்கே யல்லாது அவருக்கேது? ஆதலால் நண்பர்களே! எந்த நல்ல செயலிலும் ஊக்கமும் முயற்சியும் கொண்டு உழைத்து நாம் சீரிய வாழ்க்கை நடத்திவருவோமாக.

# மா றா ட் ட ங் க ள்

[எஸ். ஏ. சாமி]

நீங்கள் தெரு வழியே போகின்றீர்கள். பின்னால் கை தட்டும் சப்தம் கேட்கின்றது. திரும்பிப் பார்க்கின்றீர்கள். வெகு தூரத்திலுள்ள ஒருவர் உங்களை வரும்படி கை அசைக்கின்றார். நீங்கள் அவரிடம் போகின்றீர்கள். அவர் உங்களைப் பார்த்து விட்டு, 'ஓ ஹோ நீங்களா! எனது சிநேகிதர் ஒருவரென்று நினைத்தேன். ஆள்மாறாட்டமாய் விட்டது. மன்னிக்கவேண்டும்,' என்கிறார். உங்களால் அவரை என்ன செய்ய முடியும்.

ரயிலில் நீங்கள் பெட்டியுடன் பிரயாணம் செய்கின்றீர்கள். கேப்மாறி கருப்பண்ணன் பெரிய கனவான்போல் தடபுடலாய் ஆடைகளை அணிந்து கொண்டு கையில் பெட்டியுடன் உங்கள் பக்கம் வந்து தனது பெட்டியை உங்கள் பெட்டிற்குப் பக்கத்தில் வைத்து விட்டு உட்கார்ந்து கொள்கின்றான். ஆசாமி இன்னானென்று அறியாத நீங்களும் அவனைப் பெரிய மனிதன் என்று எண்ணிக்கொண்டு அவனிடம் வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றீர்கள். வண்டி ஓர் ஸ்டேஷனை யடைந்ததும் கருப்பண்ணன் உங்களது பெட்டியை எடுத்துக் கொண்டு போக ஆரம்பிக்கின்றான். இதைத் தற்செயலாய் கவனித்த நீங்கள், 'அது என் பெட்டி சார்,' என்று அவனிடம் சொல்லுகின்றீர்கள். அவனும், 'இல்லை சார்! பெட்டி மாறாட்டமாய் விட்டது,' என்று சொல்லிக்கொண்டே அதை வைத்து விட்டு நழுவி விடுகின்றான்.



கருப்பண்ணனை ஆபத்தினின்று காத்தது மாறாட்டம் என்ற ஓர் வார்த்தையல்லவா!

குஞ்சு மைனர் தனது மனைவியுடன் சினிமாவிற்குச் செல்லுகிருர். டிக்கட் வாங்கிக் கொண்டு தியேட்டரில் தனது மனைவியுடன் உட்கார்ந்து கொள்ளுகிருர். சினிமா ஆரம்பமாகிறது. கதா நாயகன் கதாநாயகியை விட்டுப் பிரியும் சீன்; பிரியும்போது ஓர் முத்தத்துடன் பிரிகிருன். தனது காதலியோடு வீற்றிருக்கும் குஞ்சுமைனர் சும்மா இருப்பாரா? திடீரென்று தனது மனைவியைக் கட்டியணைத்து முத்தமிட்டு விடுகிருர். உடனே, 'யாரடா அது? அயோக்கியப் பயலே! யாரையடா முத்தமிட்டாய்,' என்று அதட்டிக் கொண்டே ஒருவர் எழுந்திருக்கிருர். உடனே தியேட்டர் பூராவும் கலவரமாய்



மின்சார விளக்குகள் போடப்படுகிறது. அப்பொழுதுதான் குஞ்சு மைனருக்கு விஷயம் புரிகிறது. இடப்பக்கத்தில் தனது மனைவியிருக்கிருள் என்பதை மறந்து வலப்பக்கத்திலிருந்த ஓர் கிழவரை முத்தமிட்டு விட்டார். பக்க மாருட்டந்தான்; வேறென்றுமில்லே.

கடைக்குச் சாமான் வாங்க நீங்கள் செல்கின்றீர்கள். செட்டியாரிடம் அரைப்படி கடலைப் பருப்புப் போடும்படிக் கேட்கின்றீர்கள். செட்டியார் அவசரமவசரமாய் ஒரு கால்படி பருப்பை அளந்து போடப் போகிருர். இதைக் கண்ட நீங்கள் உடனே, 'என்ன செட்டியார்! படிரொம்பவும் சின்னதாயிருக்கிறதே! கால் படியா?' என்று கேட்கின்றீர்கள். உடனே அப்பொழுதுதான் அதைக் கவனித்தவர் போல, செட்டியார், 'அவசரத்தில் படி மாருட்டமாய் விட்டது. சாமி,' என்று சொல்லிக்கொண்டே வேறு படியை எடுக்கின்ருர். அது அவர் குற்றமாகுமா?

சுப்பு தீக்ஷதர் அவசரமாய் வீட்டுக்கு வந்து திண்ணையில் உட்காருகிருர். 'அடியே! பொடித்தடையைக் கொண்டுவா,' என்று தனது மனைவியிடம் கூறுகிருர். அந்தம்மாளும் பொடித்தடையைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து விட்டு உள்ளே போய் விடுகிருள். தீக்ஷதர் அதை மூக்கிற்குள் உறிஞ்சினதுதான் தாமதம். வந்துவிட்டதையா இருமலும் தும்மலும்; அவரது கண்களினின்று கண்ணீர் ஆருகப் பெருகுகின்றது. இங்குமங்கும் ஓடுகிருர், கத்துகிருர், அழுகிருர், சத்தம்போடுகிருர். வீட்டிற்குள் திடுதிடுவென்ருேடி தண்ணீரால் கண்ணீரையும் மூக்கையும் கழுவுகிருர். விஷயம் என்னவென்ருல் தீக்ஷதரின் மனைவி மூக்குப்பொடியுடன் கொஞ்சம் மிள

காப்பி பொடியைக் கை மாறாட்டமாகச் சேர்த்து விட்டது தான். எல்லாம் பொடிதானே சார்?

பரீக்ஷை எழுதும் படியான ஹால். சந்திரனும் அவன் பக்கத்தில் சுந்தரனும் உட்கார்ந்துகொண்டு பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதிக் கொண்டிருக்கின்றனர். உபாத்தியாயர் ஓர் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சந்திரனது விடைப்பத்திர மொன்று கீழே நழுவி விழுகிறது. அதேசமயத்தில் சுந்தரனது விடைப் பத்திர மொன்றும் கீழே விழுகிறது. சந்தரனது கரங்கள் சுந்தரனது விடைப் பத்திரத்திற்கும் சுந்தரனது கரங்கள் சந்திரனது விடைப் பத்திரத்திற்கும் நாடுகின்றன. உபாத்தியாயர் இதைப் பார்த்துவிடுகிறார். பூனையைப்போல் மெதுவாக வந்து சுந்தரனைப் பிடித்துக் கொள்ளுகிறார். பிறகு சுந்தரனது விடைப் பத்திரங்களையும், சந்திரனது விடைப் பத்திரங்களையும் சோதிக்கின்றார். ஒருவரது பத்திரம் மற்றொருவரிட மிருப்பதைக் கண்டு இருவரையும் ஹாலுக்கு வெளியே அனுப்பி விடுகின்றார். பாவம். விடைப் பத்திரங்கள் மாறாட்டமாய் விட்டால் இவ்வளவு பெரிய தண்டனை விதிப்பதா?



குவெட்டா பூகம்பத்தில் பிரபலகோலியாட்ட நிபுணரான மிஸ்டர் லங்கோடு இறந்து விட்டார் என்று பத்திரிகைக்கு நிருபர்செய்தி அனுப்புகிறார். ஆனால் அந்த நபர், தான் லாகூரில் கோலியாட்ட டோர்ன்மென்ட் ஒன்றில் கலந்து விளையாடுவதாகவும், தான் குவெட்டா பூகம்பத்தில் இறக்கவில்லையென்றும், ஆதலால் பத்திரிகையில் பிரசுரித்திருக்கும் செய்திதவறானதாகு மென்றும் அந் இப் பத்திரிக்கைக்கு எழுதுகிறார். நிருபரை இதைப்பற்றிக் கேட்டால், பெயர் மாறாட்டமாய் விட்டது, சார்,' என்று பல்லிளிக்கின்றார்.

இப்படியே இன்னும் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால், எது பேர் வழிக்கு புத்தி மாறாட்டம் போலிருக்கிறது,' என்று என்னைப்பற்றி பெருமையாக எண்ணுவீர்கள். அதனால் இதை இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

# மூக்குத்தூளின் மகத்துவம்

[ஆம்பூர் எம். வாசு]

'நேசா! மூக்குத் தூளின் கெடுதலை நீ அறியாயோ! நான் சொல்கிறேன், தயவுசெய்து கேள். மூக்குத்தூளை உபயோகிப்பதால் அது மூளையிலுள்ள சத்தை யெல்லாம் போக்கடித்து விடுகிறது. ஆதலால் 1 வருடத்தில் இறக்கிறவர்கள் 6 மாதத்திற்குள் இறந்து விடுகின்றனர். ஆகவே தயவு செய்து நீ அதை உபயோகப் படுத்தவேண்டாம்! என்ன நான் சொல்வது புரிகின்றதா' என்றான் எனது நண்பன் சங்கரன்.

'அன்ப! மூக்குத்தூளின் மகத்துவத்தை நீ அறிவையாகில், அதை உபயோகிக்க ஆவல் கொள்வாய்; ஆனால் நீ அதை உபயோகிக் காமலிருப்பதால் இவ்விதம் பகர்கின்றனை. ஆதலால் நான் சொல் வதை கேள்' என்றேன் நான்.

'நண்பனே! நாகரிகமுள்ள இக்காலத்தில் சிஜர் சிகரெட் என்ன! எலிபென்ட் சிகரெட் என்ன! இவையனைத்தும் விட்டு கேவலம் பொடி....'

'நேசா! நீ சொல்வது ஒரு விதத்தில் உண்மையே யெனினும் கேவலமான பொடிக்கிருக்கும் மேன்மை வேறெதற்குதான் உளது. பெரிய மனுஷர் பலரிருக்கும் கூட்டத்தில் புகைவஸ்துக்களை உபயோ கிப்பது சிரமம். ஆனல் பொடியை உபயோகிப்பதோ சுலபம். மேலும் அதுதான் பெரிய மனுஷத்தன்மை! மற்றும் நமது முன் னோர் மூக்குத்தூளை உபயோகித்து வந்தபோது திடகாத்திர தேக முடையவர்களாக விருந்தனர். ஆனல் தற்போது நம்மவர்கள் மூக் குத்தூளை அசட்டை செய்வதால் தேகவலிமை குன்றி, சுயேச்சை யின்றி மற்றவர்களுக்கு அடிமை....'

'நேசா! பொடிபோடுவதின் தீங்கினை நீ அறிவையாகில், அதை உபயோகியாமலிருப்பாய். ஆனல் நீயோ அவை யனைத்தும் உணரா மல் பேசுகின்றனை. உனதிஷ்டம்! ஆனல் கடைசியாக நான் புகல்வது யாதெனில் 'பொடியை உபயோகிக்க வேண்டாம், அங்ஙனம் உபயோகிப்பாயாகில் நினது மூளையை அது கெடுத்துவிடு மென்பதே!'

இச்சம்பவம் நடந்து ஐந்து வருடங்கள் சென்றன. ஒருநாள் எனது நண்பன் பொடிக்கடையில் வீற்றிருந்தான். அதேசமயம் நான் மூக்குத்தூள் வாங்க அங்குற்றேன். நான் மூக்குத்தூள் வாங்குவதைக் கண்ட அவன் என்னுடனே 'நேசா! இந்த மூக்குத்தூளை வீணாக வாங்கவேண்டாம். மைசூர் பிரபால் கம்பெனி மூக்குத்தூள தான் ஒஸ்தி. ஆகவே அதைதான் வாங்கு, மற்றவை யவ்வளவு நல்லவை யல்ல' என்ருன்.

'என்ன சங்கரா! மூக்குத்தூளைப்பற்றி சில நாளைக்கு முன்னர் நீ இழிவாக உரைத்தனே! தற்போதோ மூக்குத்தூளைப்பற்றி உயர்த்திக் கூறுகின்றனையே! என்ன! நீயும் மூக்குத்தூளை உபயோகின்றனையா?' என்று ஆச்சரியத்துடன் வினவினேன்.

'ஆம்! சில நாளைக்குமுன்னர் நான் மூக்குத்தூளைப்பற்றி இழிவாகப் பேசினது உண்மையே! ஆனல் நான் அவ்வமயம் மூக்குத்தூளின் மேன்மையை நன்குணரவில்லை; தற்போதோ மூக்குத்தூளை உபயோகிக்கிறேன். அதனுல்...' என்ருன்.

'அஃதெங்ஙனம் அதன் முழு விபரத்தையும் தெரியப்படுத்துவாய்'

'தெரியப்படுத்துவதென்ன ? பொடி போடுவதுதான் புருஷர் கழகு! இதை நோக்கித்தான், 'பொடி போடுவது புருஷலக்ஷணம்...' என்று முதுமொழி உசாவுகின்றது' என புகன்ருன.

நேயர்களே! 'மூக்குத்தூளை உபயோகிக்கவேண்டாம், உபயோகித்தால் மூளை கெட்டுப்போகும்' என்றெனக்கு நற்புத்திபுகட்டிய அவனே தற்போது மூக்குத்தூளை உபயோகிக்கின்ருன் என்ருல் மூக்குத்தூளின் மகிமைதான் என்னே!

* * *

கிருஷ்ணன் எனது பள்ளித் தோழன். அவன்தான் எங்களுடைய வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் முதல்தரமான மார்க்கு வாங்குபவன். முதல் மார்க்கென்ருல் குறைவாக நினைக்க வேண்டாம், 80 மார்கிற்கு மேலேயே என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனல் கணக்கில் மாத்திரம் 100க்கு 100 மார்க்கு வாங்குவதுதான் அவனது வழக்கம். இதற்கு காரணம் அவன் சிறுவயதிலிருந்தே, அதாவது 5வது வகுப்பு வாசித்துக் கொண்டிருக்கும் பொழுதே மூக்குத்தூளை உபயோகித்துக் கொண்டிருந்தான். அதனுல்தான் அவன் அவ்வளவு மார்க்கு வாங்கிக் கொண்டிருந்தானென்று நான் ஐயமறச் சொல்வேன். அஃதெங்ஙனமென்று நீங்கள் ஐயுறலாம். சொல்கிறேன் கேளுங்கள்.

நாங்களெல்லோரும் எவ்விதத்திலோ கரை கடந்து B. A. வகுப்பிற்குச் சென்றுவிட்டோம். அங்கும் அவன் எல்லா பாடங்களிலும் முதல்மார்க்கே வாங்கிக் கொண்டிருந்தான்.

எல்லோரும் பரீச்சைஷயில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தோம். அன்று எங்களுக்கு கணக்குப் பரிச்சைஷ. வெகுநேரம் வரையிலும் கிருஷ்ணன் மாத்திரம் கணக்குச் செய்யாமல் விடைபேப்பரும் கையுமாக தனதிருப்பிடத்தில் வீற்றிருந்தான். வெகு நேரம் வரையிலும் அவனை யாரும் கவனிக்கவில்லை. மணியோ பச்ரீக்ஷ முடிவதற்கு சுமார் 30 நிமிஷங்கள் தானிருந்தன. அவ்வமயம் பரீச்சையெழுதுவதை கவனிக்க வேண்டி பிரின்ஸ்பால் அங்குற்றுர். அவர் கிருஷ்ணன் கணக்குச் செய்யாமல் தனதிருப்பிடத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். உடனே அவர் அவனிடம் சென்று 'கிருஷ்ணு! கணக்குச் செய்யாமல் என் வெறுமனே உட்கார்ந்திருக்கிறுய். நீ மெட்ரிகுலேஷனிலிருந்து, இது வரையிலும் கணக்கில் 100க்கு 100 மார்க்கு வாங்கிக்கொண்டிருந்தா யென்று கேள்விப்பட்டுள்ளேன் ஆனுல் தற்போதோ......' என்ருர்.

'சார் தயவுசெய்து கோபிக்கவேண்டாம்...என்ருன் கிருஷ்ணன்.

'என்ன! என்ன! கோபிக்கக்கூடிய விஷயம்' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

'சார் ஒண்ணுமில்லை நான் சிறுவயதிலிருந்து பொடி உபயோகிப்பது வழக்கம். அதைப் போட்டால்தான் வேலை சுறுசுறுப்பாக நடந்தேறும். இன்றேல் கடுகத்தனை வேலையும் என்னுல் நடைபெருது! இன்று பொடி போடாமல் இங்குற்றேன் அதனுல்........' என்ருன். பிரின்ஸ்பால் அங்ஙனமே அவனுக்கு ஒரு சிட்டிகை பொடி வாங்கித்தந்தார்.

கிருஷ்ணன் அந்த சிட்டிகை பொடியைப் போட்டுக்கொண்டதின் பின்னர் சுறுசுறுப்பாக கணக்குச்செய்யத் தொடங்கினுன். 30 நிமிடத்தில் ஒரு கணக்கைத்தவிர ஏனையயாவற்றையும் செய்து முடித்தான். என்னே! ஓர் சிட்டிகைப்பொடியின் மகத்துவம்! நேயர்களே! இதனுல் மூக்குத்தூளின் மேன்மை நன்கு புலப்படுகிறதல்லவா!

தற்காலத்தில் மூக்குத்தூளை உபயோகிக்கிறவர்கள்தான் பெரிய பெரிய மேதாவிகளாகவும், பட்டங்கள் பெற்ற சீமான்களாகவுமிருக்கின்றனர்.

ஜாதி சமயங்களை நோக்குமிடத்தும் பறையன் ஆண்டி முதல் பார்ப்பனர் வரையிலும் மூக்குத்தூளையே உபயோகிக்கின்றனர். மற்றும் தொழில் முறையை நோக்குமிடத்து கிராமமுனிசிப் முதல் ஜட்ஜ் ஈருக மூக்குத்தூளையே உபயோகிக்கின்றன ரென்ருல் மூக்குத்தூளின் மருத்துவத்தை வர்ணித்துரைக்கவும் வேண்டுமோ!

நேயர்களே! இனியாவது மூக்குத்தூளின் மேன்மையை நன்கு அறிந்துகொண்டீர்களா, இல்லையா? என்பதை 'தமிழரசின்' மூலம் எனக்கு உடனே செய்தி யனுப்புங்கள்.

---

# தங்கக் கம்பி

[S. A. N. R]

'ஹே முருகா! இவ்வபலையின் மேல் உனக்கு கருணையில்லாமல் போனதேன்? என்ன அபராதம் செய்தேன் யானுனக்கு? பெண் என்றால் பேயுமிரங்கும் என்பார்களே. வள்ளி மணாளா! தீன தயாளா! கருணையில்லையா? காப்பதுன் கடனன்றோ! ஹே கருணாமூர்த்தி! யானென்ன செய்வேன்? அபலை நானே! நானே! என்று எத்தனை நாட்கள் இறந்து விட்டன. உன்னருள் இல்லையேல் எனக்கு இவ்வுலகில் புண்ணியமில்லை - இன்பமில்லை - வாழ்வில்லை. எப்பொழு தருள்புரிவாய்? அடியாளின் பர்த்தாவின் அடிகளில் குற்றேவல் புரியும்படி எனக்குப் பாக்கியத்தை கொடுப்பாயா? ப்ராணேசரின் கல்மனதை கடுதில் கரைக்க மாட்டாயா! ஹே கந்தா! உன திராறுகாதிலே உன்னையே அபயமென்று அண்டின இவ்வடிமையின் சொற்கள் எறவில்லையா? பழியைச் சுமக்க முடியவில்லை. ஹே பரந்தாமா! இப்பாரில் நானோ உயிர்ப்பிணம். இங்கே வருவீரா! ப்ராணபதே! உம்முடைய மனம் கல்லினும் கடியதோ? கரைக்க முடியாததோ? தங்கள் மனைவி இன்ன இடத்தில் இருக்கிறாளென்ற அபகீர்த்தியை எப்பொழுது நீக்குவீர், எனதிருளைப் போக்குவீர்' என்று புலம்பிய வண்ணம் கண்டோர் மனதை கவரத்தக்க கட்டழகு வாய்ந்த காரிகையொருவள் காணப்பட்டாள் 'கனக விலாச'த்தின் மேன்மாடியில். புலம்பிய காரிகை கன்னஞ்சேரியின் கர்ணம் கனகசபையின் புத்திரி கனகாம்புஜம். பால்மணம் மாறாப் பருவத்தில் இவளுக்கு விவாகம் நடைபெற்றது. கூறின பிரகாரம் வரதக்ஷிணை கொடுக்க இயலாத கொடுமையில் நடந்த கோலமிது. பதினைந்து வருடங்கள் பறந்து சென்றன. தன் கணவன் ஓர் சீமானின் புத்திரனென்று மாத்திரம் தெரியும். அதற்குமேல் அவளுக்கு ஒன்றுமே தெரியாது.

* * *

நீலவானில் பூர்ண சந்திரன் தனதமுதக் குளிரொளியை அளவிலாது அளித்து மக்களை மகிழச் செய்தான். ஸ்டேஷனில் ஓரே கூட்டம்.

புகைத் தொடரும், 'லொடலொடா' சப்தமில்லாமல் மிகவும் அடக்கம் ஒடுக்கமாக வந்து அசைவற்று நின்றது. முதல் வகுப்பு

வண்டியிலிருந்து ஜில்லாக் கலெக்டர் ராஜன் ஐ. சி. எஸ். இறங்கினார். சிரிப்பையே அறியாத கனகாம்புஜத்தின் முகம் இன்றுதான் சிரிப்பை அறிந்ததுபோலும். மாதர்கள் சங்கத்தின் சார்பாக



காரியதரிசி கனகாம்புஜம் அவரை வரவேற்று மாலையிட்டாள். காரிகைகளின் மனதை கொள்ளை கொள்ளக்கூடிய அவ்வாலிபக் கலெக்டர் இவள் மனதைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. மறுநாட் காலை 'மாதர் சங்கம்' புதிய கட்டடமும் ராஜனால் திறந்து வைக்கப் பட்டது.

* * *

அவ்வழகிய புதிய கட்டிடத்திலே ராஜனுக்கு ஒரு அறை கொடுக்கப்பட்டிருந்தது. டிங்! டிங்!! என்று மணியும் பதினொன்றடித்தது தூக்கமே பிடிக்கவில்லை. சிறிது நேரம் பயித்தியம் பிடித்தவனைப்போல அங்குமிங்கும் அலைந்தார் அவ்வறையினுள் ராஜன். பிறகு ஏதோ ஒருவித தீர்மானத்திற்கு வந்தவர்போல காணப் பட்டார். அவரை அறியாமலே கனகாம்புஜத்தின்மேல் அவருக்கு ஓர்வித பிரியம் உண்டானது. எவ்வளவோ முயன்றும் தனது மனதை அடக்க முடியவில்லை. அடுத்த அறை காரியதரிசியினுடையது. அங்கு போகலாமா வேண்டாமா என்பதே வெகுநேரம் யோசனை. கடைசியில் போகலாம் என்பதே வெற்றிகொண்டது.

ஆனல் அடுத்த அறையில் கனகாம்புஜம் காணப்படவில்லை. எதிரி யுள்ள பூங்காயில் அவ்வனிதை நாற்காலியில் சாய்ந்துகொண்டு நீலவானிலே தோன்றிய சந்திரனைக் கவனித்துக் கொண்டிருப்பதை கண்ட ராஜன் இருதயம் படபடவென்று அடிக்க கனகாம் புஜத்தினருகில் சென்று 'மிஸ். கனகாம்புஜம்! உங்களுடன் பேசத் துணிந்ததற்கு மன்னிக்கவும்' என்றார்.

அதைக்கேட்ட கனகாம்புஜம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க வில்லை. அவனின் வரவை நோக்கியே அங்கிருந்தனள் போலும். 'வாருங்கள்! உட்காருங்கள்' என்றாள் வெகு மரியாதையுடன் தனது கந்தர்வ குரலில். அவ்வினிய குரல் அவர் மனதை கொள்ளை கொண்டது என்பது நிச்சயம்.

'நான் யாரென்று தங்களுக்குத் தெரியுமென் நினைக்கிறேன்' என்றார்.

'தெரியும்' என்றாள்.

'நான் பிராமணன்' என்றார்.

'நல்ல உயர்ந்த குலம். ஆனல் தாழ்ந்த குணம்' என்றாள். இச் சொற்கள் அவரை தூக்கி வாரிப்போட்டது (நிலத்திலல்ல). அவளது முகத்தை உற்று நோக்கினர்.

'தங்கக் கம்பி' என்றாள்.

'இருக்கலாம். சுலபமாக உருக்கலாம்' என்றான். அது கிடக்கட் டும் நான் தங்களிடம் சொல்லவேண்டிய முக்கியமான.......' என்றார்.

'ஒரு பெண்ணிடம் சொல்ல வேண்டியதென்றால் நியாயமான தாகவும் தர்மமானதாகவும் இருக்கும் பட்சத்தில் ஆக்ஷேபனையில்லை' என்றாள்.

'ஒரு சமயம் எனது வேண்டுகோள் குற்றமாகக் கருதப்பட் டால் தாங்கள் என்னை மன்னித்து மறந்துவிட வேண்டும்' என்றார்.

'தங்களுக்குக் கல்யாணம்..........' என்றார்.

'நடந்து விட்டது. என்றாலும் நடைப்பிணம்தான் நான்'

'நான் மகாப் பாவி. என்ன அபசாரம் செய்தேனோ இச் ஜென் மத்தில் இக்கட்டை ஈடேற வழியில்லை. அபலையானேன். அனாதை யானேன். என் கணவர் மனது கருங்கல்லினும் கடிது! கடிது' என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

'குணமணியே! நீ செய்த அபசாரம்தானென்ன'என்றார் ராஜன்.

'வரதக்ஷணை என்னும் பெரும்பேய்தான் என்னைத் துயரக் கடலில் இப்பத்து பதினைந்து வருடங்களாக மீளாதபடி ஆழத்தில் அழுத்தி வைத்திருக்கிறது' என்றாள்.

அவளது மதிபோன்ற முகம் வாடியதை கண்ட ராஜன் மனம் உருகிவிட்டது. மதியும் மறைந்தான்.

'உங்கள் பதியின் பெயர்' என்றார்.

அறியாப் பருவத்தில் எங்களுக்கு மணம் முடித்து வைத்தார்கள். கனக்கண்டதுபோல் கூட ஞாபகமில்லை. ஆனால் இதோ இந்தப் படம் எங்கள் கலியாண காலத்தில் எடுக்கப்பட்டது' என்று கூறி அவரிடம் ஓர் புகைப்படத்தைக் கொடுத்தாள்.

அவ்வளவுதான். ராஜனது முகம் இருண்டது. அவரது கரங்கள் அவரை அறியாமலே அவளது கரங்களைப்பற்றின. 'கனகம்! என் கண்ணே!' என்றார். அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. இறந்தவைகள் அவர் கண்முன் இப்பொழுது தோன்றின. பெரும் மாறுதலைக் கண்ட கனகாம்புஜம் 'என் பொருட்டு இவ்வுலகில் பரிதாபபபட்டவர் நீங்களொருவர்தான்' என்றாள். 'கனகம்! இப் பாவியைத் தவிர வேறு யார் பரிதாபப்பட வேண்டும். அபசாரத்தை செய்து துயரக்கடலில் ஆழ்த்திய என்னை, உன் பதியை நீ மன்னிப் பாயா' என்று கண்களில் நீர் சுரக்கக்கூறி அவளது முகத்தை நோக்கினார். கண்ணீர்விட்ட வண்ணமாக அவளும் 'பாவம் உங்கள் மேலென்ன குற்றம். தங்கள் பெற்றோர்கள் செய்த குற்றத்திற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்' என்றாள்.

பிரிந்தவர்கள் கூடினால் பேசவும் வேண்டுமோ ?

'எங்கே உனது தந்தை. நான் அவரைக் கண்டு மன்னிப்பு பெற வேண்டும்' என்றார்.

'எனது பெற்றோர்களும் தங்கள் பெற்றோர்களும் ஒரே இடத்தில் தானிருக்கிறார்க'ளென்று கூறி கண்ணீர் விட்டாள்.

'ஆனால் எனது சகோதரனை பார்க்க விருப்பமா' என்றாள்.



'விருப்பமில்லாமலிருக்குமா. எங்கே அவர்' என்றார்.

'வெங்கடேசா!' என்றாள். அடுத்த நிமிடம் வெங்கடேசனும் அங்கே வந்து 'குட் நைட்' (Good Night) ஸார்! என்று கூறி கைகட்டி நின்றான். தனது கேம்ப் க்ளார்க்கு (Camp Clerk) வெங்கடேசனுக்கும் இவளுக்கும் எப்படி பரிச்சயம் என்று சந்தேகித்து நின்றார். 'தங்களை வெங்கடேசன் இனிமேல் எப்பொழுதும்போல் ஸார் என்று

அழைப்பதா அல்லது அத்தான் என்று அழைப்பதா' என்றாள். வெங்கடேசனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வெங்கடேசன் தனது மைத்துனன் என்பதை அறியவே பிரமித்துவிட்டான். அப்படியே ஓர் குழந்தையைப்போல் அவனைக் கட்டிக் கொண்டார்.

'வெங்கடேசா! உனது அபார புத்தியையும் தந்திரத்தையும் மெச்சுகிறேன். எவ்வளவு சாமர்த்தியமாக காரியத்தை முடித்து விட்டாய். எல்லாம் உனது ஏற்பாடல்லவா' என்றார்.

'மறுக்க மாட்டேன் ஸார்—அத்தான்' என்றான்.

ராஜனது நிலபுலன்களை வெங்கடேசனே கவனித்து வர வேண்டியதாயிற்று. இப்பொழுது கனகவிலாசத்தை பார்த்தீர்களானால் திவான்பகதூர் வெங்கடேசன். பி. ஏ. என்ற ஒரு போர்டை காணலாம்.

---

## வட ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

நாளது டிசம்பர் மாதம் 23ம் தேதி வட ஆற்காடு திருவண்ணமலையில் நடைபெறப்போகும் டிஸ்டிரிக்ட் போர்டு தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் சார்பாக ஒருவரை அபேட்சகாக நிற்கவைத்தால் கட்டாயம் ஜெயம் கிடைக்கும் என்பது வெள்ளிடை மலை. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியில் முதன்மையாய் இருந்து வேலைசெய்த கனம் முத்துக்குமாரசாமி முதலியார் என்பவருக்கு பாதகமாய் நாமினேஷன் கொடுக்கப்பட்டதால் ஷை முதலியாரைச்சார்ந்த மெம்பர்கள் ஆத்திரமடைந்து காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு தங்கள் ஓட்டுரிமையை அளித்து ஆதரிக்க முன்வந்துள்ளார்கள். ஆகையால் காங்கிரஸ் தலைவர்களாகிய கனம் சத்தியமூர்த்தி யவர்களும், கனம் பக்தவச்சல முதலியார் அவர்களும் காங்கிரஸ் சார்பில் ஒருவரை நிறுத்தி அவருக்கு மற்ற காங்கிரஸ்காரர்களை ஓட்டுப்போடச் செய்யின் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்கும் பலரும் காங்கிரஸ் சார்பில் ஓட்டு செய்வார்கள் என்பது உறுதியாகும்.

---

## காங்கிரஸ் பொன்விழா.

டிசம்பர் மாதம் 28ந் தேதி காங்கிரஸ் பொன்விழா நடைபெறப் போகிறது. இவ்விழா, இதுவரை தேச நன்மைக்காக காங்கிரஸ் செய்துள்ள தொண்டை மக்கட்கு நினைப்பை யூட்டுவதுடன் தேச மக்களும் அதன் சேவைக்காக தங்கள் நன்றியைக்காட்ட, ஓர் அரிய சந்தர்ப்பமாகும். எனவே நாடெங்கும் வெகு விமரிசையாய் இவ்விழா கொண்டாடப்படும் என்பதற்கு ஐயமில்லை. காங்கிரஸ் தனது சேவையை இனியும் விடாது மிகவும் தீவிரமாய் செய்து புகழ்பெறுவதாக. அது நீடூழிவாழ்க.

# சோதனை

[அ. மாணிக்கம்]

தமிழரசு வாங்குவது லக்ஷ்மி. ஆனல் பத்திரிகை வாங்கிய அன்றே வெளியேறிவிடும். அவள் சிநேகிதிகள் எல்லோரும் படித்துவிட்டு, மேலட்டை கிழிந்து உள்ளேயும் இரண்டு காகிதங்கள் கிழியக்கூடிய தருணத்தில் லக்ஷ்மியின் கைக்குவந்து சேரும். (புஸ்தகமே இல்லை'யென ஒரே அடி அடிக்காமல் வந்து சேர்ந்து விடுகிறதே! அதுவரையில் பரவாயில்லை அல்லவா?)

ஒரு நாள் சுமார் 4 மணி இருக்கும். வீட்டின் மேல்மாடியில் அன்றுதான் தன் கைக்கு வந்து சேர்ந்த தமிழரசை வாசித்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி. வீட்டில் அவளைத் தவிர யாரும் இல்லை. இருப்பது புருஷனும் மனைவியுமாக ஒரு ஜோடி. புருஷர் வெளியே போயிருக்கிறா. குழந்தையா குட்டியா? அதுதான் இல்லை வெளிக் கதவு தாளிடாமல் சாத்தப்பட்டிருந்தது.



அச்சமயம் 25 வயது என மதிக்கத் தக்க ஓர் வாலிபன் லக்ஷ்மியின் எதிரில் தோன்றினன்.

அப்பேர்வழியின் தலையில் தலைப்பாகை. கண்ணுக்குக் கண்ணாடி. மீசைக்கு வாசலைன் போட்டிருந்தார் போலிருக்கிறது. வெகு ஜோராக 'கிண்' என்று நேராக இருந்தது. உடம்பில் பனியன், பனியன்மேல் ஷர்ட். ஷர்ட்மேல் கோட். கோட்டின் ஜேபியில் ஓர் கைக்குட்டை தெரிந்தும் தெரியாமல் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. மல்வேஷ்டி. ஒவ்வொரு கையிலும் 3 வைர மோதிரங்கள்

விதம் பளபளாய்த்துக் கொண்டிருந்தன. கையில் வாக்கிங் ஸ்டிக் (Walking Stick)

இவ்வளவு நோக்குடனிருந்த பேர்வழி தோன்றினதும், லக்ஷிமி பக்கத்தில் இருந்த அறையில் ஓடிப் புகுந்து கொண்டாள்.

'யாரைப் பார்க்க வந்தீர்' என உள்ளிருந்தவண்ணம் கேட்டாள் லக்ஷிமி.

'ஏன்? உன்னைத்தான் பார்க்க வந்தேன்' என வினவினன் வாலிபன்.

என்னைப் பார்க்க வேண்டுமானல் என் புருஷர் இருக்கும் பொழுது வாருங்கள், பேசிக்கொள்ளலாம்' என்ருள்.

'உன் புருடரும் வரவேண்டாம். யாரும் வர வேண்டாம். நாமிருவரும் பேசலாம் வா கண்ணே' என்ருன் அக் குறும்பன்.

கண்ணே என்னும் சொல்லைக் கேட்டதும் லக்ஷிமி ஸ்தம்பித்து விட்டாள். அவளுக்குச் சரியான கோபம்.

'ஓய் யாரையா நீர்? கண்ணும் மூக்காம். புத்தி கெட்டவரே வெளியே செல்லும்'

'அடி என் ரத்தினமே, கிளியே. இப்படிவா வெளியே. என் வைர மோதிரங்களைப் பார் எப்படி இருக்கிறது.'

'என்ன? நான் தாசி என்று நினைத்துக் கொண்டீரா? இது தாசிகள் வசிக்கும் வீதி என்று நினைத்துக்கொண்டீரா? தாசிகளைப் பார்க்க எங்கோ யிருந்து வந்திருக்கிறீர் போலிருக்கிறது. நான் தாசி அல்ல. சரியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு செல்லும்'

'நான் ஏமாந்துபோய் வரவில்லை. சரியான இடத்திற்கே வந்திருக்கிறேன். நான் ஏழையல்ல. பணக்காரன். வெளியே வந்து பேசு. ஏன் உள்ளே போய்விட்டாய்'

'வேசியாசை கொண்ட காமாந்தகனே! பேசாமல் வெளியேறி விடும். சீக்கிரத்தில் என் புருடர் வந்து சேருவார். உமது நல்ல உடம்போடு திரும்பிச் செல்லவேண்டும் என்ற ஆசை இருக்குமானல் உடனே திரும்பும். அதைப்பற்றி அக்கரையில்லையானல் பேசாமல் இரும்'

'என் கண்ணே, கிளியே, வைரமே, கோமேதகமே! ஐயோ வா இப்படி. ஏன் என்னை இப்படி பயமுறுத்துகிருய். என்னைப் பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா? நான் எவ்வளவு அழகுள்ளவன் என்பதைப் பார்க்காமல் ஓடி அறையில் புகுந்து தப்பர்த்தம் செய்துகொண்டு இப்படியெல்லாம் ஏன் வீணுகப் பேசுகிருய்?'

'தாங்கள் மன்மதன்தான். யார் இல்லையென்று சொன்னது. தாங்களாகப் போகப் பிரியப்படுகிறீரா? அல்லது நானாகத் தூக்க வேண்டுமா?'

'என் கண்ணே! என் உள்ளம் பதறுதடீ! என் வைர மோதிரங்களையெல்லாம் உனக்கு அர்ப்பணம் செய்கிறேன். வா இப்படி'

லக்ஷிமியால் பொறுக்க முடியவில்லை. கொண்டாள் கோபம். எடுத்தாள் வெண்சாமரத்தை. ஓங்கினாள் கையை. ஓடினாள் அப்பேர்வழியை நோக்கி. 'லக்ஷிமி நில்' என்றான் அவன்.

'என்ன என் பெயர் கூடத் தெரிகிறதே இவருக்கு' என பிரமித்து அப்படியே நின்று விட்டாள்.

அவ்வாலிபன் தலைப்பாகையை எடுத்தெறிந்தான். மூக்குக் கண்ணாடியை எடுத்தான் மீசையை இரண்டு கைகளாலும் பிடுங்கி எறிந்தான். நிற்பது யார்?

லக்ஷிமி தன் சொந்த புருஷனைக் கண்டாள். வெண்சாமரத்தை ஒருபக்கம் வீசி எறிந்தாள்.

'ஐயோ என்னை இப்படியும் சோதிக்கவேண்டுமா?' எனக் கூறிய வண்ணம் தன்புருஷன் பாதங்களில் விழ்ந்தாள்.

'எழுந்திரு' என அவளை எழுப்பி உட்காரவைத்து விட்டு பக்கத்து வீட்டிற்கு ஓடினான்.

சங்கரஞ் செட்டியார் தொந்தியை நீவிக் கொடுத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார்.



'ஏனையா! என் மனைவியை எப்படி ஐயா வேசி என்று கூறினீர். இப்படியும் உமக்குபுத்தி...'

'ஓய் உமக்குப் பைத்தியம் கியித்தியம் ஏதாவது பிடித்து விட்டதா? யாரையா உமது மனைவியை வேசி என்று சொன்னது? 'என் சொந்தக்காரன் ராமசாமி இறந்து விட்டான். அவன் மனைவி லக்ஷிமி வேசி வேலையில் புகுந்து விட்டாள். எனச் சொல்லுவதற்காக 'லக்ஷிமியும் வேசி வேலையில் புகுந்து விட்டாள்' என ஆரம்பித்தேன். அதற்குள் நீர் எழுந்து போய்விட்டீர். நீர் தப்பர்த்தம் செய்துகொண்டு எனக்கு புத்தில்லையா என்கிறீர்' என்றார். அப்பொழுது வாலிபன் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

---

# அது ஒரு பிழைக்கும் வழிதான்

[பசுபதியப்பன்]

கலியாணமாகிப் பதினைந்து வருடங்களாகியும் காமாக்ஷிக்கு ஒரு குழந்தையாவது பிறக்கவில்லை. ‘புத்திர சந்தானம் உண்டாகி விட்டது.’ ‘பிள்ளை இல்லை என்ற கவலை இனி வேண்டாம்’ ‘புத் என்னும் நரகத்தின் பயம் ஒழிந்தது!’ ‘ஆண் மலடு சொன்னாலும் சொல்லலாகும் அப்பனே, பெண் மலடு யாருமில்லை’ என்று இவ்வாறு பலவித விளம்பரத் தலைப்புகளைக் கொண்ட மருந்துகள், மந்திரீக இயந்திரங்கள் ஒன்றும் பலனளிக்கவில்லை. இராமேசுவரத்தில் செய்த ஸர்ப்பதோஷ பரிகாரமும் நாகப்பிரதிஷ்டையும் வீணாயின. இன்னும் பலபேர் சொன்ன ஜப தப விரதங்களும், மூர்த்தி தலதீர்த்த விசேடங்களும் பொருள் நஷ்டத்தையும் உடல் கஷ்டத்தையுந்தான் விளைவித்தன.

இனி இன்னதுதான் செய்வதென்று காமாக்ஷிக்கு விளங்கவில்லை. பிள்ளையில்லை என்ற ஏக்கம் அல்லும் பகலும் அவளைவாட்ட, சரியான ஊணுறக்கமுமின்றி உடல் இளைத்தாள். அவள் கணவன் அரங்கநாதனுக்கோ அதைப் பற்றி சிறிதும் கவலையில்லை. ஆயினும் மனைவியின் மனத்திற்கு ஆறுதலளிக்கும் வண்ணம், பிள்ளைப் பேற்றின் விஷயத்தில் அவள் விரும்பியதையெல்லாம் செய்து வந்தான். இடையிலேயே அவன், ‘காமாக்ஷி’ நீ ஏன் இவ்வாறு பிள்ளைப்பித்து கொண்டு அலைகிறாய்? உலகத்தில் தற்காலம் நிறைந்துள்ள வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார நெருக்கடியும், பிள்ளைப் பேற்றைத் தடுப்பதற்குரிய வழியைக் கண்டு பிடிக்கும் துறையில் அறிவாளிகளை அமிழ்த்திக் கொண்டிருக்கிறதே? நாமும் காலத்திற்குத் தகுந்த எண்ணங் கொள்ளவேண்டாமா?’ என்று சொல்லி அவளைச் சிறிது தேற்றமுயல்வான். ஆனால் காமாக்ஷியின் மனோபாவத்திற்கு இப்புத்துணர்ச்சி உடன்பாடானதன்று.

ஒரு நாள் பக்கத்துவீட்டு சுவர்னத்தம்மாள் காமாக்ஷி வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது அரங்கநாதன் வீட்டிலில்லை. ஆகையால் சாவதானமாக இருவரும் சல்லாபிக்கலானார்கள்.

சுவர்னத்தம்மாள்:— ‘காமாக்ஷி! உன்னைப் பார்க்குந்தோறும் எனக்குப் பரிதாபம் அதிகரிக்கின்றது. உனக்கு இப்பொழுது வயது முப்பத்திரண்டுக்கு மேல் இருக்குமே! சகல சம்பத்தும் நிறைந்திருந்தும் ஒரு குழந்தையாவது இல்லாமற் போயிற்றே!’

காமாக்ஷி:—‘என் தலை எழுத்து அவ்வண்ணமிருக்கிறது. பிறந்த உடனே கழுத்தைத் திருகித் குப்பைத்தொட்டியில் எறியும் வியபசாரிகளுக்கும், கருப்

பத்திலேயே கொன்றுவிடும் கன்னெஞ்சக் கருமிகளுக்கும் கணக்கற்ற குழந்தைகள் பிறக்கின்றன.'

சுவர்னத்தம்மாள்:—'எத்தனை பிச்சைக்காரிகள் வளர்த்துக் காப்பாற்ற வகையின்றிப் பச்சைக்குழந்தைகளைத் தடத்தில் எறிந்து செல்கிறார்கள். தங்களுக்கே கால் வயிறு கஞ்சிக்குங்கூட வழியில்லாதிருக்க, எத்தனை ஏழைப் பெண்கள் வருடந்தோறும் தவறாது குழந்தைகளைப் பெற்றுப் பரிதவிக்கிறார்கள்?'

காமாக்ஷி:—'அவர்களுக்கெல்லாம் வேண்டாம்; வேண்டாமென்றாலும் கணக்கற்ற குழந்தைகளைப் பிறக்கும்படி செய்கிறானே இப்பாழும் கடவுள். எனக்கு ஒரு குழந்தையாவது வேண்டுமென்று எவ்வளவு தவம் செய்கிறேன்! என் குறையைக் கேட்கும் கடவுளில்லையே!' என்று சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

அச்சமயத்தில் பிச்சைக்காரிக் கோலத்துடன் சுமார் நாற்பது வயதுள்ள ஒரு பெண் காமாக்ஷி வீட்டு வாசலில் நுழைந்து, களைப்பினால் அஸ், உஸ் என்று சொல்லிக் கீழே உட்கார்ந்துகொண்டு, 'தாயே! நான் நெடுந்தூரத்திலிருந்து நடந்து வருகிறேன். சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று. பசி காதடைக்கிறது. ஏதாவது பழைய திருந்தால் கொடுங்கள். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு' என்றாள்.



உடனே காமாக்ஷி அவளுக்குச் சிறிது ஆகாரங் கொடுத்து அவளது களைப்பை அகற்றி, 'நீயார்? எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்டாள்.

வந்தவள்:—'தாயே! நான் ஒரு பரம ஏழை. வெகுதூரத்திலிருந்து கால் நடையாய் வருகிறேன். ஒரு வைத்தியன் உண்டு. பரம புருஷன்! சாக்ஷாத் கடவுள் என்றே அவனைச் சொல்லவேண்டும். அவனைத் தேடி வருகிறேனம்மா!'

காமாக்ஷி:— 'அவ்வைத்தியன் இருப்பது எங்கே?'

வந்தவள்:—அவனுக்கு நிலையாக இருக்கக்கூடிய ஓர் ஊர் கிடையாது. ஒரு வேளைக்குமேல் அவன் ஓர் ஊரில் தங்கமாட்டான். வரப்பிரசாதம் பெற்றவனம்மா அவன், என்ன அருமையான மருந்துகள் அவனிட மிருக்கின்றன! அவனது மருந்துகளில் பலவற்றின் குணத்தை நேரில் பார்த்திருக்கிறேன். அவை ஒவ்வொன்றும் தேவாமிர்தம் போன்றவை'

காமாக்ஷி:— 'நீ ஏன் அவனைத் தேடுகிறாய்?'

வந்தவள்:—'என் பெற்றோர்களிருவரும் ஏழுவருடகாலமாய்ப் பக்வாதத்தால் கிடந்த இடம் விட்டு நகராமலிருந்தார்கள். சென்ற இரண்டு வருடங்களுக்கு முன் அவ்வைத்தியன் எங்கள் ஊருக்குவந்தவன், அவர்களுக்கு ஒரே ஒருவேளை மருந்து கொடுத்தான், மறுநாளே அவர்கள் எழுந்து நடந்தார்கள். ஆனால் அவன் அப்பொழுது சொன்னதாவது, 'இரண்டு வருடங்கழித்து மீண்டும் இவ்வியாதி வரலாம். அப்பொழுது ஒரு தாம் இம்மருந்து கொடுத்துவிட்டால் சாகும்வரை சுகமாயிருப்பார்கள்.' என்றான்.

'அதன்படியே கைகால்கள் முடங்கிப் பத்து நாட்களாயின. இந்தப் பத்து நாட்களாக நான் அநேகம் ஊர்களைச் சுற்றி வருகிறேன். விசாரித்த இடமெல்லாம் 'இங்கிருந்தான், அங்கிருந்தான்;' என்கிறார்களே தவிர, எனக்கு இன்னும் அவன் கிடைக்கவில்லை. நான் வந்த வழியில் அவனைப் போற்றாத ஊர் இல்லை. எத்தனை பிறவிக் குருடர்கள் கண் வெளிச்சம் பெற்றதாகச் சொல்லுகிறார்கள்! இருபது, முப்பது வருடகாலமாகக் குழந்தை இல்லாத எத்தனைபெண்கள் அவன் மருந்தால் குழந்தைபெற்றதாகச் சொல்லுகிறார்கள்!'

காமாக்ஷி:— 'ஆ, ஆ! அப்படியா? அவன் பெயர் என்ன?'

வந்தவள்:— 'அவன் பெயர் எனக்குத் தெரியாது?'

காமாக்ஷி:— 'பின், அவனைப்பற்றி எவ்வாறு விசாரிப்பாய்?'

வந்தவள்:— 'ஓ! அதில் ஒன்றும் கஷ்டமில்லை. அவனுடைய நடை உடை தோற்றமெல்லாம் எப்பொழுதும் ஒரே மாதிரியிருக்கும். அவ்வடையாளங்களைச் சொல்லி விசாரித்தால் எளிதில் அறிந்து கொள்ளலாம்!'

காமாக்ஷி:— 'அவனுக்கு வயதென்ன இருக்கும்?'

வந்தவள்:— 'வயது மட்டுமென்ன? எல்லா வற்றையுமே சொல்லுகிறேன், கேளுங்கள். வயது சுமார் நாற்பத்தைந்து இருக்கும். கிட்டத்தட்ட ஆறடி உயரம் வளர்ந்த சரீரமுடையவன். உயரத்திற்குத் தகுந்த பருமனில்லாததால் அதிக உயரமாகக் காணப்படுவான். எப்பொழுதும் அவன் தலையை விட்டு நீங்காத உருமால் அவனுடைய உயரத்தை இன்னும் கொஞ்சம் அதிகரித்துக் காட்டும். நிறம் கருப்பு. கருத்து நீண்ட அடர்த்தியான தாடிமயிர் ஓரடி தூரம் மார்பில் தொங்கும். அடர்த்தியான நீண்ட புருவங்கள் அவன் சிறிய கண்களை அநேகமாய் மறைத்துக் கொண்டிருப்பனபோல் தோன்றும். முதுகில் எப்பொழுதும் ஒரு சிறு மூட்டையைத் துணியால் வளைத்துக் கட்டிக் கொண்டிருப்பான்.

'இவ்விதத்தோற்ற முடையவனது செய்கையும் விநோதமாயிருக்கும். தனக்கு வைத்தியம் தெரியும் என்று ஒருவரிடமும் சொல்லிக் கொள்ள மாட்டான். தெரிந்தவர்கள் விரும்பினால் மருந்து கொடுப்பான். இஷ்டப்பட்டுக் கொடுத்ததை வாங்கிக் கொள்வான். தித்தி என்று சொல்லப்படும் ஒருவித தோல் கருவியை ஊதிக்கொண்டு வீடுகள் தோறும் சென்று பிச்சை வாங்கிச் சாப்பிட்டுக் கொள்வான். அவன் பெருமையை என்னென்று சொல்வது! இவ்வாறான தோற்றமும் செய்கையு முடையவனை நீங்கள் கண்டதுண்டா?'

காமாக்ஷி:— 'இல்லே; இல்லே; அவனைக் காணவேண்டுமென்று நான் மிகுதியும் விரும்புகிறேன். நீ கண்டாலும் அவனை இங்கு அழைத்துவா.'

வந்தவள்:— 'அதற்கென்ன, அப்படியே ஆகட்டும். இன்னும் சில வீடு களில் விசாரித்து விட்டுப் பக்கத்தூருக்குப் போகிறேன்.' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

---

சுவர்னத்தம்மாளும் விடைபெற்றுத் தன் வீடு சென்ருள். காமாக்ஷிக்கு வைத்தியனுடைய உருவம் எங்கு பார்த்தாலும் நிற்பதுபோல் தோன்றிற்று.

மறுநாட் சாயந்திரம் நான்குமணிக்குக் காமாக்ஷி தன்வீட்டில் தனியா யிருந்தாள். அப்பொழுது தித்தி ஊதும் சப்தம் கேட்டது. உடனே வெளி யே வந்து பார்க்க, தன்மனதில் பதிந்திருந்த வைத்தியன் உருவம் நேரில் தன் வீடு நோக்கி வருவதைக் கண்டு களிகூர்ந்தாள். அவனை உள்ளே வரச் சொல்லிக் கூடத்தில் உட்காரவைத்து 'உனக்கு வைத்தியம் தெரியுமா?' என்று கேட்டாள்.

வைத்தியன்:— 'ஏதோ கொஞ்சம் தெரியும். பைத்தியம் பிடித்துப் பத்து வருடமாய் வீட்டில் பூட்டிவைக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணுக்குச் சென்ற வாரம், கருங்குழியில், மருந்து கொடுத்தேன். ஒரே வேளையில் புத்தி சரியாய் விட்டது. இப்பொழுது நன்ருயிருக்கிருள். இன்னும் எவ்வளவோ......'

காமாக்ஷி:— 'அதிருக்கட்டும்; உன்னிடம் கருத்தரிப்பதற்கு மருந் துண்டோ?'

வைத்தியன்:— 'இருபது இருபத்தைந்து வருடங்களாகக் குழந்தை யில்லாதிருந்தவர்கள், நூற்றுக்கணக்கான டெண்கள் என்மருந்தால் குழந்தை களைப் பெற்றிருக்கிருர்கள். என் மருந்தைச் சாப்பிட்டுத் தன் ஐம்பதாவது வயதில் குழந்தை பெற்றெடுத்த மல்லிராஜபுரம் ஜமீன்தார் மனைவியை உல கம் அறியுமே!'

காமாக்ஷி:— 'ரொம்ப சந்தோஷம். எனக்குக் கலியாணமாகிப் பதி னைந்து வருடங்களாயின. இதுவரை குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை, ஏதா வது மருந்துகொடு பார்ப்போம்' என்ருள்.

உடனே அவன் தன்முதுகில் இருந்த மூட்டையை அவிழ்த்தான். பச்சை சிவப்பு மஞ்சள் முதலிய பலவர்ணங்கள் பொருந்திய மருந்துகள் நிறைந்த பல சிறிய சீசாக்களை எடுத்து வைத்து, பச்சைநிறம் வாய்ந்த ஒரு மருந்தில் ஒரு சிட்டிகை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, பனைவெல் லம் ஒன்று கொண்டுவரச் சொல்லி அதைத் தட்டிப் பொடிசெய்து, ஒரு பாத் திரத்தில் இட்டு அதில் தன் மருந்தைப் போட்டுக் கலக்கி, திரிகடிப் பிரமா ணம் கையில் எடுத்துக் கொண்டு, 'அம்மா! இதோ, இம்மருந்தை ஒரு முறை என் கையினின்றும் வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள். இதே பிரமாணம் தினந்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் முப்பதுநாட்களுக்குச் சாப் பிட்டு வாருங்கள். இன்றைக்கே கருத்தரிக்கவும் கூடும். ஆயினும் முப்பது நாளும் விடாமல் சாப்பிட்டால், கருட்பைக் கோளாறுகள் முற்றிலும் நீங்கிச் சுகப்படுவீர்கள்' என்று சொல்லி மருந்தைக் கொடுத்தான்.

காமாக்ஷியும் மிகுந்த விஸ்வாஸத்துடன் அம்மருந்தை வாங்கி உட்கொண்டு விட்டு, 'இதற்கு என்னப்பா தரவேண்டும்?' என்றாள்.

வைத்தியன்:— 'என்மருந்தக்கு இவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்கும் வழக்கமே கிடையாது. இஷ்டப்பட்டுக் கொடுப்பதை நான் மறுப்பது மில்லை,' என்றான்.

இவ்வாறு அவன் ஆசையற்ற விதமாகப் பேசினதைக் கேட்ட காமாக்ஷிக்கு அவன் மீது அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது. உடனே ஐந்து ரூபாயை கொண்டு வந்து அவனுக்குக்கொடுத்து, 'மறுமுறை இவ்வழியாக நீ வரும்போது என் எஜமானிடம் சொல்லி உனக்கு நிறையச் சன்மானம் செய்கிறேன். போய் வா' என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

மருந்து சாப்பிட்ட எட்டாம் நாள் காமாக்ஷி வீட்டிற்கு விலக்கானாள். 'மருந்து உடனே பிடிக்கவில்லை போலிருக்கிறது. அவன் சொன்ன வண்ணம் ஒரு மாதம் பூர்த்தியாகச் சாப்பிட்டுப் பார்க்கலாம்' என்று மனதைத் தேற்றிக் கொண்டு, மருந்தின்மீது வைத்த நம்பிக்கையை விடாது சாப்பிட்டாள். மருந்தும் முடிந்தது. அடுத்த மாதமும் கிரமமாக விலக்கானாள். இப்பொழுது காமாக்ஷிக்குக் கொஞ்சம் கலக்கந்தான். எனினும் மருந்தின் மீதிருந்த நம்பிக்கை முற்றிலும் மாறவில்லை. தன் விதியை நொந்து கொண்டாள்.

கொஞ்சநாட்களுக்குப் பிறகு ஒருநாள் காமாக்ஷி இச்சங்கதியைத் தன் புருஷனிடம் மெதுவாகக் கூறினாள். அதைக் கேட்ட அரங்கநாதன், 'அட பைத்தியமே! உன் அறிவு இப்படியும் செல்லுமா? உனக்கேன் இவ்வாறு குழந்தைப் பைத்தியம் பிடித்து வருகிறது? உனக்கு ஏதோ நல்லவேளை! அம்மருந்து கெடுதலொன்றும் செய்யவில்லை. போகட்டும்; இனிமேல் என்னையறியாமல் நீ யாதொன்றும் செய்து கொள்ளாதே. உலகத்தில் பலவித ஏமாற்றங்களுண்டு. முதலில் வந்து உன்னிடம் பேசின பெண்ணும் அவ்வைத்தியனுடைய விளம்பர ஏஜண்டாகத் தானிருப்பாள். இதெல்லாம் பிழைக்கு வழியன்றி வேறொன்றுமல்ல,' என்றான்.

காமாக்ஷி பதிலொன்றும் சொல்ல வகையறியாது உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனியைப் போல் விழித்தாள்.

இச் சம்பவம் நடந்த ஐந்தாறு மாதங்கட்குப் பிறகு காமாக்ஷியும் அரங்கநாதனும் கோயம்புத்தூருக்குச் சென்றார்கள். ரயில் விட்டிறங்கி ஸ்டேஷனுக்கு வெளியில் வந்ததும் ஒரு மரத்தடியில் தனக்கு மருந்து கொடுத்த

வைத்தியனும் அவனைப்பற்றிப் புகழ்ந்து பேசிய பெண்ணும், ஆளுக்கொரு குழந்தையை மடியில் வைத்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதை காமாக்ஷி கண்டாள்.



காமாக்ஷி :— 'அத்தான்! இவர்களைப் பார்த்தீர்களா? எனக்கு மருந்துகொடுத்த வைத்தியனும் அவனைத் தேடி வந்த பெண்ணும் இவர்கள் தான். இருவரும் புருஷன் பெண்சாதி போலவன்றோ தோன்றுகிறது!'

அரங்கநாதன்:—'இன்னும் உனக்குச் சந்தேகமா?'

காமாக்ஷி:—'சரி சரி, நீங்கள் சொல்லிய வண்ணம் அவர்களுக்கு அது ஒரு பிழைக்கும் வழிதான்!'



# கைலாயத்தின் அந்தப் புரத்தில் ஒரு காக்ஷி

(துறைமங்கலம் சிவப்பிரகாசர் கண்டது)

[ஏ. பி]



மகேஸ்வரன்:—உமா! இதென்ன விபரீதமான கோலம்! நினது மாசற்ற மலர் முகம் இவ்வாறு வாட்டமடைந்த காரணம் என்ன? அழகிய அதரங்களில் சதா தவழ்ந்து கிடக்கும் புன்சிரிப்பு எங்கே? ஒளி பொருந்திய கண்கள் ஏன் இவ்வாறு கலங்கி நிற்கின்றன? இத்தோற்றத்தைக் காண என்னால் சகிக்க முடியவில்லை.

உமை:—அவ்வாறு மாறுபடான கோலத்தை என்னிடம் காண்கின்றீர்களா? உண்மையில் அது தங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றதா?

மகேஸ்வரன்:—எனதன்பே! நினது வார்த்தையுங்கூட விபரீதமாயன்றோ இருக்கிறது? உனக்கு நேர்ந்த குறை யென்ன? ஒளியாமற் சொல்வாய், என் கண்ணே!

உமை:—நீங்கள் ஒளித்தீர்களே! உங்களுக்கும் உண்மையுண்டோ? (அழுகிறாள்)

மகேஸ்வரன்:—கண்ணே! ஏன் இவ்வாறு கண்ணீர் விட்டுக் கதறுகின்றனை? உனக்குத் தீங்கிழைத்தார் யாவர்?

உமை:—தங்களைத் தவிர எனக்குத் தீங்கிழைக்கக் கருதுவாருமுண்டோ?

மகேஸ்வரன்:—இது என்ன ஆச்சரியம்! யான் உனக்கிழைத்த தீங்கென்ன?

உமை:—அதோ, தங்கள் சடாமகுடத்தில் தோன்றும் இளம் பெண் யாவள்?

மகேஸ்வரன்:—ஏ, பேதாய்! சடாமகுடத்தில் பெண்ணாவது மண்ணாவது! குளிர்ந்த நீரன்றோ அவ்விடம் நிறைந்திருக்கின்றது!

உமை:—அதோ! அழகிய முகமொன்று தோன்றுகிறதே!

மகேஸ்வான்:—அது முகமன்று. நீரில் செழித்து வளர்ந்துள்ள தாமரைமலர் அல்லவா அது?

உமை:—பொய்! பொய்பேசுகின்றீர்கள். கருத்தகண்களும், செவிகளும், வாயும், நீரில் எங்ஙனம் உண்டாயின?

மகேஸ்வான்:—(நகைப்புடன்) கண்களாகத் தோன்றுவன கருங்குவளை மலர்கள். காதுகளாகத் தோன்றுவன வள்ளைக்கொடி. செங்குமுத மன்றோ வாய் போல் தோன்றுவது?

உமை:—அடியாளை இவ்வாறு ஏமாற்ற முயலலாமா? அதோ, கொங்கைகள் இரண்டும் நீண்ட கூந்தலும் தோன்றுகின்றனவே!

மகேஸ்வான்:—நீர்க் குமிழிகள் நினக்குக் கொங்கைகள் போல் தோன்றுகின்றன. நீண்ட பாசி கூந்தலைப்போல் தோன்றுகிறதேயொழிய வேறன்று. உனக்குள்ள சந்தேகத்தை ஒழிப்பாய்! ஒழிப்பாய்! பெண்ணே!

கங்கை:—(தன்னை விளித்ததாக நினைத்து) ஸ்வாமி! அடியாளை விளித்த காரண மென்ன?

உமை:—ஆ! கள்வன்! கள்வன்! வஞ்சகக்கள்வனே!

மகேஸ்வான்:—(நாணத்தால் தலைகுனிந்து)

உமா! என் பிழையைப் பொறுப்பாயாக! (என்று சொல்லித் தன் கையை நீட்ட உமை மகிழ்வுற்று, அக்கையை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.)



# சுந்தர கோகிலம்

[பா. ரா. பட்டாபிராமன்]



பௌர்ணமி சந்திரன் முழுமண்டலமிட்டு பொற்றகடுபோல் தன் பொன்னிறக் கிரணங்களை நீலத்திரையில் விரித்தான். இந்நிலாவில், சென்னையில் மௌன்ட்ரோட்டில் இரு பெண் மணிகள் சென்று கொண்டிருந்தனர். அவ்விருவரில் சந்திரமதி என்னும் மூத்தவளுக்கு சுமார் 35 வயதிருக்கலாம். கோகிலாம்பாள் என்னும் இளையவளுக்கு 16 வயதிருக்கும். அம்மின்ன லொளியாள் சுருண்ட குழலும் மதிபோன்ற நுதலும், மைதீட்டிய மான்விழியும், சிவந்த அதரங்களு முடையவள். இவ்விருவரும் 'மதனசுந்தரி' என்னும் பேசும் படத்தைப் பார்த்துவிட்டு பின் வருமாறு பேசிக்கொண்டு தமதில்லம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.



சந்திரமதி:— கோகிலம்! படம் எவ்வாறிருக்கிறது?

கோகிலம்:—அம்மா! மிகவும் அழகாய்த்தானிருக்கிறது. அதில் கதாநாயகனுடைய பாகம் தான் மிகவும் ருசிகரமானது.

சந்திரமதி:—அப்படியா? எனக்கும் அதுதான்! என்ன சாமர்த்தியமாக நடிக்கிறான்.

கோகிலம்:—ஆம் அம்மா! நான் இதுவரையில் கண்டபடங்களில் அவரைப்போல நடித்தவரைக் கண்டதில்லை. எனக்கென்னமோ அவரைக் கண்டதுமுதல் என்மனதில் ஓர் விதமான கிளர்ச்சி எழுகின்றது.' 'ஆமாம், கோகிலம், எனக்கும் மிகவும் ஆச்சரியந்தான்' என்று சொல்லிக்கொண்டே நெ. 15, ஆனந்தபவனம் எனப்பட்டதொரு இல்லத்தின் கதவைத் திறந்தனள் அம்மாது. சற்றுநேரம் கழித்து 'கோகிலம், நேரமாகிவிட்டது. உறங்கப்போ, காலையில் பேசிக் கொள்வோம்' என்று சொல்லி, அவரவர் அறைக்குச் சென்றனர்.

கண்கவர் வனப்புடைய அழகிய அவர்களின் மாளிகையின் பின்புறம் ஓர் தோட்டமிருந்தது. அதில் நறுமணங்கமழும் மல்லிகை, முல்லை, சண்

பகம் முதலிய புஷ்பங்கள் புஷ்பித்து, கண்டோர் கண்ணையும் மனத்தையும் கொள்ளை கொள்ளும். அச்சிங்காரவனத்தில், மா, பலா, கொய்யா முதலான கனிவர்க்கங்களுமுண்டு. விருக்ஷங்களின்மேல் படர்ந்து பின்னிக் கொண்டிருக்கும் புஷ்பக்கொடிகளைப் பார்க்குமிடத்து, அவை காதலர்கள் இவ்விதமாகவே இணைபிரியாது இருக்கவேண்டு மென்பதை மனிதர்களுக்கு அறிவிப்பதுபோ லிருந்தன. அதன் மத்தியிலுள்ள தடாகத்தின் பக்கலில் சலவைப் பளிங்கு மேடை யொன்றிருந்தது. இத்தகைய மேடையின்மீது அன்று மாலை கோகிலாம்பாள் தமிழரசு என்னும் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று தன் கண்களை பின்பக்கமிருந்து யாரோ மூடுவதைக் கண்டாள். கைகளை உதறினாள். பார்த்தாள். சோமசுந்தரம். இவன் சந்திரமதியின் ஒன்று விட்ட அண்ணன். மகன் மகா துர்நடத்தையுடையவன். எப்பொழுதும் சீட்டு விளையாட்டிலும், குதிரைப் பந்தயங்களிலும், மையலகங்களிலும், டுக்கொண்டே இருப்பான். முதலில் சந்திரமதிக்கு இவனிடம் சிறிது அபிப்பிராயமிருந்தது. ஆனால், இவனுடைய அல்பகுணங்களைக் கண்டபின், இவனது செல்வத்தையும் மதிக்காமல், சந்திரமதிக்கு இவனிடம் ஓர் அருவெறுப்புண்டாயிற்று. இவன் கோகிலத்தைத் தவிர வேறெந்த மாதையும் மணம் புரிவதில்லை யென்று சபதம் கொண்டிருந்தான். கோகிலம், இவனைப் பார்த்ததும், 'என்ன சோமசுந்தரம்! பருவமடைந்த பெண்ணை தொடுகின்றனையே' என்று கேட்டாள்.

'என்ன கோகிலம்! இது என்ன விந்தை! சிறிது நாட்களுக்குள் நான் உன்னை மணம் புரிகிறேன். உன் தந்தையிடமிருந்து கூட, கடிதம் வந்திருக்கிறது. அப்படியிருக்க உன்னைத் தொட்டால், ஏதோ சொல்லுகின்றாயே' என்றனன், 'நீ, நினைத்து விட்டால் போதும் போல் இருக்கிறது. கலியாணம் வேண்டாமோ, 'ஆகட்டும்' கலியாணம் செய்கிறேன்' என்று கூறி, சரேலென்று வீட்டிற்குள் போய் விட்டாள்.

மறுநாள் சந்திரமதி சற்றுநேரம் எங்கேயோ சென்றிருந்தனள். இத்தருணத்தைக் கவனித்த சோமசுந்தரம் அங்கு வந்து சேர்ந்தான். கதவைத் தாளிட்டு, 'ஆ, கோகிலம், உன்னை எவ்வளவு அன்பாய் நேசிக்கிறேன்! நேற்று, உன்வார்த்தைகள் இடிமுழக்கம் போன்றல்லவா யிருந்தது? என் அன்பே! ஓர் நற்சொல் கூறு' என்று அவள் கையைப் பிடிக்கச் சென்றான். அவள் ஒன்றும் தோன்றாது நேரே தோட்டத்திற்குச் சென்றனள். அவளைப் பின்பற்றிப் பிடித்து, கற்பைக்குலைக்க முயன்றான். இப்பொழுது அவள் மிகவும் அலறி கூக்குரலிட்டாள். இதை, தற்செயலாக, காம்பவுண்டு சுவரின் ஓரமாக ரோட்டில் சென்றுகொண்டிருந்த, ஓர் திடமான யௌவனவாலிபன் கேட்டு, திடீரென்று எதிர்பாராமல், சுவர் ஏறி குதித்துவந்து சோமசுந்தரத்தைத் தாக்கினன். அவனைத் தள்ளி நன்றாக உதைத்து வெருட்டினன். அவனது கட்டழகையும், பலத்தையும் கண்ட சோமசுந்தரம் ஓடிவிட்டான். கோகிலம், தன்னை ஆபத்தில் காத்ததின் பொருட்டாக அநேக வந்தனங்கள் செலுத்திவிட்டு 'நீங்கள் யார்? எப்படி யிங்குவந்தீர்கள்?' என்று வினவினான். அதற்கு வாலிபன் 'நான், மைலாப்பூரிலுள்ள ராமநாதருடைய குமாரன். என் பெயர் சுந்தரேசன்' என்று தான் அங்கு வரநேர்ந்த விருத்தாந்தத்தையும் கூறிவிட்டு. திடீரென்று சுவர்ஏறி குதித்து சென்றான். சற்றுநேரத்திற்குப் பிறகு சந்திரமதியும் வந்தனள். சங்கதிகளை அறிந்தாள். இனிமேல் சோமசுந்தரத்தைத் தன்

வீட்டில் கூட சேர்ப்பதில்லை என்று கூறினள். 'கோகிலம்! சுந்தரேசன் உனக்கத்தானாக வேண்டும். ராமநாதர் எனக்கு பெரிய அன்னையின்மகன். நீ என் சுந்தரேசனை நான் வரும்வரையில் இருக்கச் சொல்லக்கூடாது? என்றனள்.

மறுநாள் மாலை மணி 6 இருக்கும். அப்பொழுதொரு அழகிய நங்கை பீச்சில் உலாவிக் கொண்டிருந்தனள். அப்பொழுது அவளது பார்வை யாரோ ஒருவர் மீது சென்றது. உடனே அவரை நோக்கி, 'சுந்தரேசரே, நேற்று வெகு அவசரமாக சென்று விட்டீர்களே, நம்மகத்திற்கு நீங்கள் இப்பொழுது வரவேண்டும்' என்றாள். சுந்தரேசனைக் கண்டது முதல் கோகிலத்திற்கு ஓர் விதமான எண்ணமுதித்தது. தவிர மதனசுந்தரியில் நடித்த கதாநாயகன் ஞாபகம் வந்தது. சுந்தரசேன் அக்கதாநாயகனையே, முழுதும் ஒத்திருந்தான். இருவரும் ஒன்று கூடினால் அடையாளம் காண்பது மிசவும் கடினமாயிருக்கும். ஆகையால் கோகிலம் அவனை நேசிக்கத் தொடங்கினாள். சுந்தரேசனோ, சந்திரமதி தனக்கு இன்ன உறவு என்பதும் அறியான். ஏனெனில் சிறு வயதிலிருந்தே அவன் பம்பாயில் தன் மாமனகத்திலிருந்தவன். இப்பொழுது சந்திரமதியும் கோகிலாம்பாளும் இன்ன உறவென்பது தெரிந்ததும் மிகவும் களிப்பெய்தினான். கோகிலாம்பாளின் அழகிய உருவமானது அவனது இருதயத்தில் இணைபிரியாமல் செதுக்கப்பட்டது. இருவரும் காதலராயினர்.

காலைக் கதிரவன் குணதிசையிற் தோன்றினான். காப்பி, பலகாரம் முடிந்ததும், கோகிலாம்பாள் வெளியில் வந்தாள். தபாற்காரன் ஓர் கடிதத்தைக் கொடுத்தான். அது பின்வருமாறிருந்தது.

99, கல்கத்தா,

என் அருமைப் புதல்வியான கோகிலாவை சிலநாள் வைத்துக்கொண்டிருக்க விரும்புகிறேன். உடனே அனுப்பு,

சந்திரசேகரன்.

சந்திரசேகரர் சுந்திரமதியின் புருடர். பத்து வருடங்களுக்கு முன்பு ஏதோ மனஸ்தாபத்தால் அவர் சென்னையை விட்டு கல்கத்தா சென்றனர். அங்கு ஓர் கம்பெனியில் 300 ரூபாய் வருமானமுள்ள ஒரு மேனேஜராக அமர்ந்தார். அடிக்கடி தன் தந்தை, அன்னையையும் மகளையும் விட்டு விட்டு ஏன் கல்கத்தாவிலிருக்கிறாரென்று கோகிலம் கேட்பதுண்டு. ஆனால் சந்திரமதி உண்மையைக் கூறாமல், ஏதோ சில காரணங்களால் அவர் தனியாய் போய் விட்டார் என்று பதில் சொல்லுவாள். இப்பொழுது, இக்கடிதத்தை தன் அன்னைக்குக் காட்டினாள். சந்திரமதிக்கு இஷ்டம் இல்லாவிடினும் சம்மதித்தனள். மறுநாள் கிராண்ட்டிராங்க் எக்ஸ்பிரஸில் ஏறி, கோகிலம் கல்கத்தாவிற்குச் சென்றனள். தன்காதலனான சுந்தரேசனிடம் கூட ஓர் வார்த்தை சொல்லவில்லை.

கோகிலம் சென்றதுமே, சந்திரமதிக்கு மனது ஓர் விதமாக இருந்தது. தான் தன் புருஷனை விட்டு பத்துவருடங்களாக தனியாக இருக்கவேண்டி வந்ததே என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். அத்தருணம் சுந்தரேசன் அங்கு வந்தான். கோகிலம் கல்கத்தாவிற்குப் புறப்பட்டுப் போய்விட்ட விஷயம் அவனுக்கு தெரிந்தது. 'விரைவில் வந்து விடுவாளா?' என்று வினவினன். 'தெரியாது' எனினும் சீக்கிரமாகவே வரும்படி சொல்லியிருக்கிறேன்' என்றனள். பிறகு விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

* * *

கல்கத்தாவில் சந்திரசேகரரோடு அவர் தங்கைப் புதல்வனும் அவர் தமயன் மகளுமிருந்தனர். புதல்வன் பெயர் ராஜசேகரன். மகள் பெயர் விமலா. இவளுக்கு ராஜசேகரனின்மீது காதல் உண்டு. ஆனால் ராஜசேகரனே, இவள் மீது கொண்டிருந்த காதலைஅகற்றி அதை, கோகிலத்தின்மீது செலுத்தினன். கோகிலம் வந்தது முதல், தன் நடவடிக்கைகளில் ஒருவாறு மாறுபட்டிருக்கும் ராஜசேகரன்மீது, விமலாவிற்கு ஓர்வித சந்தேக முண்டாயிற்று. ஆதலால் அவள் கோகிலத்தை வெறுக்கத் தொடங்கினள்.

இஃதிப்படியிருக்க, கல்கத்தாவிற்கு ஒரு நாடகக்கம்பெனி வந்தது. அதில் குலசேகரனென்பவனின் பார்ட் மிகவும் புகழத்தக்கது. மதனசுந்தரியில் கதாநாயகனாக நடிப்பது இக்குலசேகரனே. இதைக் கேள்வியுற்றதும் அன்றிரவு கோகிலம், ராஜசேகரன் முதலியவர்கள் நாடகத்திற்குச் சென்றனர். குலசேகரன் நடிப்பு மிகவும் ஆனந்தமாக இருந்தது. நாடகம் முடிந்ததும் எல்லோரும் வீடு திரும்பினர். மூன்றும் நாள் காலை குலசேகரனுக்கு ஓர் கடிதம் கிடைத்தது.

'நீர், தயவு செய்து என்னை மன்ரோஸ் பார்க்கில் இன்றுமாலை சந்திக்கவும். 1414 போர்ட்காரி விருப்பேன்.'

கோகிலாம்பாள்.

இதைக் கண்டதும் குலசேகரனுக்கு ஏதேதோ எண்ணங்களுதித்தன. எனினும் இவனுக்கு அப்பெண்மணியைப் பார்க்கவேண்டு மென்று ஆவலுண்டாயிற்று. கோகிலாம்பாள் குலசேகரனுக்குக் கடிதம் எழுதினதை மறைவிலிருந்து கவனித்த விமலா ராஜசேகரனிடம் விஷயத்தைத் தெரிவித்தாள். ஒரு வேளை தன் வார்த்தைகளை நம்பாவிட்டால் அன்று தன்கூட, பார்க்கிற்கு வரும்படி சொன்னாள். ராஜசேகரனும் ஒப்புக் கொண்டான்.



மாலை ஜில்லென்று மந்தமாருதம் ரமணீகரமாக வீசிக்கொண்டிருந்தது. ஒரு மேடையின்மீது இருவர் பேசிக்கொண் டிருக்கிறார்கள். ஓர் மரத்திற்குப் பின்னால் இவர்கள் வார்த்தை யாடுவதை இருவர் உற்றுக்கேட்டுக்கொண் டிருக்கின்றனர்.

'குலசேகரரே! நீர், மதனசுந்தரியில் நடிப்பது என் மனதைக் கவருகின்றது"

என்ன செய்வது, ஏதோ ஜீவனம் சம்பாதிக்க வேண்டுமே.'

'நான் உம்மை இங்கு வரவழைத்தது ஏனெனில், உம்மைப் படத்தில் கண்டது முதல், ஓர் வலிய இருதயத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். அதன் பாரத்தை உம்மேல் வைக்கட்டுமா?' என்று மெல்லிய குரலில்

கூறினன். இதைக் கேட்டதுமே, அவ்வாலிபன் திடுக்கிட்டான். ஏதேதோ எண்ணங்களுதித்தன. 'நான் பிறகு உன்னைப்பார்க்கிறேன்' என்று அவளை ஓர் முத்தமிட்டு சரேலென்று கிளம்பிவிட்டான் குலசேகரன். கோகிலமும் காரிலேறிக்கொண்டு தன தில்லம் சென்று விட்டனள். மரத்தின்பின்னிருந்தவர்கள் யாரென்று வாசகர்களே அறியலாம்.

அன்று முதல் ராஜசேகரன் கோகிலத்தை வெறுத்தான். அவளோடு சரியாகக்கூடப் பேசுவதுமில்லை. பொறாமை குடிகொண்டிருந்தது. இரண்டு நாட்களுக்குப்பிறகு கோகிலாம்பாளிற்கு ஒரு கடிதம் வந்தது. அது பின்வருமாறிருந்தது. 'நான் நம்பி வீணில் மோசம் போனேன். உன்னை எவ்வளவு தூரம், வெறுத்து, மனங்கசந்து கொடும் அன்பாக நேசிக்கிறேன் என்பதை இதனுல் அறிந்துகொள். நீ என், ஆபத்துக்குதவ மாட்டாய் என்பது உறுதி. ஆதலால் இன்றே விரைவில் என்காதலை விலக்குகின்றேன். கருமமே புறப்படு. உன்னை கடைசியாக விலக்கிவிட்டேனென்று நம்புகின்றேன்.

இப்படிக்கு

ஆ தி அ ந் த ம்

சுந்தரேசன்.

இக்கடிதத்தைப் படிக்க அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'என்ன, இதை நிச்சமாய் சுந்தரேசர் எழுதினரா? அல்லது அப்படுபாவியாகிய சோமசுந்தரம் எழுதியிருப்பானு? என்ன குலசேகாரும், சுந்தரேசரும் ஒரே மாதிரியா யிருக்கிறார்களே. யான் இருவருக்கும் மத்தியில் காதல் என்னும் கடலில் மூழ்கியிருக்கின்றேனே. எக்கரையை யடைவது! இது என்ன, இம் மாதிரியும் உரை! கடுஞ்சொற்கள்! கருமமாமே! ஐயோ! ஈசா! என் செய்வேன்' என்றெல்லாம் பிதற்றி, மறுபடியும் ஒருதரம் கடிதத்தைப் படித்தாள். ஆதிஅந்தம்-இதில் ஏதோ சூது இருக்கிறதென்று நினைத்தாள். ஒருநிமிடம் யோசனை இருநிமிடங்கள்—உடனே பூரித்தாள்! முதல் வார்த்தையையும் கடைசிவார்த்தைகளையும் படிக்கத்தொடங்கினுள். அது பின்வருவாறுமாறு:— 'நான் உன்னை எவ்வளவுதூரம் அன்பாக நேசிக்கிறேன். நீ என் ஆபத்துக்குதவ இன்றே விரைவில் புறப்படு. உன்னை நம்புகின்றேன்.' என்று கடிதத்தின் உள்ளக் கருத்தைப் புரிந்தாள். சுந்தரேசனின் புத்திக்கூர்மையை மெச்சினுள்.

தற்செயலாக, கோகிலம் அறையில் இல்லாதபொழுது ராஜசேகரன் இக் கடிதத்தைக் கண்டான். அளவிலா களிப்பெய்தினன். ஏன்? 'அவன் இவளை நேசிப்பதில்லை. ஆகையால் தான், மனம்கசந்து இம்மாதிரி கடிதம் எழுதி யிருக்கிறன். நம் காரியம் ஜெயம்' என்று தான் கொண்டிருந்த சந்தேகங்களை நீக்கி மறுபடியும் முன்போல் கோகிலாவை நேசிக்கத் தொடங்கினன்.

மறுநாள் கோகிலத்திற்கு தந்தி யொன்று வந்தது. அது தன் தாயாரான சந்திரமதியினிடத்தினின்று வந்திருந்தது. '19, நர்ஸிங்ஹோம், பம்பாய்-வந்து உடனே பார்-' என்றிருந்தது. கோகிலமும் சந்திரசேகாரும் உடனே புறப்பட்டார்கள். நர்ஸிங்ஹோமில் ஓர் யௌவனவாலிபன் ஒரு கட்டிலின்மீது படுத்திருந்தான். இன்னும் கொஞ்சநேரத்தில் விண்ணுலகம் செல்பவன்

போலிருந்தான். டாக்டர்களும் இனி பிழைப்பது அரிது என்று சொல்லி விட்டனர். 'ஆ, கோகிலம்! கோகிலம்!' என்று புலம்பினன். சந்திரமதியும் கோகிலாம்பாளும் அவனருகே சென்றனர். 'கோகிலம்' என்று அவள் கையை முத்தமிட்டான். 'என்னரிய தங்கையே! யான் போய் வருகிறேன்' என்றான். 'அம்மா! எல்லாம் என்னெதிரிலேயே சொல்லிவிடு' என்று கதறினன். 'கோகிலம்!' என்று கண்ணீர் விட்டாள் சந்திரமதி 'கோகிலம்! இவன் உன் அண்ணன். இவன்தான் குலசேகரன் என்னும் என் அருமையான புதல்வன். மதனசுந்தரியில் பார்த்த கதாநாயகனே இவன். நான் எனக்கு மணமாகு முன் ஓர் யௌவன அழகுள்ள புருடரைக் காதலித்து இவனைப் பெற்றெடுத்தேன். சிலநாட்களுக்குள் அவர் காலமாகிவிடவே, உன் தகப்பனரை மணந்தேன். குலசேகரனைமட்டும், பம்பாயில் (இங்கேயே) என் தங்கை வீட்டில் விட்டிருந்தேன். இவன் சென்னைக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தமையால், உன் தகப்பனர் இவனைப்பற்றிய விஷயங்களைக் கேட்டார். நான் பதிலளிக்காததால் என்னைப் பிரிந்து உடனே கல்கத்தா சென்று விட்டார். இதுதான் அம்மா ரகசியம்' என்று கண்ணீர் தாரைதாரையாக விட்டாள். 'ஆ, அம்மா! கோகிலம்! நான் சென்று வருகிறேன்' என்று குலசேகரன் ஆனந்த சாகரத்தில் அமுந்து முடிவில்லா அயர்வடைந்தான். இதையெல்லாம் பின்னல் உற்றுக் கேட்டிருந்த சந்திரசேகாருக்கும் மனம் இளகிற்று, கண்ணீர் சொரிந்தது. 'உன்னை நான் மன்னித்தேன், சந்திரமதி' என்று கதறினர் இதற்குள், தன் கடிதத்திற்குப் பதில் வாராமையால், சுந்தரேசனும் அங்கு வந்து சேர்ந்தான். இச்சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் கடந்தேறின. ஒருவாரத்திற்குப் பிறகு சுந்தரேசனுக்கும் கோகிலாம்பாளிற்கும், ராஜசேகரனுக்கும் விமலாவிற்கும் திருமணம் நடந்தேறியது. சுந்தரேசனும் கோகிலமும் சென்னையில் ஆனந்த பவனத்திலிருக்கிறார்கள். சோமசுந்தரனே பைத்தியம் பிடித்த நாய்போல் தெருத் தெருவாய்த் திரிந்து கொண்டிருக்கிறான். ஐயோ பாவம்! உங்களில் யார் கையிலாவது அவன் கிடைத்தால் தயவு செய்து அவனை பைத்தியக்கார வைத்திய சாலையில் தாக்கல் செய்து விடுங்கள்!



# ஏ சரசா!

[எ. லக்ஷ்மணன்]



'குழந்தை சரசா எக்நேரமும் உடுத்த பட்டாடைகள் கேட்டு தொந்திரவு செய்கிறது. பட்டுப் பாவடை வேண்டுமாம், ரவிக்கை வேண்டுமாம்!'

'பட்டாடையா? ஆம் குழந்தை கேட்கதான் செய்யும் பணத்துக்கு எங்கே போவது?''

'மற்ற பிள்ளைகள் அணியும்போது குழந்தை சரசாவிற்கும் ஆசை உண்டாகத்தான் செய்யும்?'

'உண்மைதான் ஆனால் பணத்திற்கு எங்கே போவது!'

'கடன்பட்டாவது ஒரு பட்டுப் பாவடை வாங்கி கொடுங்கள். மற்றவைகள் பின்னால் பார்த்து கொள்வோம்'

'கடனுக்கு எங்கே போவது? என்னுடைய சம்பளம் உனக்கு தெரியும். என் செய்வது?' 20 ரூபாயில் என்ன செலவு பண்ணச் சொல்லுகிறாய்? நீ அறியாத கஷ்டமல்ல'

'நான் அறியாமலென்ன? ஆனால் நமது குழந்தை கேட்கும் போது மறுக்க முடியவில்லை' என்று சொல்லிகொண்டே கமலா கண்ணீர் வடித்தாள். தனது மனைவி கண்ணீர் வடித்ததைக்கண்ட இராஜேந்திரும் கண்ணீர் வடித்தார். பழைய எண்ணங்கள் யாவும் அவாது உள்ளத்தில் உதித்தன. சில வருடங்களுக்கு முன் நல்ல நிலைமையிலிருந்த அவாது வைர வியாபாரத்தில் இடிவிழுந்தது. அவாது வைர வியாபாரத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டது. சொத்துக்களை எல்லாம் கடன்காரர்கையில் கொடுத்தார். குடியிருக்க வீட்டையும் இழந்தார். நல்ல நிலைமையிலிருந்தபோது அவருக்கு ஒரே குழந்தையான சரசாவை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தார். ஆனால் இன்று நிலைமை வேறுவிதம். சாப்பாட்டுக்கு வழியின்றி ஒரு கடையில் 20 ரூபாய் சம்பளத்தில் வேலைபார்த்து வந்தார்.

சரசா சிறு குழந்தை. அவளுக்கு தாய் தந்தையர்களின் வறுமையைப்பற்றி என்ன தெரியும்? சிறு குழந்தையாய் இருக்கும் பொழுது அவளது பெற்றோர்கள் கேட்டது எல்லாம் வாங்கி கொடுத்த நினைப்பில் இப்பொழுதும் சரசா ஆசை உள்ளதை

எல்லாம் வாங்கித் தரும்படி கேட்கவே, பெற்ருேர்கள் வாங்கி கொடுக்கப் பணமின்றி திகைத்தார்கள். சாசா பாவம் குழந்தை தானே! பெற்ருேர்கள் தனக்கு வாங்கித்தா இஷ்டமில்லையென்று நினைத்து சில சமயங்களில் கண்ணீர் வடித்துக்கொண்டு இருப்பாள். வேறு சமயங்களில் பள்ளிக்கூடம் போகமாட்டேன், சாப்பிட மாட்டேன், உறங்கமாட்டேன், படிக்க மாட்டேன் என்று இம் மாதிரி பிடிவாதம் செய்துகொண்டு இருப்பாள். இக்கஷ்டத்தால் பெற்ருேர்கள் மிகவும் கஷ்டப்பட்டு செலவைக் குறைத்து அதி லுள்ள மீதியை அவள் கேட்பவைகளில் ஒன்றுக்குப் பாதியாவது வாங்கிக் கொடுத்து செல்வமாக வளர்த்து வந்தார்கள். இப்பழக்கம் சாசாவை இன்னும் அதிகப் பிடிவாதம் செய்யும்படித் தூண்டியது.

ஒருநாள் மாலைநேரம் இராஜேந்திரும் அவர் மனைவியும் வீட்டின் திண்ணையில் தங்களது நிலைமையை குறித்து பேசிக் கொண்டு இருந்தார்கள். அச்சமயம் குழந்தை வெளியே போயிருந் தாள். அடுத்த வீட்டு குழந்தைகளுடன் விளையாடியபின் வீட்டை அடைந்தாள். தாயும் தகப்பனும் பேசிக் கொண்டு இருப்பதைக் கண்டு ஓடோடியும் அவர் கள் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். குழந்தை சாசா தாயின் மடியில் படுத்துக்கொண்டு சிரித் தாள். குழந்தை சாசா வின் சிரிப்பை கண்ட பெற்ருேர்கள் புன்னகை செய்தனர்.



சாசாவுக்கு அப்பொழுது வயது சுமார் 8, 9 இருக்கும். ஆளுக்குத் தகுந்த வசிகாமுடையவள். பார்ப்பவர் மனதை அப்படியே கொள்ளைகொண்டு விடுவாள். அழகிய ஒளி வீசும் கண்கள். பவளவாய். முல்லைபோன்ற பல் வரிசை. அவள் தாயின் மடியின்மேல் படுத்துக்கொண்டு தகப்பனை பார்த்து சிரித் தாள். படுத்துக்கிடந்த அழகைக்கண்ட அவள் தகப்பன் அருமை மகளை தூக்கி யெடுத்தார். முத்தங்கள் பல கொடுத்தார்.

'கண்ணே நீ எங்குப்போய் இருந்தாய்? பள்ளிகூடத்தில் நன்ருக படிக்கிருயா?

'அப்பா நன்ருக படிக்கிறேன், நன்ருக விளையாடுகிறேன். ஆனல் நான் கேட்பதைமட்டும் மறுத்து விடுகிறீர்கள்.

'சரசா நீ என்ன கேட்டாய்' நான் உன்னிடம் என்ன இல்லை யென்று சொன்னேன்?

'அப்பா நேற்றுத்தான் உங்களிடமும் அம்மாவிடமும் பட்டுப் பாவடையும் ரவிக்கையும் கேட்டேன். அதற்கு நீங்கள் இருவரும் என்மீது கோபப் பட்டீர்களல்லவா?

'கண்ணே நம்முடைய நிலைமையை அறிந்தாயா!'

'அடுத்த வீட்டு சரோஜாவைப் பார். தினம் தினம் பட்டாடை பட்டு ரவிக்கை கட்டுகிறாள்.'

'இருக்கட்டும் சரசா, வாங்கித் தருகிறேன்.'

'அப்பா எப்போ வாங்கி தருவாய்?'

'சீக்கிரத்தில் வாங்கித் தருகிறேன்.'

'அப்பா ரொம்ப சந்தோஷம். நாளைக்கு வாங்கி தாணும்' என்று சொல்லிக்கொண்டே தந்தையின் இருகரங்களையும் பிடித்துத் துள்ளி குதித்து விளையாடிக்கொண்டு இருந்தாள். இராஜேந்திரும் கஷ்டத்துடன் கஷ்டமாய் சரசாவுக்குப் பட்டாடையும் பட்டு ரவிக் கையும் வாங்கி கொடுத்தார்.

சரசா ஒரே குழந்தையாதலால் அழகிலும், படிப்பிலும் அதிகரித்து வந்தாள். இத்துடன் ஆங்காரமும் பிடிவாதமும் வளர்ந்து வந்தது. அதை பெற்றோர்கள் கண்டித்துக் கேட்பதுமில்லை. இவ்வாறு வருடங்கள் ஐந்து பறந்தோடின.

ஒருநாள் மாலைநேரம் 5 மணி இருக்கும். வழக்கம்போல் சரசா பக்கத்துவீட்டு பிள்ளைகளுடன் விளையாடப் போயிருந்தாள். திரும்பி வரவில்லை. இதையறிந்த தாய் தந்தையர்களின் நெஞ்சு 'பஹீர்' என்றது. குழந்தையை காணாததினால் அவ்வூர் கோயில், குளம், கிணறு, ஆறு முதலிய இடங்களில் தேடினார்கள். பக்கத்து வீட்டு கமலத்தினிடம் கேட்டார்கள். சரோஜினியிடமும் கேட்டார்கள். பள்ளிக்கூடத்து பிள்ளைகளிடம் கேட்டார்கள். உபாத்தியாயர் இடமும் கேட்டார்கள். குழந்தை போன இடம் தெரியவில்லை. போலீஸ் ஸ்டேஷனிலும் போய் எழுதி வைத்தார்கள். ஒரு நாளா யிற்று. ஒரு வாரமாயிற்று. குழந்தை சரசாவை காணோம். வீட்டில் சரசாவின் பெற்றோர்கள் எந்நேரமும் அழுதகண்ணும் சிந்திய மூக்கு மாய் இருந்தார்கள். மாதம் ஒன்று கடந்தன. இரண்டு கடந்தன. செல்வமிக்க குழந்தை சரசாவை காணோம். தாய் தந்தையர்கள் பலவாறாக எண்ணலானார்கள். 'அவள் உயிருடன் இருக்கிறாளோ அல்லது இறந்தாளோ தெரியவில்லை. உயிருடன் இருப்பாளாகில் குழந்தை சரசா வீடுவந்து சேர்ந்து இருப்பாள்' இவ்வாறு இருவரும் கவலையுடன் இருக்கையில் கமலா எப்பொழுதும் தன் அருமை

மகளை எண்ணி எண்ணி வயிறு எரிந்தாள். வீட்டில் அன்ன ஆகாரம் அருந்துவது கிடையாது. எப்பொழுதும் இதே கவலையால் அவளது தேகம் ஒன்றுக்குப் பாதியானது. முகத்தில் எப்பொழுதும் கவலையே குடிகொண்டு இருந்தது. கடைசியில் அக்கவலையே அவளுக்கு தீராத நோயாயிற்று. அவளது கணவன் தினமும் ஆறுதல் சொல்லி வந்தார். கமலா சதாகாலமும் சாசாவின் எண்ணமாகவே வாடினாள். இராக்காலங்களில் சாசாவைப்பற்றி கனவுகள் கண்டு திடுக்கிட்டு படுக்கையைவிட்டு எழுந்திருந்து பலவிதமாய் புலம்புவதுமுண்டு. சில மாதங்கள் கழியவே கமலாவின் நிலைமை ஆபத்துக்கிடமாய் முடிந்தது. இவ்வாறு இரண்டு நாட்கள் கழியவே இராஜேந்திருக்கு இரண்டு கவலைகள் ஏற்பட்டன. மகளை இழந்த துயரம் ஒருபுறம். மனைவியின் நிலைமை ஒருபுறம். ஆனால் அவர் மிகவும் அன்பாக மனைவியை கவனித்து வந்தார்.

இவ்வாறு இருக்க, கமலா தனது நாயகன் இல்லாத சமயங்களில் பழய எண்ணங்களை எண்ணி கண்ணீர் வடிப்பாள். கமலாவின் நிலைமை வரவர ஆபத்துகுள்ளாகிவிட்டது. ஒருநாள் இரவு கமலா தனது நாயகனை அருகில் அழைத்தாள். அவரது இருகாங்களையும் தூக்கி கண்களில் ஒத்தினாள். பின் கண்ணீர் வடித்தாள்.

'என்னால் உங்களுக்கு கஷ்டம் அதிகம் இருக்கும். ஆனதினால் என்னை ஆண்டவன் அன்புடன் அழைக்கிறார். ஆனால் நான் இறக்கும் சமயத்திலாவது கண்மணி சாசாவை பார்க்கலாம் என நினைத்தேன். அது முடியவில்லை. ஆகையினால் நீங்கள் நமது கண்மணி சாசாவை எவ்விதத்திலாவது கண்டுபிடித்து அன்புடன் வளர்க்கவேண்டும்' என நவின்றாள். 'நான் சாசாவை ஒருக்காலும் மறவேன்' என்று புருஷன் மனைவிக்கு சத்தியம்செய்து கொடுத்தார். அவளது பக்கத்தில்போய் இருந்துகொண்டு அவளுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தார். இவ்வாறு இரண்டு நாட்கள் கழியவே கமலாவின் உயிர் அவளது உடலை விட்டகன்றது.

இராஜேந்திருக்கு கவலையோ தலைக்குமேல் ஏறிவிட்டது. ஜோலியைவிட்டு நீங்கினார். இல்லறத்தை வெறுத்தார்; துறவறத்தை கைக்கொண்டார்.

சாசா மறைந்து வருடங்கள் 9 கழிந்தன. இராஜேந்திரர் வயது மிஞ்சி கிழப் பருவத்தை அடைந்தார். தனது கதையை ஒரு பெரிய மகானிடம் சொல்லி அவர் கொடுத்ததை வாங்கி அதைக்கொண்டு காலம் கழித்துவந்தார். அவர் சில சமயங்களில் மனைவியும் குழந்தையும் முன் தோன்றின மாதிரி கனவு கண்டு படுக்கையைவிட்டு எழுந்திருந்து கண்ணீர் வடிப்பார். வழியில் போகும் இளமங்கையர்களை கண்டால் தனது மகளோ என்று கொஞ்சநேரம் உற்று நோக்குவார்.

ஒருநாள் மாலை நேரம் சூரியனும் மேற்குத் திசையில் வீழ்ந்தான். ஆவினங்கள் தனது கன்றுகளை நோக்கி நடக்கலாயின. அச்சமயம் இராஜேந்திரர் காவி வஸ்திரமும் நெற்றியில் விபூதியும் கையில் ஒரு கம்புமாய் கடற்கரை யோரமாய் தள்ளாடி தள்ளாடி நடந்துபோய் கொண்டு இருந்தார். மாலைநேரம் ஆனதினால் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் கூடி யிருந்தார்கள் அக்கூட்டத்தில் இளமங்கையர்களை கண்டால் சிறிதுநேரம் உற்றுநோக்குவார். இப்படி சிறிது தூரம் சென்றதும் ஒரு பாந்த இடம் நாற்புறமுமிருந்து குளிர்ந்த காற்று வீசிகொண்டு இருந்தது அங்கு கரையோரத்தில் ஒரு மோட்டார் நின்றது. அதன் சமீபத்தில் இருந்த ஒரு பாறையின்மேல் ஒரு இளமங்கை அமர்ந்திருந்தாள். பளபளப்பான அவளது ஆடைகள் ஜொலித்தன. காதில் அணிந்திருந்த வைரக் கம்மல் பளீர்பளீர் என்று பிரகாசித்தது. அவளது கருங்குழல்கள் தென்றல் காற்றில் ஊசலாடிக் கொண்டு இருந்தன. இத்தகைய வனப்புடைய அப்பெண்ணுக்கு வயது 18 இருக்கும். அவள் கடலில் இருந்துவரும் அலையையும், மற்றுமுள்ள வனப்புக்களையும் பார்த்து இயற்கை இன்பம் அனுபவித்துக்கொண்டு இருந்தாள். இவ்வாறு இருக்கையில் பக்கத்தில் ஒரு வயோதிகர் வருவதை கண்டதும் மங்கை திகைத்து உற்று நோக்கினாள். அவளது முகமாறியது. கண்கள் கலங்கின. கைகள் தளர்ந்தன. பக்கத்தில் வந்த வயோதிகரை நெருங்கினாள். கையைப் பிடித்தாள். 'அப்பா! என்றாள். அவ்வளவு தான். இராஜேந்திரர் மேலும் கீழுமாக பெண்ணைப் பார்த்தார்.



'ஏ சரசா! என் மகள் அல்லவோ நீ. இங்கே எப்படி வந்தாய்? எதற்கு வந்தாய்' என்று ஆச்சரியத்தை அடக்க முடியாமல் கேட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பெண்ணை உற்று நோக்கினார். இரண்டு அடி எடுத்துவைத்த பெண்ணை நெருங்கினார். இதை கண்ட பெண்ணும் அவரை நெருங்கி வந்தாள். அப்பொழுது அவளது முகத்தில் அழகு பறந்தோடியது. கவலை குடிகொண்டது. காவி வஸ்திரமும் கையில் கம்புமாய் இருந்த தனது தகப்பன் கையைப் பிடித்த 'அம்மா எங்கே அப்பா! அம்மா எங்கே' என்று விம்மி விம்மி கண்ணீர் வடித்தாள்.

'ஆம் அப்பா, உங்களிடம் இருந்து மறைந்த உங்கள் சாசா தான். அப்பா நான் அழிந்தேன். நான் கெட்டேன்' என்று மேலும் மேலும் கண்ணீர் வடித்தாள்.

'ஏ சாசா! உனக்கு இந்த ஆடை, மோட்டார், இந்த வைர நகைகள் எல்லாம் எவ்வாறு கிடைத்தன? உள்ளதை கூறு, ஒளியாதே' என்று கேட்டார்.

'அப்பா நான் அழிந்தேன். நான் கெட்டேன்' என்று மீண்டும் அழுதாள். அவளது வார்த்தைகளின் அர்த்தத்தை அப்பொழுது தான் உணர்ந்தார்.

அவரது மனம் வெடித்து விடும்போலிருந்தது. 'ஏ சாசா நான் பெற்ற குழந்தையல்லவா நீ? ஏ சாசா! உனக்கு இக்கதியா வர வேண்டும். கடவுளே' என்று சொல்லிக்கொண்டே அவளை விட்டுப் பிரிந்து தலையில் அடித்துக் கொண்டார். கண்ணீர் வடித்தார். 'ஏசாசா! அழிந்தாயே! கெட்டாயே! ஏ தெய்வமே' என்று புலம்பிக் கொண்டே நடந்தார். அவரது கால் நடை தளர்ந்தது. கைகள் துடித்தன. ஆனாலும் தள்ளாடித் தள்ளாடி சிறிது நடந்தார். திடீரென கால் இடறிக் கீழே விழுந்தார். 'ஏ சாசா! தெய்வமே' என்றார். அதற்குமேல் பேச்சில்லை. மூச்சு அடங்கியது அவரது உயிரும் உடலை விட்டுப் பிரிந்தது.



# கோமளசேகரன்

[S. A. சிதம்பரம்]

(சென்றமாதத் தொடர்ச்சி)



கோமளவல்லி அச்சமயம் அக்குகையைச் சுற்றிப் பார்த்து ஒருவரையும் காணுமல் திகைத்து ஈசனை தியானித்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் மதியூகியும் கனிவர்க்கத்துடன் குகையினுள் வந்து கோமளவல்லியின் பசிப் பிணியை தீர்க்கச் சொன்னுன். ஒருவாறு திருப்தியில்லாமல் சிறிது ஆகாரத்தை உண்டு மதியூகியைப் பார்த்து 'என் காதலரான சிலர் எங்கே இருக்கிறுர்' என்று வணக்கத்துடன் கேட்டாள். அதற்கு

மதியூகி:—காதலி உன் காதலர் இங்குதான் இருக்கிறுர். அவரை இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் தேடி அழைத்து வருகிறேன்.

கோம:—(காதலி என்றழைத்தவுடன் திரேகம் நடுக்க முற்று கண்நெருப்புப் பொறிபறக்க கோபக்குறியுடன் அடக்கமுடியாமல் வந்த வார்த்தையை அடக்கி சாந்தப்பட்டு) என்ன, தேடியா, அழைத்தா, இனிமேலா, அந்தோ இதுவரையில் என்னை ஏமாற்றியதுதானு. ஆ தெய்வமே.

மதியூகி:—மனம்போனபடி யெல்லாம் பிதற்ருதே. இப்பவும் நான் தவறிவிட வில்லை. ஆனுல் நீ எனக்கு எதுகேட்டாலும் கொடுப்பதாய்ச் சொன்னுயல்லவா. அதை சத்தியமாய்ச் சொன்னுல் அவரை இங்கு அழைத்து வருகிறேன்.

கோமள:—ஆகாயவாணி பூமாதேவி யறிய சத்தியமாய் தாங்கள் எது கேட்டாலும் தருகிறேன்.

மதியூகி:—அப்படியானுல்...............உன்னுடைய................ உடலை..........எனக்கு......அ........ர்......ப்......ப.......ண.......ம் செ.......ய்.......து.......விடு.

கோமள:—ஐயோ, கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டதுபோலாயிற்றே இவர் உதவியைநாடியது, (பார்த்தால் பசு, பாய்ந்தால் போல் புலிபோல் என்ற பழமொழிப்படி இவர் காரியம் ஆகிவிட்டதே. ஈசா இதுவும் உமது திருவிளையாடல் போலும், ஆபத்துக்காலத்தில் தைரியத்தைக்கைவிடலாகாது. எது நடந்தாலும் நடக்கட்டும். காவல்

தானே பாவையற்கழகு என்று நினைத்துக்கொண்டு, ஏமாற்றும் எண்ணத்துடன்) ஆடவரே நீங்கள் சொன்னபடி என் காதலரை இங்கு அழைத்து வந்தால் தங்கள் இஷ்டத்திற்கு சம்மதிக்கிறேன். தயவு செய்து அழைத்து வாருங்கள்,

மதியூகி:—யாரை அழைத்து வருவது?

கோமள:—என்ன! யாரையா அழைத்து வருவது என்று கேட்கிறீர்கள்? இதுவரையில் சொன்னதெல்லாம் தமிழ், இனி ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமோ, அவரைத்தான்' என் காதலரான சிலரைத்தான்.

மதியூகி:—என் ஆருயிர் அன்பே, எனக்குச் சிலரையும் தெரியாது பாலரையும் தெரியாது. உன்னைக் கண்டது முதல் மன்மத பாணம் என்னை வாட்டுகிறது. உன்னைக் கந்தர்வ விவாகச்செய்து கொள்ள நோக்கங்கொண்டே இங்கு அழைத்து வந்தேன். உன் வாழ்நாள் இனி இங்குதான். உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறேன். உனக்கு இஷ்டம் ஆனுல் என் எண்ணத்திற்கு இடங் கொடு.

கோமள:—(தன் சூழ்வினையை நொந்துகொண்டு) சரி, தங்கள் இஷ்டப்படியே நடக்கவேண்டியது தான். ஆனுலும் நடுக்கானில் நாம் இருவரும் இருந்து வாழ்வதைவிட தங்கள் நகரம் சென்று காந்தர்வ விவாகம்செய்துகொண்டு சதிபதியாக இருக்கலாமே. அதற்குள் அவசரப் படவேண்டாம். கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது.

மதியூகி:—காதலி! யான் உண்மையை ஒளியாது உரைக்கின்றேன். என் எண்ணத்தை நிறைவேற்று. நான் மன்னன் மகனல்ல. இக்கானக வேடுவத்தலைவன் மகன். என் பெற்றோர் உற்றோர் யாவரும் இறந்து விட்டனர். யான் மட்டும் தனித்திருக்கிறேன். உன் ரூபலாவண்யத்தில் மயங்கி உன்னை வஞ்சித்து இங்கு அழைத்து வந்தேன். பின் விஷயம் உனக்குத் தெரியும்.

கோமள:—(அன்னவன் வார்த்தையைக் கேட்டு ஆ ஜெகதீஸ்வரி என்கற்புக்குப் பங்கம்வராது காப்பாற்று. தயாபரி அன்னவனிடத்திலிருந்து அடியாளை தப்புவிக்கும் மார்க்கத்தை அருள்புரி, என்று தியானித்து மனதை திடப்படுத்திக்கொண்டு) ஐயா தங்கள் இடமிருக்கும்வரை நான் தங்கள் அடிமை தான். ஆனுலும் இன்றுமுதல் நான் 48 நாள்வரை விரதம் முடிக்க வேண்டியிருக்கிறது. அதன்பிறகு தங்கள் பிரியம்போல் நடக்கிறேன். அந்நோன்புக்குரிய சாமான்களை சேகரித்துக்கொடுத்து முடித்துவைக்கவேண்டியது தங்கள் கடமை யாகும்.

மதியூகி:—காதலி, அப்படியே யாகட்டும்.' கோமளவல்லி நோன்பு அனுஷ்டித்து வருகிருள்.

## அத்தியாயம் 2.

விஜயபுரியில் ஓர் மாளிகையின் முன் ஹாலில் ஒருநாள் மாலை சுமார் $4\frac{1}{2}$ மணிக்கு ஓர் காரிகை மிகுந்த வருத்தத்துடன் சோபாவில் சாய்ந்திருந்தனள். அவளுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த ஓர் பிரம்பு நாற்காலியின் பின்புறத்தில் சுமார் 25வயது மதிப்பிடத்தக்க ஓர் மாது வருத்தத்துடன் கீழே உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் வெளியிலிருந்து ஓர் வாலிபன் உள்நோக்கி வருவதைக் கண்டு தன் எதிரில் வீற்றிருக்கும் வேலைக்காரியாகிய அம்புஜத்தை நோக்கி 'வெளியில் இருப்பது யார் தெரிந்துவா' என ஈனசுரத்துடன் சொன்னாள். அம்புஜம் வெளியில் சென்று அவ்வாடவனை அணுகி உட்காரச் செய்து, 'தாங்கள் யார்? இங்கு வந்த காரணம் யாதோ' என்று கேட்டனள். அவ்வாடவனும் 'தாயே' எனக்கு ரொம்பவும் தாகமாயிருக்கிறது முதலில் தாகசாந்தி செய்துகொண்டு, பின் மற்றவைகளைச் சொல்லுகிறேன்' என்றனன். அம்புஜமும் உட்சென்று தாகத்திற்கு கொண்டுவந்து கொடுத்து உபசரித்தனள். தாகவிடாய் தீர்த்தபின்பு ஆடவன், 'தாயே நான் வசிப்பது மல்லிகார்ஜுனபுறம். என் நாமதேயம் மகிமைதாசன். எனக்கு மந்திரம் ஜோசியம் முதலியவைகள் தெரியும். தேசந்தோறும் பிழைப்பின் நிமித்தம் சென்று சுற்றி இப்பட்டணம வந்து வீதிவிசேடங்களை சுற்றிப் பார்க்குங்கால் வெயிலின் கொடுமையால் அதிக தாகங்கொண்டு தங்கள் வீட்டிற்குள் நுழைந்தேன். என் களையும் தீர்ந்து விட்டது. நான் போய் வருகிறேன்' என்றனன்.



அம்புஜம் சட்டென்றுஉட்சென்று அவ்வாடவனின் விஷயத்தைப்பற்றிச் எஜமானியிடம் சொல்ல அவள் அவனை அழைத்து வரும்படி தெரிவித்ததால். அப்படியே அம்புஜமும் அவனை எஜமானியின் முன் அழைத்து வந்துவிட்டு அமரச் செய்தனள்.

எஜமானி :—உம், விஜயம் தெரிந்தது. நான் பல நாளாய் ஓர் எண்ணத்தைக் கொண்டிருக்கிறேன். அது என்ன என்று உம்மால் சொல்லமுடியுமா?

ஜோசியன்:—அம்மணி எண்ணத்தை சொல்லுவது பெரிதல்ல யார் கேட்டாலும் அவர்களுடைய நாமதேயம் சொல்லுவது தான் எல்லாவற்றிலும் விசேஷம்

எஜமானி:—ஆனல் என் நாமதேயம் என்ன?

ஜோசியன்:—அம்மணி நீங்கள் என்னை பரிகாசம் செய்கிறீர்களென்று நினைக்கிறேன். இருந்தாலும் சொல்லுகிறேன். ஏதோ ஆருடம் சொல்லுவது போல் 108 ல் குறைய லெக்கம் கேட்க எஜமானியும் 37 என்று சொன்னள். யோசித்துச் சொல்வதுபோல் கோ, கூ, க. என்று உச்சரித்துவிட்டு தங்கள் பெயர் கமலவல்லி உண்மைதான? என்ருர்.

எஜமானி:—(புன்முறுவல் கொண்டு)உண்மைதான். ஆனல் இது போல் நான் நினைத்தமற்ற காரியத்தையும் சொல்வீரானல் உமக்கு வேண்டிய வெகுமதிகள் தருகிறேன்.

ஜோசியன்:—அம்மணி, நான் பொருளுக்கு ஜோசியம் சொல்லுகிறவன் அல்ல. இருந்தாலும் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் சொல்லும் விஷயத்திற்கும் கேள்விகளுக்கும் அவ்வப்போது பதிலளிக்க வேண்டும். அவ்விதம் சொல்லுவீர்களானல் சொல்லுகிறேன். பதில் இல்லையேல் இப்பொழுதே எழுந்துபோய் விடுகிறேன்.

கமலவல்:—சரி, அப்படியே சொல்லும்.

ஜோசியன்:—தங்கள் பதியின் பெயர் குமாரஜீ. தங்களுக்கு ஏக புத்திரி. அது இப்பொழுது தங்களை விட்டுப் பிரிந்திருக்கிறது. இது வரை உண்மைதான?

கமலவ:—(ஏககாலத்தில் ஆனந்தமும் ஆச்சரியமுங் கொண்டு) தாங்கள் இதுவரை சொல்லிவந்தது எல்லாம் சரியே. மேற்கொண்டு சொல்லுங்கள்.

ஜோசியன்:—மேற்கொண்டு தாங்கள் கேட்டால் பதில் சொல்லுவேன்.

கமலவ:—என்குமாரத்தி தனிமையில் சென்ருளா அல்லது யாருடனாவது சென்று விட்டாளா? எங்கே, தூரமா சமீபமா, வருவாளா வரமாட்டாளா? இருக்கின்ருளா, இறந்து விட்டாளா?

ஜோசியன்:—இப்படிக் கேட்டாலல்லவோ நான் நன்ருய் சொல்லுவதற்கு சௌகரியமா யிருக்கும், தங்களுக்கும் நன்கு விளங்கும்.

ஜோசியன்:—அப்பெண்ணுக்கு ஒரு வகையிலும் இஷ்டமில்லாத ஒருவருக்கு நீங்கள் விவாகம் செய்ய நிச்சயித்திருக்க வேண்டும். அதனல் அப்பெண் தனக்கு இஷ்டமான ஒருவரை நாடிப் போயிருக்கிறது.

கமலவல்லி:—பெண் இங்கேயே இருக்கிருளா அல்லது வெளியில் போய்விட்டாளா? யாருடன் எங்கே இருக்கிருள்?

ஜோசியன்:—தங்கள் பெண் நாடியவர் பெயர் சீலராகும். இருவரும் சௌக்கியமாகத்தான் இருக்கிருர்கள். கூடிய சிக்கிரம் வந்து விடுவார்கள், நான் போய்வருகிறேன், விடைகொடுங்கள்.

கமலவல்லி:—ஜோசியரே, இன்று இரவு தங்கி மறுநாள் போகலாமே.

ஜோசியன்:—அம்மணி நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு நெடுநாளாய் விட்டது. இன்று சாயந்திரமே மெயிலுக்குப் போக வேண்டும்' என்று சொல்லி, என்ன சொல்லியும் கேளாமல் வெகுமதியும் பெருமல் பிடிவாதமாய் வெளிக்கிளம்பினன்.

மறுநாள் கருணுகரர் வீட்டின் வாசலில் ஓர் குதிரை வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஓர் தனவந்தர் கீழே இறங்கி வண்டிக்காரனிடம் சிலவார்த்தைகளை சொல்லி யனுப்பிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் கருணுகரர் வரவேற்று யாரென வினவினர். தான் மருங்காபுரி மிட்டாதாரின் புதல்வரென்றும், தனக்குச்சீலர் ஆத்மமித்திரர் என்றும், அவரைப் பார்த்து அவரை தன் கலியாணத்திற்காக அழைத்துக்கொண்டு தன் கிரஹத்திற்குப் போக வேண்டும் என்றும் கூறினர். வந்த மிட்டாதாரின் சொற்களை கேட்ட கருணுகரர் ஒன்றும் சொல்லமுடியாது விழித்து மனவருத்தத்துடன் 'நண்பரே, தங்கள் சிநேகிதர் சீலர் இன்ன இடம்போனரென்று தெரியவில்லை. அவரைத் தேடும் பொருட்டு பலவிடங்களுக்கும் ஆட்களை அனுப்பியும் புலப்படவில்லை' என்று சொல்லி விட்டார்கள். இதை முன்னிட்டு பல இடங்களிலும் சீலரைத் தேடிக்கொண்டு வந்தவர்களுக்கு 5000 ரூபாய் இனம் அளிப்பதாயும் பறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாள் 22 ஆகிறது. ஒருவரும் கண்டதாகவும் கொண்டு வருவதாகவும் சொல்லவில்லை என் செய்வேன்' எனப் புகன்ருன்.

மிட்டாதார்:—என்ன நீங்கள் சொல்வது உண்மைதானு! நம்பு வதற்கு இடம் இல்லையே. ஏதேனும் வருத்தம் உண்டாயிற்ரு? அல் லது வேறு காரணம்தான் என்ன? சற்று தயவு செய்து சொல்ல வேண்டும்.

கருணைகார்:—நன்பரே, எனக்கும் அவருக்கும் யாதொரு வருத் தமும் கிடையாது. இவ்வூரில் குமாரஜீ என்ற ஒருவர் இருக்கிருர். அவரது மகள் கோமளவல்லி இவரைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றுளாம். ஆனல் அவளின் பெற்ருேர்கள் இஷ்டப்பட வில்லையாம். அதனல் இருவரும் ஒருநாள் இரவில் கிளம்பிப்போய் விட்டார்கள். அதன் பிறகு தான் உண்மை தெரிந்தது. முதலிலேயே எனக்குத் தெரிந்திருந்தால் விவாகம் செய்திருப்பேன். அவரின் ஆத்ம நண்பாகிய தாங்கள், சீலரை என் கண் முன் காண்பிப்போ ஞல் என் ஆத்மா இவ்வுலகின்கண் சொற்பகாலம் நீடித்திருக்கும். இல்லையேல் விண்ணுலகத்திற்கு வழிதேடும். இதுவே என்மொழி. சிறிது காண்பித்தால் தங்களுக்கு கோடிப் புண்ணியமுண்டு,

மிட்டாதார்:—இந்த அற்பகாரயத்திற்காக, தங்கள் வயோதிகப் பருவத்தில், அவர் இவ்விதம் போனதை நினைக்க என் மனம் படும்பாட்டை ஈசன்தான் அறியவேண்டும். கூடிய சீக்கிரத்தில் எப்பாடு பட்டாவது சீலரைத் தேடிக் கண்டுபிடித் துத் தங்களிடம் ஒப்புவிக்கின்றேன். இதைப் பொறுத்தவரையில் தாங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். நீங்கள் தயவு செய்து எனக்கு ஓர் உபகாரம் செய்யவேண்டும். அதாவது அங்கிருந்து ஆவ லுடன் வந்து சீலரைப்பார்க்க முடியாமல் போனலும், அவரின் புகைப்படத்தையாவது பார்த்து ஒருவாறு மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ளலாமென நினைக்கிறேன்.

கருணைகார்—நண்பரே. இது என்ன பிரமாதம், தாராளமாய் சுவ ரில் தொங்கவிடப்பட்டிருக்கும் புகைப்படங்களில் தங்களுக்கு எது பிரியமோ அதை தாராளமாய் எடுத்துக் கொள்ளுங்கள் நீங்கள் அந்த விஷயத்தை மட்டும் மறக்காமல் கூடிய சீக்கிரத்தில் தேடி அழைத்து வரவேண்டும்.

மிட்டாதார்:— இது சம்பந்தமாக இனி நீங்கள் கவலைப் படவேண்டியதில்லை யென தங்களுக்கு முன்னமே தெரி வித்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் சீலரும், கோமளவல்லியும் வந்து சேரும்படி யான் பிரயத்தனம் செய்து அழைத்து வருகிறேன். காலதாமதமாகிறது சென்று வருகிறேன்.

மருங்காபுரி மிட்டாதார் உத்திரவு பெற்று வெளிச் சென்ற சிறிது நேரத்தில் குமாரஜீ வந்தார். அன்னவரை கருணாகர் உபசரித்து இருவருமாக மேல் மாடியை அடைந்தனர்.



குமாரஜீ:—இன்று தங்கள் முகம் மாறுபடக் காரணம் யாதோ?

கருணாகர்.—தங்களுக்கு தெரியாத விஷயமல்ல, இருவரும் கன்றை யிழந்த பசுப்போல்தவிக்கிறோம். ஈசன் கருணை எப்படியோ. சற்று நேரத்திற்கு முன் மருங்காபுரி மிட்டாதார் வந்து சிலனைப்பற்றி ரொம்பவும் விசாரித்து, அவனை அழைத்துப் போக வந்ததாகச் சொன்னார். அவனைப்பற்றிய விஷயங்கள் பூராவும் சொல்லி அவரையே தேடிவரும்படிக்கு ரொம்பவும் வேண்டிக் கொள்ள, அவரும் சம்மதித்து சிலன் புகைப்படத்தையும் பெற்றுக்கொண்டு இப்பொழுதுதான் சென்றனர். தாங்களும் பின் வந்தீர்கள்.

குமாரஜீ:—இதுவிஷயமாய் ஏதாவது புலப்பட்டதா என்று தெரிந்து கொள்ளத்தான் வந்தேன். பெரிய பிரபுக்களெல்லாம் சிலருக்கு உதவியாயிருக்கும் பொழுது, கூடிய சீக்கிரம் நம் குழந்தைகளை அடையலாம். தாங்கள் கவலையுறவேண்டாம். மற்றும் இன்னொரு விஷயம் மறந்துவிட்டேன். நேற்று சாயந்திரம் எங்கள் வீட்டிற்கு யாரோ ஒரு ஜோசியன் வந்தானாம். நம் மக்கள் சௌகரியமா யிருக்கிறதாகவும், அவர்கள் கூடிய சீக்கிரத்தில் நம் இல்லத்திற்கு வந்து விடுவார்களென்றும், உயிருக்கு நஷ்டமில்லையென்றும் சொல்லிப் போனதாக கமலவல்லி நேற்றிரவு என்னிடம் தெரிவித்தாள்.

கருணாகர்:—இக்காலத்து ஜோசியர்கள் பொருளுக்கு ஆசைப்பட்டு ஜோசியம் சொல்லுகிறார்களே தவிர உண்மையாய் சொல்லுகிறவர்கள் கிடையவே கிடையாது. இருந்தாலும் 100க்கு 3; 4, உண்மை யுரைப்பார்கள். யாராலாவாது எப்படியாவது நம் குழந்தைகள் நம்மிடம் சேர்ந்தால் நான் முன் சொல்லியபடி வெகுமதி கொடுத்து விடுவோம்.

குமாரஜீ:—சரி கடவுளை நம்பினோர் கைவிடப்படார். நான் போய் வருகிறேன், வந்தனம். (தொடரும்)

# ‘மனவிரோத மணத்தின் முடிவு’

——:o:——

[கோவை ரங்கம்]

‘என்செயலாவது யாதொன்றுமில்லை யினித் தெய்வமே
உன்செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்கனே வந்துமூண்டதுவே.’

என்று இனிய கானம் கோவை நகர் ‘காரனேஷன் பார்க்’ என்ற சிங்காரப் பூங்காவனத்தின் கண்ணுள்ள தாமரைத் தடாகத்திற்குச் சமீபத்திலுள்ள பளிங்கு மேடைமீது அமர்ந்துள்ள சுமார் 20 வயதுள்ள ஒரு வாலிபனால் மாலை 6 மணிக்குப் பாடப்பட்டது. அவனது கட்டுமஸ்தான தேகமும், மாநிற மேனியும், பறந்த நெற்றியும், அகன்ற மார்பும், அரும்பு மீசையும், அமெரிக்கன் கிராப்பும், கதரில் அணிந்துள்ள தற்கால நாகரிக உடையும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியதாயிருந்தன. தாசில்தார் கோவிந்தராஜு முதலியாரின் ஏக புதல்வனே இக்கட்டழகனாகிய ரங்கராஜு. அவன் தனது வலக்கரத்தில் ஓர் ‘தமிழரசு’ பத்திரிகையும் இடக்கரத்தில் கன்னத்தையும் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது, அவன் யாருடைய வரவையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல் காணப்பட்டது.

அச்சமயம் பல காதலர்கள் தங்கள் காதலிகளோடு கைகோர்த்து உலாவிக்கொண்டே, சம்பாஷித்துக்கொண்டு ரங்கராஜுவைக் கடந்து பூங்காவைவிடுத்து தத்தம் இல்லம் நோக்கிப் புறப்பட்டனர். அவர்களைப் பொறாமை கொண்டோன் போன்று நோக்கிவிட்டு ரங்கராஜு.

‘உருக்கி யுடல்கருக்கி யுள்ளீரல் பற்றி
எரிவதவி யாதென் செய்வேன்—வரியாவ
நஞ்சிலே தோய்த்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு’

என்று சொல்லியவண்ணம்விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அதைக் கண்ட சூரியனும் சகிக்கமாட்டாது மேற்குக் கடலில் மூழ்கினான்.

ஆனால் சந்திரனோ ரங்காஜுவைச் சந்தோஷப்படுத்துவதுபோல் தென்றற் காற்றோடு பிரகாசிக்கலானான் அதுசமயம் யாரோ வருவதுபோல் ஓசை கேட்டது. ரங்காஜு திரும்பிப் பார்ப்பதற்குள் அவனுடைய நேத்திரங்களை மெல்லிய கரங்களிரண்டு மறைத்தன.



அக்கரங்களையுடைய மங்கை யாரெனில் ரங்காஜுவின் மாமாவான சிவானந்த முதலியாரின் புதல்வி கோமளமே. கோமளம் சிவந்த மேனியும், கார்மேகம் போன்ற கூந்தலும், மூன்றாம் பிறைச்சந்திரனையொத்த நெற்றியும், கெண்டைமீனையொத்த விழியும், வில்லைப்போன்ற புருவமும், குமுதம்போன்ற நாசியும், முத்துப் போன்ற பற்களும், கொவ்வையிதழும், கமுகை நிகர்த்த கழுத்தும், பார்ப்போர் மனத்தைப் பரிக்கிழக்கும் ஒப்புயர்வற்ற மார்பும் ஒருங்கே அமைந்து பதினாறு கலைகளும் நிறைந்த சந்திரனைப்போல் 16 வயதுடன் பிரகாசித்தனள். முற்றுந் துறந்த முனிவர்களும் இவளைக்காண நேருமாயின் தத்தம் தவத்தை நீத்து இவளைப் பின் பற்றுவரெனின் நமது ரங்காஜு இவளைக் காதலிக்கமாட்டானோ என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள். நமது ரங்காஜு தனது கண்களை மூடியவர் யாரென்று பார்க்கத் தனது கைகளை நீட்டினதும் ரதிபோன்ற அப்பெண்மணி மன்மதனை நிகர்த்த அவ் வாலிபன்மீது சாய்ந்தனள்.

ரங்காஜு:—கண்மணி! பூரணச்சந்திர பிம்பம்போன்ற உன் வதனம் வாட்டமடையக் காரணம் யாதோ? அதுவுமன்றி நீ இவ்வளவு நேரம் தாமதித்து வந்ததேனோ? ஏதேனும் விசேடமுண்டோ, கோமளா?

கோமளம்:—பிராணநேசா! இன்னும் இரண்டு நாட்களில் B. A. படிப்பிற்காக சென்னைக்குப் போய்விட்டால் யான் யாருடன்

கொஞ்சி விளையாடுவேன்? தங்களைப் பிரியநேரிட்டால் யான் நீரற்ற தடாகம் போலல்லவா யிருப்பேன். தாங்கள் திரும்பிவர எத்தனை மாதமாகுமோ? அதற்குள்ளாக எனக்கு......(கண்ணீர் விடுகிறாள்)

ரங்க:—கோமளா! என் குழந்தையைப்போல் அழுகின்றாய்? அதற்குள்ளாக உனக்கு......'என்ன அத்துடன் நிறுத்திவிட்டனையே. நான் உன்னை ஒருபொழுதும் மறவேன் கண்ணே, கோமளா, நானும் உன்னைப் பிரிந்து அங்குச்சென்று உன்னைப் போலவேதான் வருத்தப்படுவேன். எப்பொழுது திரும்பிவந்து உன்னைக் காண்பேனோ அப்பொழுதுதான் என் மனதும் சந்தோஷமடையும். கடவுள் கிருபையால் நான் B. A. பரீக்ஷையில் தேறினதும் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பதற்கு வேண்டிய மார்க்கம் தேடுகிறேன். ஆகையால் நீ விசனப்படாதே.

கோம:—அன்பே, எனது தகப்பனார் மிகவும் பணப்பித்துப் பிடித்தவர். அவர் என்னைப் பிரபல உண்டியல்கடை வைத்திருக்கும் உங்கள் சிறியதகப்பனாரின் குமாரன் சண்முகத்திற்கு என்னை மனைவியாக்க யோசித்திருப்பதாக நேற்றுக் கேள்விப்பட்டேன். அதுமுதல் என் மனமானது ஓர் நிலையில் நில்லாமல் நான் பித்துப்பிடித்தவள் போலானேன். அதனாற்றான் நான் இங்கு தாமதித்து வந்தேன். நானோ தாயற்றவள். என் தந்தை என்னைக் கட்டாயப்படுத்தினால் அவரைத் தடுப்பவர் யாருமில்லை. உதவியற்ற நான் என்ன செய்வேன்? தங்களிடம் எப்பொழுது என் தேகத்தை ஒப்படைத்தேனோ பிறகு தங்களையன்றி ஒருவரையும் கனவிலும் நினையேன்; கண்ணெடுத்தும் பாரேன். தாங்கள் இங்கிருந்தால் தங்களாலான உதவி புரியக்கூடும். சண்முகமோ மூர்க்கக் குணமுள்ளவன், கொலை, களவு முதலிய பஞ்சமா பாதகங்களுக்கும் இருப்பிடமானவன். ஐயோ தெய்வமே!........என்று சொல்லியவண்ணம் கீழே விழுந்து மூர்ச்சையடைந்தாள். உடனே ரங்கராஜு அருகிலுள்ள தடாகத்தில் தன் கைக்குட்டையை நனைத்து ஜலம் கொண்டுவந்து அவளைத் தன் மடிமீது கிடத்தி முகத்தில் நீரைத் தெளித்து அவளைத் தேற்றினான்.

நாழிகை யதிகமாய் விட்டபடியால் மறுநாள் மாலை 6-மணிக்கு அவ்விடத்தில் சந்திக்கத் தீர்மானம் செய்துகொண்டு ஒருவரை யொருவர் பிரியச்சகியாது பிரிந்தனர். அன்றிரவு கோமளம் தனக்கு ஏற்படவிருக்கும் பிரியமில்லாத விவாகத்தை நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டு எண்ணாதுவெண்ணி நித்திரையின்றி அவ்விரவைக் கழித்தனள். ரங்காராஜு தான் எப்பொழுது தன் காதலியைச் சந்தித்து விவாகவிஷயத்தின் உண்மையை யறியலாம் என்று எண்ணியவாறே நித்திராதேவியை வென்றான். மறுநாட்காலையில் கோமளத்தின் தகப்பனாராகிய சிவானந்த முதலியார் தன் மகளுடன் காலையுணவருந்திக்கொண் டிருக்கும்பொழுது சண்முகத்திற்கு அவளை

விவாகம் செய்விக்கத் தீர்மானம் செய்திருக்கும் விஷயத்தை வெளியிடலானர். அதனைச் செவியுற்ற கோமளம் உணவருந்துவதை அத்துடன் நிறுத்திவிட்டு அவ்விடத்தினின்றும் வெளியே செல்லத் திடீரென்று கோபாவேசத்துடன் எழுந்தனள். அதனைக் கண்ட முதலியார் அவளைச் சமாதானம் செய்து அமரச்செய்து விவாக விஷயமாக அவளது அபிப்பிராயம் யாதெனக் கேட்டார்.

கோம:—அப்பா! எனக்குத் தங்களைவிட யாரிருக்கின்றார்கள்? ஒருவருமிலர். 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்பது யானறிந்த விஷயமே. எனினும் தாங்கள் தீர்மானம் செய்வதற்கு முன்பே எனது அபிப்பிராயத்தை தாங்கள் அறிந்திருக்கலாம். அப்படியிருந்தும் இப்பொழுது என்னை யாருக்கோ மணக்க நிச்சயம்செய்து விட்டதாகத் தாங்கள் சொல்லுவது மிகவும் அசம்பாவிதமான செய்கையன்றோ?

சிவானந்த முதலியார்:—என் அருமை மகளே! நீ என் வார்த்தையை ஒருக்காலும் தட்டமாட்டாயென்று நினைத்தே நான் உன்னை சண்முகத்திற்கு மணமுடிக்க நிச்சயம் செய்துவிட்டேன். சண்முகத்திற்கு என்ன குறைவு? ஏராளமான சொத்துண்டு. ஆகையால் நீ ஓர் சீமாட்டிபோல் வாழ்வாய். என் வார்த்தையை மீறாது அவனை மணந்துகொள்.

கோம:—அப்பா! தாங்கள் அன்னவரின் பணத்தை மட்டுந்தான் கவனித்தீர்களேயன்றிக் குணத்தைக் கவனிக்காததைப்பற்றி நான் வருந்துகிறேன். அன்னவர் பஞ்சமா பாதகங்கட்கே பிறப்பிடம் என்பது தாங்கள் அறிந்த விஷயமே. ஆதலின் அன்னவரை நீங்கள் மருமகனாக அடைவதைக் காட்டிலும் நற்குணமுள்ள வேறோர் ஏழையை மருமகனாகப் பெற்றால், அதனால் தங்களுக்குப் புகழுண்டு. அத்துடன் புண்ணியமுமுண்டு. இதுநாள் வரையிலுந் தங்களுக்குக் கீழ்ப்படிந்து வந்த நான், இது விஷயமாய் இன்று தங்களை மீறிப் பேசுவதாகத் தாங்கள் நினைக்ககூடாது. நான் ஒருபொழுதும் இவ் விவாகத்திற்குச் சம்மதியேன். தாங்கள் இவ்விஷயமாய் பிடிவாதம் செலுத்துவீர்களாயின் எனதுயிர் இவ்வுலகைவிட்டு நீங்கும் என்பது சத்தியம். அத்துடன் தங்களுக்கும் கெட்ட பெயர்வரும். ஆகையால் இது விஷயமாய் தாங்கள் தீர்க்காலோசனை செய்து ஓர் முடிவுக்கு வரவேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிவ-முதலி:—'கோமளம்! நீ அதிகமாகப் பேசக் கற்றுக் கொண்டாய். உன்னுடைய எண்ணம் எனக்கு முன்பே தெரியும். ஏதோ A. B. C. D. என்ற இங்கிலீஷ் கோண எழுத்துக்களைப் படித்துக்கொண்டு பெரிய துரை மகனைப்போல் உடுத்திக்கொண்டு இருக்க இடமின்றி, குடிக்கக் கூழின்றி, சப்பாத்தியமின்றி வெட்டிச்

சோறு தின்றுகொண்டு பள்ளிக்கூடத்திற்கும் வீட்டிற்கும் உலாத்தும் உன் அத்தை மகனுகிய ரங்கனைக் கலியாணம் செய்துகொள்ள நீ நினைத்துக்கொண்டிருக்கிருய். அது முடியாத காரியம். அப்படிச் செய்தால் எல்லா இழவும் என் தலையிலேதான் வந்துவிழும். இது வரையிலும் அவர்களுக்கு உதவிசெய்து என் சொத்தில் பாதிக்கு மேல் தீர்ந்துவிட்டது. இனிமேலும் அவர்களிடம் என்னைச் சிக்க வைத்து என்னையும் ஓட்டாண்டியாக்க நினைத்துக்கொண்டிருக்கிருய் போலும்! ஒருக்காலும் உன் எண்ணம் ஈடேருது. சண்முகத்தை நீ மணக்கச் சம்மதியாவிட்டால் உன்கதி யென்னவாகுமென்பதைப் பிறகு நீ தெரிந்து கொள்வாய்' என்று பிரசங்கம் செய்துவிட்டு தனது மகளின் பதிலையும் எதிர்பாராது கூடிய சீக்கிரம் விவாகத்தை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க வெளியே சென்றுவிட்டார்.

இச்சம்பாஷணை நடந்த மூன்ரும்நாள் கோமளத்திற்கும் சண்முகத்திற்கும் விவாகம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு மும்முரமாகச் செய்யப்பட்டன. கோமளம் வழக்கம்போல் தன் காதலனுகிய ரங்கராஜுவை சிங்காரப் பூங்காவில் மறுநாள் சந்தித்துத் தனக்கும் தன் தந்தைக்கும் நடந்த சம்பாஷணையைத் தெரிவித்ததுடன் மேல் நடக்க வேண்டிய விஷயங்களுக்கு தான் ரங்கராஜின் உத்திரவை எதிர்பார்ப்பதாகவும் மிகவும் விசனத்துடன் நாத்தடுமாற நவின்றனள்.

ரங்க:—'கண்ணே கோமளா! நீ ஒன்றுக்கும் பயப்படாதே. 'வரும்விதி வழித்தங்காது' எல்லாம் தெய்வச் செயல். நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது' போலும்! இந்த இடுக்கான சமயத்தில் நான் என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. அந்த அனுதாரக்ஷகன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

கோமளம்:—என் காதற் களஞ்சியமே! தாங்கள் என்னைச் சோதிக்க வேண்டாம். நான் தங்களைவிட்டுப் பிரிய நேரிட்டால் அந்த நிமிடமே எனதுயிரை நீத்து அடுத்த பிறப்பிலாவது தங்களை மணந்து கொள்ளுவேனேயன்றி, முக்காலும் சத்தியமாக அந்தச் சண்டாளனை மணவேன். இது தான் என் தீர்மானம்' என்று அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய் தேம்பித்தேம்பி யழுதனள்.

இதைக் கண்ட ரங்கராஜும் தன்னையறியாது கண்ணீர் விடுத்தனன். இவ்விதம் உண்மைக்காதலரிருவரும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிப் பிடித்தவண்ணம் விசனப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் கோமளத்தின் தகப்பனர் சிவானந்தமுதலியார், உலாவச்சென்ற தன்மகள் வரத்தாமதமான காரணத்தை யறிய அவ்வழியே வந்தவர் அக்காக்ஷியைக் கண்டு திடுக்கிட்டு நின்ருர். அதை யுணர்ந்த காதலரிருவரும் பிரிந்து சென்றனர்.

அதுமுதற்கொண்டு சிவானந்தமுதலியார் கோமளத்தை வீட்டை விட்டு வெளியேபோக அனுமதிக்கவில்லை அதனால்ரங்கராஜனும் தன் காதலியைச் சந்திக்கச் சமயமேற்படவில்லை. கோமளம் தன் தகப்பனால் மிகவும் துன்புறுத்தப் பட்டாள். விவாகதினமும் நெருங்கிற்று. உடனே ரங்கராஜனும் B. A. பரீக்ஷைக்காக சென்னைக்குப் போக நேர்ந்தது. அதுசமயம் அவ்வுண்மைக் காதலர் மனம் எவ்வாறு இருந்திருக்கும் என்பது, அவ்விதம் அது விஷயமாய் அனுபவப்பட்டவர்களுக்குத் தான் இனிதுவிளங்கும். கோமளத்தின் விவாக தினத்திற்கு முந்தியநாள் இரவு கோமளத்தை அலங்காரஞ் செய்யவீடுமுழுதும் தேடினார்கள்; ஆனால் எங்கும் அவள் தென்படவில்லை.

ஆனால் மறுநாட்காலையில் கல்யாணவீட்டில் மங்கள வாத்தியங்களுக்குப் பதிலாக பிணப்பறையோசை கேட்டது. காரணம் யாதெனில் அவ்வீட்டின் கண்ணுள்ள கிணற்றில் கோமளத்தின் பிரேதம் காணப்பட்டது. திருமணங்காண வந்தோரனைவரும் மணக்கோலத்திற்குப் பதில் பிணக்கோலங் கண்டு ஏமாந்தனர். கோமளத்தின் புடவையில் ஓர் முடிப்புத் தென்பட்டது. அதனை அவிழ்த்து நோக்குங்கால் ஓர் சிறிய தகரப்பெட்டியில் அவளால் வரையப்பட்ட கடிதமொன்று காணப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது :—



'என் தற்கொலைக்குக் காரணம் என்மன விரோதமான
விவாக ஏற்பாடே. இதைக் கண்ணுறும் பெரியார்கள்
இனியாகிலும் மக்களின் மனமறிந்து மணம்
செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்'

கோமளம்.

இதைக்கண்டார் யாவரும் ஆச்சரியமடைந்து சிவானந்த முதலியாரைத் தூசித்ததுடன் இனிமேல் பிள்ளைகளின் யோசனையை அறிந்த பிறகே விவாகம் நிச்சயிக்கத் தீர்மானம் செய்தனர்.

இவ்விஷயம் அடுத்தநாள் தினசரிப் பத்திரிகைகளில் கொட்டை யெழுத்துக்களில் வெளியாயிற்று. இதை ரங்கராஜனும் வாசிக்க நேர்ந்தது. இதை வாசித்த உடனே அவன் மனமுடைந்து தன்காதலியைப் பிரியச்சகியாது, கடலில் குதித்து தன் காதலியைப் பின்பற்றினான். மணக்கோலத்துடனிருந்த சண்முகம் அவமானம் பொறுக்கமாட்டாது தற்கொலை செய்துகொண்டான். இம்மூன்று கொலைகளுக்கும் யமனாயிருந்தவர் சிவானந்த முதலியார் என்பது வெள்ளிடைமலை.


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.



# வெளி விகடம்

ஒருவன்:—பொறுமைப் படுகிறவர்களின் கதி என்ன தெரியுமா?

மற்ெருருவன்:—ஓ! எனக்கு தெரியும். பொறுமை என்ற வார்த்தையை தலைகீழாய் வாசித்தால் என்னவாகுமோ அதைப் போல்தான் ஆவார்கள். —கே. செந்தில்விநாயக தேசிகர்

ஒரு மேஜிக் காண்பிப்பவர் மேடையின்மீது எல்லா வேடிக்கைகளையும் காண்பித்துவிட்டு அங்கு உட்கார்ந்திருக்கும் ஜனங்களைப் பார்த்து, 'இப்பொழுது நூதனமாக ஒரு வேடிக்கை காண்பிக்கிறேன் பாருங்கள். நீங்கள் நினைத்திருக்கும் யாவற்றையும் மறந்துவிடும்படி செய்கிறேன்' என்றுசொன்னர். உடனே அங்கு உட்கார்ந்திருப்பவர் மேடையின் மீதுஏறி அவர் காதில் 'அதைத் தவிரவேறு எதாகிலும் செய்யுங்கள். ஏனென்ருல் அதோ உட்கார்ந்திருப்பவர் முப்பதினயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். நான் கேட்க மறந்து விடுவேன். அவர் கொடுக்க மறந்து விடுவார்' என்று நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர் ஒருவரை காண்பித்து, அவருக்கு 100 ரூபாய் நோட்டை நீட்டினர்.



* * *

தகப்பனர்:—(தாயார் பக்கலில் நின்றுகொண்டிருக்கும் மகனைப் பார்த்து) அடே ராஜா வாடா, நான் குளிப்பாட்ரே

மகன்:—எப்பா, எங்கம்மாதான் தினந்தோறும் என்னைக் குளிப்பாட்ரா இன்னிக்கி நீங்க ஏ வந்தீங்கோ?

தகப்பனர்:—உங்கம்மாளுக்கு ராஜாவாம், அதனல்.

பையன்:—எந்தப் பள்ளிக்கூடத்திலப்பா அம்மா படிக்கிரு, நானும் அம்மா கூடபடிக்கிறே.

தகப்பனர்:—உங்கம்மாளையே கேட்டுக்கோ. பொன்னுவாடன்

கிராமவாசி:—சாமி! ஒரு இக்கிட்டு குடுங்கோ.

புக்கிங் கிளார்க்:—எந்த ஊருக்கு?

கி-வா:—அம்மணி ஊருக்குங்கோ சாமி!

பு-கி:—அடே அசடே! அம்மணி ஊர் எது?

கி-வா:—பெரியம்மணி ஊருதானுங்கோ சாமி!

பு-கி:—(கோபத்துடன்) அடே சனியனே? பெயரென்ன சொல்லு சீக்கிரம்.

கி:—பேரு கருப்பாயிங்கோ சாமி! —கோவை ரங்கம்

உபாத்தியாயர்:—(வகுப்பிற்குச் சென்று) அமுலு, எஸ். ஐ. ஆர். (S. I. R.) என்றால் என்ன?

அமுலு:—ஸ்டுப்பிட் இரகுலர் ராஸ்கல். —பீ. கே

முதல்சோம்பேரி:—டே! ரொம்பகுளிருதடா. துப்பட்டியே கொஞ்ச எடுத்து போர்த்துடா.

இரண்டாம் சோம்பேரி:—முதல்லே துப்பட்டி எடுத்துவாடா.

—பொன்னுவாடன்

ஒருசேவகன்:—(பதினொருமணி அடிப்பதற்கு 12மணி அடித்து விட்டான்.)

எஜமானன்:—என்னடா பனிரெண்டுமணி யடித்து விட்டாய்?

சேவகன்:—ஒன்றை அழித்துவிட்டால் போகிறது என்று அதை ஒரு தடவு தடவினான்.

*  *  *

கண்டக்டர்:—ஐயா! இந்த பின் சீட்டில் வந்து உட்காருங்கள்.

உட்காருபவர்:—ஐயா! நான் அவசரமாகப் போகணும். ஆகையால் முன்னால் சீட்டில் போய் உட்கார்ந்தால் விரைவாய் போய் விடுவேன், என்று போய் உட்கார்ந்தார். —பழனி, T. குப்புசாமி

ஒருவன் ஒருமனிதனைப் பார்த்து:—ஓய், பெரியவரே, எங்கே இவ்வளவு அவசரம் இங்கே வந்து விட்டு போமையா, என்றான்.

மனிதன்:—போடா போ, பெரிய அவரை, தோட்டத்தில் அல்லவா காய்க்கும். இங்கே கிடையாது என்றார்.

—எம். வி. கன்னன்

# தற்செயலாய் நடந்த சம்பவம்

[D. N. முத்து ஈரோடு]

மாலை 4·30 மணி. அப்போதுதான் மனுப்போலி காலேஜ் முடிவடைந்தது. நமது கதா நாயகனான குமார் என்புரன் தனது சைக்கிளில் மிக்க விரைவாய் தனது வீட்டை நோக்கி சென்றுகொண்டிருந்தான். அவன் இப்படியாக அதிவேகமாய் கேசா (ஐஸ்கூல்) பெண் உயர்கலாசாலையின் திருப்பத்தில் வந்துகொண்டிருக்கையில், கேசா பெண் உயர்கலாசாலையினின்றும் ஒரு கார் அதே திருப்பத்தில் மிக்க விரைவாக வந்தது. சில வினாடியில் துர் அதிர்ஷ்டத்தின் காரணமாய் குமாரின் சைக்கிள் காரில் பலமாய் மோதியது. உடனே குமார் கீழே தள்ளப்பட்டு மூர்ச்சையானான். அதுசமயம் காரில் உட்கார்ந்திருந்த ஒரு யௌவன மாது கீழே யிறங்கி அவ்வாலிபனை எடுத்துத் தன் காரில் ஏற்றி தனது வீட்டை யடைந்தாள். அடைந்தவள் அவ்வாலிபனை தனது அறையில் ஒரு கட்டிலில் படுக்க வைத்தாள். பின்பு டாக்டர் வந்து தகுந்த சிகிச்சை செய்தார்.

அரைமணி நேரம் சென்ற பின்பு குமார் கண் விழித்தான். அப்போது ஒரு யௌவன மாது தன் அருகில் உட்கார்ந்திருக்கவும், எதிரே மருந்து சாமான்கள் இருக்கவும், வீடு புதியதாய் இருக்கவும் கண்டு ஆச்சரியத்துடன் அம்மாதை நோக்கி தான் அவ்விடம் வந்து சேர்ந்ததைப்பற்றி வினவினான். அம்மாதும் நடந்தவிஷயங்களை தெளிவாக எடுத்துக் காட்டினாள். இவ்விஷயங்களைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கும் சமயம் குமாரின் தாயார், தகப்பனார், சகோதரி முதலியோர்கள் குமாரைக் காண வந்தார்கள். வந்தவர்கள் குமாரைக் கண்டு பேசி இன்னும் அவனுக்கு வேண்டி சாமான்களை அவர்கள் வீடு போய் அனுப்புவதாகவும், மேலும் லீலாவிடம் குமாரின் க்ஷேமத்தை நன்கு கவனிக்குமாறு சொல்லிவிட்டும் அகன்றார்கள்.

சிறிது நேரத்துக்குப் பின் குமார் அப்பெண்ணின் தயாள குணத்தையும், நன்றி யறிதலையும் எண்ணி மனம் களிப்புற்றான். மற்றும் அவன் தன் மனத்துள் 'என்னே, நான் இவ்வளவு நாட்க

ளாய் பெண்கள் மனம் கல்' என்று அல்லவோ இருந்தேன். அது முற்றும் தவறு மேலும் இவள் பேச்சும், நடத்தையும், மிக்க மேன்மையாகக் காண்கிறதே ; சரி இருக்கட்டும் இவளை அன்றோ அடைந்தாள் நாயகியாக அடைய வேண்டும்' என்று அவளை நோக்கிய வண்ணம் மனதில் எண்ணினான். பின்பு அவளை நோக்கி, 'பெண்மணியே, சற்று அருகில் அமரு. எங்கே, உன் பெயர், தாயார் தகப்பனார் இவர்களின் விருத்தாந்தத்தைச் சற்றுச் சொல்லு' என்று கேட்கவும், அவள் பெயர் லீலாவென்றும், தான் பிரபல பேங்கரான கோபால செட்டியாரின் ஏகபுத்திரி யென்றும், தான் பள்ளியில் S. S. L. C. வாசிப்பதாகவும், இன்னும் விவாகம் ஆகவில்லை யென்றும் சொல்லி முடித்தாள்.

பார்த்தான் குமார். என்ன குணம், 'கண்ணே நீ செய்த இப் பேருதவிக்கு யான் என்ன கைமாறு செய்யப் போகின்றேன்.'

மேலும் 'நானும் இவ்வூர் பிரபல தனவந்தரின் குமாரன். என் பெயர் குமார் என்பது. இப்போது நான் B. A. வாசிக்கின்றேன். மற்றும் உன்னுடைய குணமும், எண்ணமும், அழகுக்கு ஏற்றவாறு அமைந்திருப்பதை நோக்கினால் என்னையும் அறியாமல் உன்மீது நேசம் செல்லுகிறது. ஆனால் உன்னுடைய விருப்பம் எப்படியோ' என்றான்.

இதைக் கேட்ட லீலா சற்றுமௌனமாய்த் தலை குனிந்து மெதுவாய் 'எல்லாம் தங்களது இஷ்டமே போல்த்தான். ஆனால் பெற்றோரின் மனப்பான்மை எவ்வாறோ தெரியவில்லை.'

'தாயார் தகப்பனார் பிரியத்திற்குமுன் உன் பிரியம் எப்படி? பின்பு பார்த்துக் கொள்வோம்.'

'எனது பிரியம் தங்களையே மணம் புரிந்து கொள்வதுதான்'

'சரி பின்பு என்ன வேண்டியிருக்கு'

இப்படியாக நாட்கள் பதினைந்து சென்றது. இப்போது குமார் சௌக்கிய மடைந்தான். ஆதலால் அன்று மாலை தனது வீட்டை அடைந்தான்.

* * *

குமார் நமது கதாநாயகியாகிய லீலாவின் வீட்டிற்கு அடிக்கடி வருவதும் அவளுடன், இன்பமாய் வார்த்தையாடுவதுமாய் இருந்தான். இப்படியாக வருடங்கள் 2 கழிந்தன. இப்போது கோபால் செட்டியார் லீலாவை படிப்பினின்றும் நிறுத்தி விவாகம் செய்ய அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலானார். கடைசியாய் மாப் பிள்ளையின் விஷயத்தைப்பற்றி லீலாவின் விருப்பத்தைக் கேட்டார்.

இதுதான் தக்கசமயம் என்று லீலா, ஒன்றையும் ஒளியாமல் தான் முன்பு நேசித்த தனகோபால செட்டியாரின் புத்திரனும், கதாநாயகனுமான குமாரை மணந்து கொள்ளுவதாயும் சொன்னாள்.

கோபால் செட்டியார் தனகோபால் செட்டியாரின் விருத்தாந்தை விசாரிக்கலானார். இப்படியாக விசாரத்ததில் அவரும் கோபால் செட்டியாரைப்போல் பிரபலபேங்கர் என்றும் மேலும் அவர் மகன் குமார் மிக்க சமர்த்தனென்றும், B. A. படித்திருப்பதாகவும் கேள்வியுற்றார்.

பின்பு கோபால் செட்டியார் தனகோபால் வீட்டை அடைந்து விஷயத்தை எடுத்துரைத்தார். முன்னமேயே கோபால் செட்டியாரை நன்கு அறிந்த தனகோபால் சம்மதித்தார். கடைசியாக விவாகம் உறுதியாயிற்று.

சுபதினமொன்றில் தற்செயலாய் நடந்த சம்பவத்தினின்று நற்குணத்தின் தன்மையை அறிந்துகொண்ட லீலா, குமார் இருவர்களுக்கும் விவாகம் இனிது நடைந்தேறியது. இப்போது இவர்கள் இருவரும் மனமொத்த சதிபதிகளாய் இன்புற்று வாழ்ந்து வருவார்களானார்கள்.

பிரிய வாசகர்களே, தாங்களே குணம், மனம், முதலிய சகல குணங்களையும் நன்கு தெரிந்து கொண்டு, ஒன்று கூடி கஷ்டம் (சதிபதிகள் கஷ்டம்) என்பதே அறியாமல் சதிபதிகள் இன்புற்று வாழும் நாள் என்று நம் தாய் நாடு அடையப் பெறுமோ!



# புஷ்பாவதி

[திருச்சி டாக்டர் B. மோகன் ரங்கம்]



மாலை நேரம். தென்றல் காற்று ரம்மியமாக வீசுகிறது. திருச்சி தென்னூர் ரஸ்தாவில் சந்திர விலாஸ் பங்களாவின் பின்புற சிங்காரச்சோலையில் அன்றைய தினசரி பேப்பரை கையில்பிடித்த வண்ணம் ஆழ்ந்த யோசனையுடன் அங்கும் மிங்கும் மெதுவாக உலாவிக்கொண்டிருந்தாள் புஷ்பாவதி. வயது சுமார் 18 இருக்கலாம். என்ன அழகு, எத்தகைய ரூபலாவண்ணியம். அப்ஸரஸ்திரீ போன்ற இந்த நாரீமணியின் இயற்கையழகே யழகு. சுருங்கக் கூறின், இப்பெண்மணியைக்காணும் ஆடவர் இத்தகைய பிறவியும் பிரமன் சிருஷ்டியில் உளதோ என ஐயுறுவார்களென்பது நிச்சயம். நீண்டநேரம் சிந்தனை செய்தபடியே உலாவிக்கொண்டிருந்த புஷ்பாவதி அங்கு போடப்பட்டிருந்த பெஞ்சுப்பலகையில் களைப்படைந்து, அமர்ந்தாள். ஐந்துநிமிடங்கள் சென்றன. தனக்குள் "ஹா! என்ன என்மதியீனம்! மோசம்போனேனே. பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்பார்களே, அது என் விஷயத்தில் உண்மையாய் பலித்து விட்டதே. நான் என்ன செய்வேன்? ஹே! தயாநிதியே! கருணைக்கடலே! ஏழை என்மேல் கிருபைவைக்கலாகாதா? என் தந்தையின் மனதை நீ தான் திருத்தவேண்டும். நான் மனோவேதனைப்படுவது, உனது மேலான கருணைக்கு அழகாகுமா? தன் மகள் ஒரு காங்கிரஸ்வாதியைக் காதலிப்பதை அறிவாருயின் எப்படி அவர் மனம் சகிப்பார்? அவர் தீவிர ராஜபக்தர் ஆயிற்றே. எல்லாம் உன்செயல், உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன்' என்று கூறி முடிக்குமுன் தனக்கு சமீபத்தில் சலசல வென்ற சப்தத்தைக்கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அடுத்த நிமிடம் புருஷோத்தமன் அவள் சமீபம் வந்து நின்ருன். அவனது வெண்மையான கதருடையையும் கதர்குல்லாவையும் புன் முறுவலோடு கூடிய முகார விந்தத்தையும் கண்டு, புஷ்பாவதி, அப்படியே

இமை கொட்டாமல் அவனையே நோக்கினாள். புருஷோத்தமனும் அவளை உள்ளன்போடு பார்க்க இருவருடைய கண்களும் ஒன்றை



யொன்று ஷேமம் விசாரித்துக் கொண்டன. சிறிதுநேரம் மௌனம். பின்னர் புருஷோத்தமனே ஒருவாறு சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

'கண்ணே புஷ்பா, என் ஒரு மாதிரி துக்கத்தோடு காணப்படுகின்றாய்? காரணம் என்ன?'

'விசனம் என்ன இருக்கிறது. தங்களுக்குத் தெரியாதா என்ன?'

'பழய கதையைப்பற்றித்தானே கூறுகிறாய். அதற்கு நாமென்னசெய்யலாம்? கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் மனம் வைத்தால் எல்லாம் இனிதே நடைபெறும்'

'ஹா! எத்தனைகாலம் இவ்விதம் நாம் கள்ளத்தனமாய் சந்திப்பது? யாராவது கண்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அல்லாமலும் என் பிதாவின் பெயருக்கும் இழிவுதானே'

'அருமை புஷ்பா, நான் உன்னை வந்து காண்பதால் இச்சங்கடங்கள் நேரிடுவது சகஜந்தான். அப்படியாயின் நான் இதுகாறும் இங்கு வந்து போனதிற்காக மனப்பூர்வமாக வருந்துவதோடு உனது மன்னிப்பையும் கோருகிறேன்'

'என்ன! என்ன! மன்னிப்பா! நண்பரே, தாங்கள் இவ்வாறு கூறுவது எனக்கு நிரம்பதுயரத்தை யுண்டாக்குகிறது. என் மனம் புண்படும்படிப் பேசுவது தங்களுக்குத் தர்மமாகுமா?'

'அப்படியானால் நீ என்னை மனப்பூர்வமாக, காதலிப்பது மெய்தானா? ஆனால் உன் தந்தையைப்பற்றியே சிந்திக்கவேண்டி இருக்கிறது. அவர் நமது விவாகத்திற்கு இசைவது முடியாத காரியம்'

'காதலரே என்மீது உங்களுக்கு இன்னமுமா சந்தேகம்? சத்தியமாக நான் தங்களை உயிர்க்குயிராய் நேசிக்கிறேன். இது உண்மை. எனது பிதாவைப்பற்றிய கவலைதான் என்னையும் வாட்டிக்கொண்டிருக்கிறது. ஏன் நீங்கள் தான் காங்கிரஸ் இயக்கத்தைவிட்டு விலகி வரக்கூடாதா?'

'காதலி என்னவார்த்தை புகன்றாய்? காங்கிரஸ் இயக்கத்தின் அடிப்படையான நோக்கமென்ன வென்பது உனக்கு எப்படித்

தெரியும்? வாஸ்தவம்தான், உன்பிதா டிப்டிகலெக்டர், தீவிர ராஜ விசுவாசி. நீ அவருடைய கருத்துக்களுடன் ஒத்திருப்பதில் ஆச்ச ரியம் ஒன்றுமில்லை.'

'அன்பரே மன்னிக்க வேண்டும். உங்களது இயக்கத்தின் வேலை தான் என்ன?'

'அப்படிக்கேள். சொல்லுகிறேன். நமது நாட்டிலே கல்வியில்லா மல் கஷ்டப்படுவோர் அனேகர். அவரையிற்றுக் கஞ்சிக்குக்கூட வழி யின்றித் தவிக்கும் ஏழைகள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். பெண் கள் முன்னேற்ற மடையவும், சகோதரத்துவம் பரவவும், ஜாதிமத பேதங்கள் ஒழியவும், சுதந்திரம் பெறவும் தற்போது நடத்தப்பட்டு வரும் இயக்கந்தான் காங்கிரஸ். இப்பொழுதாவது தெரிந்ததா?'

'மேலான கருத்துக்கள்தான். அப்படி இருந்தும் என் பிதா இதற்கு மாறுபட்டிருக்கிறார். சரி, நேசரே என்ன உயர்வான தேச பக்தி!'

'பிரியே! தேசவிடுதலை ஒன்றே எங்கள் கோரிக்கையல்ல. சீர் திருத்தமும் அவசியம், தீண்டாமை ஒழிப்பு, கிராம முன்னேற்றம் முதலிய பலவழிகளிலும் நாடு நலம் பெறவே நாங்கள் விரும்புகி றோம்' என்று கூறினான் புருஷோத்தமன்.

இச்சமயத்தில் நன்றாக இருட்டிவிட்டது. புஷ்பாவதி எதை யோ நினைத்துக் கொண்டவள்போல் சட்டென எழுந்தாள்.

'நேசரே! நாழிகையாகிறது. என் தந்தைவரும் நேரமாயிற்று, நான் போகவேண்டும். விடைகொடுங்கள். தங்கள்மேல் நான்கொண் டுள்ள அன்பிற்கு அடையாளமாக இதைப்பெற்றுக் கொள்ளுங்கள். எனக்கும் உங்கள் ஞாபகார்த்தமாக ஏதாவது கொடுங்கள்' எனக் கூறியபடியே தனது பட்டுக்கைக்குட்டையை புருஷோத்தமனிடம் அளித்தாள்.

புருஷோத்தமனும் அதை அன்புடன் பெற்றுக்கொண்டு அழ கான சித்திரவேலைப்பாடுகள் அமையப்பெற்ற தனது கதர்கைக்குட் டையை புஷ்பாவதியிடம் கொடுத்துவிட்டு, அவளது மெல்லிய கா த்தையெடுத்து முத்தமீந்து விடைபெற்றுக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேறினான்.

புஷ்பாவதியும் விசனத்துடன் மாளிகையின் பின்புறவாயில் வழியாக உள்ளே பிரவேசித்தாள்.

பாரிஸ்டர் கமலநாதன் திருச்சியில் பிரபலஸ்தர். நற்குணமுள் ளவர், பரமசாது. வழக்கறிவதில் நீதி மன்றத்தில் மிகுந்த நிபுணர்

எனப்பெயர் பெற்றவர். இவரது திறமையைக்கண்டே கவர்மெண்டார் இவரை டிப்டி கலெக்டராக நியமித்து கௌரவித்தார்கள். பாரிஸ்டரும் ராஜாங்கத்தாரிடம் மரியாதையாகவும் விஸ்வாசமாகவும் நடந்து அவர்களது அன்பையும் ஆசியையும் அதிகமாகப் பெற்றதோடு தற்போது உபகாரச்சம்பளம் பெற்று நிம்மதியாக தனது ஏகபுத்திரியான புஷ்பாவதியுடன் தென்னூர் சந்திரவிலாஸ் பங்களாவில் வசித்து வருகிறார்.

மாலை வேளை 3 மணி இருக்கலாம். புஷ்பாவதி மேல்மாடியில் தனது அறையில் அன்று தபாலில் வந்த 'தமிழரசு' புத்தகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். கால்மணி ஆயிற்று வேலைக்காரி அம்புஜம் அறைக்குள் நுழைந்தாள்.

'அம்மா தங்களைக்காண வேண்டுமென்று தங்கள் பிதா ஹாலில் காத்துக் கொண்டிருக்கிறார்! என்று கூறினாள் அம்புஜம்.

இதைக்கேட்டதும் கையிலிருந்த புத்தகத்தை மேஜையின் மீது வைத்துவிட்டு நாற்காலியை விட்டெழுந்து தனது உடைகளை சீர்படுத்திக்கொண்டு தந்தையைக் காணச்சென்றாள் புஷ்பாவதி. அப்போதே மலர்ந்த மலர்களின் மணமானது மாளிகையெங்கும் பரவி நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தது. புஷ்பாவதி தனது தந்தையின் அருகே மௌனமாக அமர்ந்திருந்தாள்.

பாரிஸ்டர் கமலநாதன் தன் புத்திரியைநோக்கி 'ரொம்ப நாட்களாக உன்னிடம் ஒரு விஷயத்தைப்பற்றி பேசவேண்டுமென்பது எனது எண்ணம். என்னவெனில் எனக்கோ வயதாய் விட்டது. உனக்குத் திருமணம் செய்வித்து கண்டுகளிக்க வேண்டுமென்பதே என் விருப்பம். குழந்தாய் இதற்குதடை யொன்றும் சொல்லாமல் என் கருத்தின்படி நடப்பாயா?'

'அப்பா தங்கள் சித்தம் எனது பாக்கியம், ஆனால்—புஷ்பாவதி கண் கலங்கினாள். புருஷோத்தமனின் நினைவு அவளது அகக்கண்முன் தோன்றிற்று. பற்பல எண்ணங்களும் நொடியிற் தோன்றி மறைந்தன. சித்தங் கலங்கினாள். எவ்வாறு தன் விருப்பத்தை தெரிவிப்பது என ஏங்கினாள். பின்னர் துணிந்து வெகு சிரமத்துடன் கம்மிய குரலில் பாரிஸ்டரை நோக்கி 'தந்தையே புருஷோத்தமரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்னவோ?' என்று கூறி முடித்தாள்.

'யார்! புருஷோத்தமனா! அவன் விஷயம் என்னைவிட உனக்கு நன்றாய் தெரிந்திருக்கலாம். காங்கிரஸ் வாதியல்லவா அவன். நாம் ராஜவிஸ்வாசிகள். அவர்களால் மேன்மை யடைந்தவர்கள். அப்படி இருக்க இது பொருந்துமா? புஷ்பாவதி, நீயே யோசித்துப்பார். அதிகம் கூற நான் விரும்பவில்லை! என்றார் கமலநாதன்.

'என்ன அப்பா, காங்கிரஸ்காரர் என்றால் என்ன? நம்மையவர்கள் என்ன செய்கிறார்கள்? தேச நலத்திற்காகத்தானே பாடு படுகிறார்கள். இது குற்றமாகுமா?'

'கண்மணி புருஷோத்தமனைப்பற்றி இனி என்னிடம் யாதும் கூறவேண்டாம். அவனை காதலிப்பதும் அழகல்ல. எனது கௌரவத்திற்கும் ஹானி ஏற்படும். எனது நன்மையை உத்தேசித்து நீ அவசியம் இந்த விருப்பத்தை விட்டொழிக்க வேண்டும்.' என்று கூறினார் பாரிஸ்டர்.

புஷ்பாவதிக்கு இன்ன பதில் கூறுவது என்பதே தெரியவில்லை. திடுக்கிட்டாள். ஏதோ சொல்ல முயன்றாள். பேசக்கூடவில்லை. கண்களில் கண்ணீர் நிரம்பி தாரைதாரையாக வழிந்தோடிற்று. கைக்குட்டையால் முகத்தை மூடியவண்ணம் அப்படியே சோபாவில் சாய்ந்தாள்.

'குழந்தாய் உலக அநுபவம் உனக்குத் தெரியவில்லை. புருஷோத்தமன்மேல் இச்சை கொண்டாய். எனக்கு நேரமாய் விட்டது. ஒரு மீட்டிங்கிற்காகக் கோட்டைக்குப் போகவேண்டும். நான் வருவதற்குள் நன்றாக ஆலோசித்து உன் கருத்தைத் தெரிவிப்பாய் என நம்புகிறேன்!' என்று கூறியபடியே பாரிஸ்டர் கமலநாதன் தனது ஆசனத்தை விட்டு எழுந்தார். ஹாலில் மாட்டப்பெற்றிருந்த கடிகாரம் 4மணி அடித்தது. கார் வாசலில்வந்து நின்றது. பாபம் புஷ்பாவதி அடைந்த வருத்தத்திற்கு அளவேகிடையாது. தன் தந்தை கூறிய விஷயங்களை நினைத்து நினைத்து, துயரம் அடைந்தாள். அவளையறியாமலே கோபம் ஒரு பக்கமும், ஆத்திரம் ஒரு பக்கமும் கிளம்பின. அரைமணி ஆயிற்று புஷ்பாவதி எழுந்து நேரே தனது அறைக்குச் சென்றாள். தனது உடைகளையும் ஆபரணங்களையும் கழற்றி மேஜையின்மீது வைத்துவிட்டு சாதாரண வெள்ளைச் சேலையுடுத்து மெதுவாக சந்தடியின்றி கதவை மூடிவிட்டு மாளிகையின் பின்பக்கவழியாக வெளியேறினாள்.

திருச்சிதாரானூரையடுத்து சிலமைல் தூரத்தில் ஆதித்திராவிடர்கள் வசிக்கும் பழமையான சேரி ஒன்று இருக்கிறது. சேரியை அடுத்தாற்போல் அரைபர்லாங்கு தூரத்தில் ஒரு சிறிய குடிசை, அதன் உள்ளே கைராட்டையில் நூல்நூற்ற வண்ணம் புஷ்பாவதி சேரியையே கவனித்துக் கொண்டிருந்தாள். ஹரிஜனங்கள் தோல் பதனிடுவதிலும், வயல் வரப்புகளில் வேலை செய்வதிலும் தங்கள் கவனத்தை செலுத்திவந்தார்கள். சேரி மிகவும் சுத்தமாக இருந்தது. ராட்டின் ஒலி சேரி எங்கும் வியாபித்திருந்தது.

'ஹா! என்ன உலகம்! என்ன வாழ்க்கை! இப்போது எவ்வளவு சுகமாக நான் எனது காலத்தை கழிக்கின்றேன். தேசத்திற்கு

தொண்டு செய்வதில் குற்றமொன்றுமில்லை. இறைவனடித்தியான மும், ஹரிஜனசேவையையும் தவிர்த்து இவ்வுலகில் எனக்குத் தேவையானது ஒன்றுமில்லை. ஆம் இல்லை தான்!' என்று தனக்குள் மெதுவாகக் கூறிக்கொண்டாள் புஷ்பாவதி. சேரிக்கு வந்த நாள் முதற்கொண்டு தினமும் காலை மாலை இருவேளைகளிலும், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, சுகாதாரம், கல்வி, முதலிய சீர்திருத்தப் பிரசங்கங்கள் செய்துவந்தாள். அனேகமாக ஜில்லாவின் ஒவ்வொரு சேரியிலும் புஷ்பாவதியின் புகழ்பாவி ஆதித்திராவிடர்கள் எல்லோரும் தங்களை கரையேற்றவந்த கடவுளேபோல் அவளிடம் பயபக்தி விஸ்வாஸத்துடன் நடந்துகொண்டார்கள்.

நாட்கள் பல சென்றன. ஒரு நாள் மாலை 5மணி சமயமிருக்கும். சூரியன் மலைவாயில் விழுந்தருணம். மஞ்சள் வெயில் சேரியைச் சுற்றியும் பொன்னைக்காய்ச்சி ஊற்றினாற்போல பிரகாசித்துக்கொண்டிருந்தது புஷ்பாவதி தன் குடிசையைவிட்டு வெளியே வந்தாள். சற்றுத்தூரத்தில் ஹரிஜனங்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். உற்றுக்கவனித்தாள். யாரோ பெரிய மனிதர் மோட்டாரில் அடிபட்டு அபாயமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாக அவர்கள் பேசிக்கொண்டது புஷ்பாவதியின் காதுகளில் நன்றாய்ப் பட்டது. இயற்கையாகவே இளகிய மனமுடைய அவள் இதைக் கேட்டு சகியாமல் சட்டெனமறுபடியும் தன் குடிசையில் புகுந்தாள். இரண்டு நிமிடங்கள் தாமதம். கதர்புடவையுடுத்து, கையில் கதர்பையுடன் புஷ்பாவதி சேரியைவிட்டு வெளிக்கிளம்பினாள்.

சேரிக்கும் வைத்திய சாலைக்கும் குறைந்தது நான்கு மைல்களாவது இருக்கும். தூரத்தையும், பொருட்படுத்தாமல் வேகமாகவே நடந்தாள். மாலை $6\frac{1}{2}$மணி சுமாருக்கு வைத்திய சாலையை அடைந்தாள் புஷ்பாவதி.

ஒவ்வொரு வார்டாகப் பார்த்துக்கொண்டே வந்தாள். ஒரு தனி வார்டில் கும்பலாய் இருந்தது. விலக்கிக்கொண்டு உள்ளே சென்றாள். என்னே! அவள் கண்டகாட்சி. பாரிஸ்டர் கமலநாதன் உடலெங்கும் பலத்த காயங்களுடன் ஸ்மரணையற்று படுக்கையில் படுத்திருப்பதையும், அருகே ஆருயிர் காதலன் புருஷோத்தமன் அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்துகொண்டிருப்பதையும் கண்ட அவள் மனம் பட்டபாட்டை ஈசனே அறிவார். வேரற்றமரம் போல் தடாலென தந்தையின் சமீபத்தில் விழுந்தாள் புஷ்பாவதி. அருகிலிருந்தவர்கள் திகைத்து வேண்டிய உதவிபுரிந்து மூர்ச்சை தெளியும்படி செய்தார்கள். புருஷோத்தமன் அவளைத்தூக்கி பாரிஸ்டரின் அருகே கொண்டு சென்றான். தன் தந்தையின் முகத்தோடு முகம் வைத்து புலம்பினாள் புஷ்பாவதி. தன்தலையி லடித்துக் கொண்டாள்.

தந்தையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு 'ஐயோ அப்பா உங்களுக்கு இக்கதியா நேரிட்டது. ஹா! ஐயோ தாங்கள் என்னென்ன நினைத்தீர்களோ! யாருமற்ற அனாதையைப்போல் தங்கள் நிலைமை ஆயிற்றே. பாபி நான் என் உங்கள் பெண்ணாய்ப் பிறந்தேன்? பிறந்தும் என்ன பலன் கண்டேன்? அப்பா, அருமை அப்பா என்றால் உங்களுக்கு ஒருவித பயனுமில்லாமல்போய் விட்டதே!' என்று பிரலாபித்தாள்.



......தந்தையின் சமீபத்தில் வீழ்ந்தாள்......

இச்சமயம் பாரிஸ்டர் கண்களை திறந்தார். தனது புதல்வியும், புருஷோத்தமனும் இருபுறங்களிலும் கவலையுடன் நின்று கொண்டிருப்பதையும் ஜனங்கள் ஏராளமாக சூழ்ந்து கொண்டிருப்பதையும் கண்டார். அவரையறியாமலே ஆனந்தக் கண்ணீர் பெருகியோடிற்று. ஏதோ கூறமுயன்றார். பேச நாவெழவில்லை. சிறிது நேரம் சென்றது. புருஷோத்தமன் கரங்களையெடுத்து தன் கண்களில் ஒத்திக் கொண்டார். அவர் கண்களில் ஒருவித பிரகாசம் உண்டாயிற்று. ஈனமான குரலில் தன் குமாரியை நோக்கி 'குழந்தாய் புஷ்பாவதி! தனியனானேன். எனது கடைசிக் காலத்திலாவது உன்னைக் காணும் பாக்கியம் பெற்றேன். உனது மனம் புண்பட நான் வெறுத்துப் பேசிய வார்த்தைகளை மன்னித்துவிடு இனி நீ அவசியம் உத்தமர் புருஷோத்தமரையே மணக்க வேண்டும். எனது விருப்பமும் அதுவேதான். எனக்கு உயிர் கொடுத்த அந்தப் புண்ணிய புருஷனுக்கு என் உயிர்க்குயிரான உன்னைக் கொடுத்து எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுவதே சிறந்த வழி. எனக்கு இப்போதே உண்மை விளங்கிற்று. எல்லோரும் இன்பமடைந்து சுகவாழ்வுபெற சுயராஜ்ஜியமே சிறந்த சாதனம். எனது அறிவீனத்தாலும் பெருமையாலும் இதுகாறும் தேச நலத்தை புறக்கணித்ததுமல்லாமல் உங்கள் இருவருக்கும் பெரும் அபகாரமும் செய்து விட்டேன்.

என் பிழைகளை பொறுத்து, என்னையும் காங்கிரஸ் ஊழியனாக சேர்த்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளுகிறேன்' என்று கூறி முடித்தார்.

புருஷோத்தமனும் புஷ்பாவதியும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. காதலர் இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டனர். பிரிந்து வெகுநாள் கஷ்டப்பட்ட காதலர்கள் ஒன்று சேரின் அவர்களது ஆனந்தத்திற்கு எல்லையுண்டா?

சில நாள்கள் சென்றன. பாரிஸ்டர் கமலநாதன் முற்றிலும் குணமடைந்து தற்போது தேசசேவையில் தீவிரமாக ஈடுபட்டுழைத்து வருகிறார். ஒருநாள் மாலை 7-மணி இருக்கலாம். அன்றைய தினம் பௌர்ணமி. தென்னூர் 'சந்திரவிலாஸ்' வெளித் தாழ்வாரத்தில் புருஷோத்தமனும் புஷ்பாவதியும் உல்லாசமாகக் காற்று வாங்கியவண்ணம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

'பிராணபதி, தங்கள் ஞாபகார்த்தமாய் நான் பெற்ற கதர் கைக்குட்டையே என்னைத் தேசத்தொண்டில் ஈடுபடச் செய்தது.' என்று கூறி கைக்குட்டையை எடுத்து கண்களில் ஒத்திக்கொண்டாள் புஷ்பாவதி. பின் மெதுவாகத் தன் காதலனின் கரங்களைப் பற்றிக்கொண்டு 'நாதா, அன்று தாங்கள் ஸ்திரீகள் முன்னேற்றத்திற்காக பாடுபடவேண்டுமென்று சொன்னீர்களே. தங்கள் கருத்தென்ன?' என்றாள் புஷ்பாவதி.

'காதலி நான் கூறியது உண்மைதான். அதன்படியே நாம் ஒற்றுமையுடன் தேச நன்மையையே பிரதான வேலையாகக்கொண்டு அதற்காகவே பாடுபட வேண்டும். அல்லாமலும் நீ என்னுடன் சேர்ந்து ஹரிஜனத்தொண்டு, மதுவிலக்கு, முதலிய பிரசாரங்களுக்குத் துணையாக வரலாம்' என்று கூறினான் புருஷோத்தமன்.

'ஆருயிர் நேசரே, இன்றே நமது எண்ணம் ஈடேறியது. கடவுள் அருளால் நாம் ஒன்று சேர்க்கப்பட்டதுமல்லாமல், எனது பிதாவும் திருந்தினார். என்னே இறைவனின் செயல்! என்று சந்தோஷ மிகுதியால் கூறியபடியே புருஷோத்தமன் மேல் சாய்ந்தாள். அவனும் அவளைக் கட்டியணைத்து கணக்கற்ற முத்தங்களைக் கொடுத்தான்.



# ‘மாணிக்கம் கண்ட மகுத்துவம்’

[வி. ராஜரத்தினம்]



கதை யென்னமோ! நீளந்தான். ஆனால் 2, 3 பக்கங்களுக்குள் எடங்கா விட்டால் ஆசிரியர் எங்கே கட்டுரையை ‘பாய்காட்’ செய்துவிடப் போகிறாரோ! என்ற பயம். அதனால் சுருக்க வேண்டியதாய்விட்டது.

‘நிம்மதியான ரேஸ் சீஸன்’
‘வருஷம் முடிவடையும் மாதம்’

சுக்கிரவாரம் இரவு, கடியாரம் ‘டிங், டிங்’கென்று 2 அடித்தது. சாலைத் தெருவில் ஒரு வீட்டின் தெருப்பக்கமுள்ள படுக்கை யறை.

கோமளம்:—ஐயோ! இதென்ன உமக்கு இரவும் பகலும் இதே தொழிலாய் விட்டதே. ஆகாரம், நித்திரை ஒன்றும் ஊஹூம், பாழாய்ப்போன ரேஸ், வந்தாலும் வந்தது சதா அச்சிட்ட காகிதங்களை வைத்துக்கொண்டு எங்கோரும் ஆபீஸ் உத்தியோகமாய் விட்டதே. இது என்ன பித்தோ? இம்மட்டோடே நிறுத்தி விட்டால்தான் பிழைத்தீர். இதை அடியோடே மறந்து துலைத்தால் தான். மணியோ இரண்டடித்தும் கொஞ்சமாகிலும் கண்ணுறங்க வில்லையே?

மாணிக்கம்:—சீ! சீ!! கழுதை. உனக்கென்ன தெரியும். சும்மா விழுந்து கிடக்காமல் ‘கழுதைக்குத் தெரியுமோ? கந்தப்பொடி வாசனை’ பித்தாம். உனக்கு மாத்திரம் இல்லையோ? ‘புடவைப் பித்து, நகைப் பித்து’ அம்மாதிரி இது ஒன்று.

கோமளம்:—ஆம்! கிழிந்தது பாரதம், கொஞ்சமா! இந்த இழவுக்கு தாரை வார்த்தது. என்ன கௌரவமான உத்தியோகம் ‘மானேஜர்’ மாதம் 300 ரூபாய் சம்பளம். இந்த இழவு ரேசால் துலைத்தீர். நகை நட்டுகளெல்லாம் ‘குளோஸ்’, பிறந்த சொரூப மானேன். ஊரார், உற்றாரிடம், நாணயத்தையும் போக்கடித்துக்

கொண்டு சூதாடி யென்ற பட்டமும், ஏளனமும், ஊம்! அடடா! நம்பி காலணு கொடுக்கப்பட்டவர்களுண்டோ? இவ்வளவோடு இந்த ரேசை மறந்துவிட்டால் எவ்வளவோ மேன்மை யடையலாம்.

மாணிக்கம்:—'டேம் இட்' பிளடிபூல், சும்மா தூங்காமல், சனியன் எங்கோரும் 'டிஸ்டர்பன்ஸ்' உதைப்பேன். கழுதை வாயை மூடிக்கொண்டு தூங்கு. மறப்பதாம், ஊம்! எதை, 'ரேஸை மறப்ப தென்பது இறப்பதற்கு முன் முடியாத காரியம்' தெரிந்ததா?

கோமளம்:—வாஸ்தவமே! கழுதை உதைக்கத்தானே செய்யும். நீர் இனி எக்கேடு கெட்டா லெனக்கென்ன? என்னுலானவரை எவ்வளவோ! சொல்லிப் பார்த்தேன் ஊஹூம். அடடா! வண்டி என்ன, குதிரை என்ன, ஆட்கள் என்ன, எல்லாம் தொலைந்துபோய் இப்போ கால் நடை, அழுக்குப்படிந்த கந்தல் உடைகள், காலணு பொடிக்கு கையில், ஐவேஜ் பாபர். இவ்வளவு ஸ்திதியிலும் புத்திவர வில்லையே! ஊம்; ஐயோ! பாபம் இவ்வளவு ஊக்கத்தோடு ஆகாரம் நித்திரையின்றி கஷ்டப்படுகிறீரே, பொழுது விடிந்தால் சனிக்கிழமை ரேசுக்குப் போகப் போகிறீரோ?

மாணிக்கம்:—ஆம்! என்ன தடை?

கோமளம்:—தடையென்ன இருக்கு. இந்த பவுசுக்குத் தஞ்சாவூர் மஞ்சளாம். எனக்கினிமே லிங்கென்ன இருக்கு? இன்னம் 2, 3 தினங்களில் நான் பிறந்த வீடுபோய் சேர்ந்து விடுகிறேன். எனக்கு ஒரு சந்தேகம். ரேசுக்கு போக உம்மிடம் வெள்ளையப்பன் ஏது?

மாணிக்கம்:—வெள்ளையப்பனு? பொழுது விடிந்தால் தானுய் ஓடிவாராதா?

கோமளம்:— ஓஹோ! எல்லாந் தொலைந்துபோய் இந்த வீடொன்று கும்மாளம் போடுது. இதற்கும் உலைவைத்து விட்டீரோ என்னமோ? அல்லது வைக்கப் போகின்றீரோ? சு, சு, சு, சு பரம சிவமே இப்படியும் ஒரு மனுஷ ஜன்மம் உண்டா?

மாணிக்கம்:—ஹஹ்ஹஹ்ஹா! பலே பேஷ்!! நாளை எல்லா ரேசிலும் இந்த மூன்று குதிரைகள் தான் 'பஸ்ட்', ஊம், நாளைக்கு நமக்கு ஒரே 'லக்' வின்னும், பிளேசும், குறைந்தது 5000 க்கு பஞ்சமில்லை, என்றதும் காகிதங்களை யெல்லாம் சுருட்டி அப்பால் வைத்துவிட்டு படுத்துறங்கினுர்.

கோமளத்திற்கோ! நித்திரா தேவி விலக, பொழுதுவிடியும் வரை கண்களில் நீர் தாரைதாரையாக வடிய அழுதவண்ண மிருந்தாள்.

மறுதினம் காலை 6 மணிக்கு வெகு சுறுசுறுப்பா பெழுந்த முத லியாரவாள் காலைக் கடன்களை முடித்ததும் பட்டை பட்டையாக நெற்றியில் விபூதியைத்தீட்டி வெளிக்கிளம்பி அடுத்த தெருவிலுள்ள 'சவுகார் சனியன்லால்' வீட்டிற்குள் நுழைந்தார்.

'முதலியார் ஏற்கனவே சில்லரை சில்லரையாக சவுகாரிடம் வீட்டை அடமானம் வைத்து ரூபாய் 5000 க்கு வாங்கி 'ரேஸ்,' களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்துவிட்டிருந்தார்.

வீட்டை எப்போ! லபக் 'கென்று விழுங்கிவிடலாமென்று எதிர் பார்த்திருந்த சனியன்லாலுக்கு அன்று ஒன்பதாமிடத் தில் குரு'

ஊஹூம்! அசலே 5000 ஆய்விட்டது. வட்டி கணக்கு பார்த் தால் 1000 க்கு குறையாது விடோ? அவ்வளவு பொறுமானதல்ல. இனி ஒரு பைசாவும் கொடுக்க முடியாதென்று சட்டதிட்டமாய் சவு கார் சொல்லவே, முதலியார் இஞ்சியைத் தின்ற மற்கடம்போலா னார். என்ன இருந்தாலும் முதலியார் என்ன சோர்வடையக்கூடிய பேர்வழியா? என்ன பிரயாசை இரண்டு மூன்று தினங்களாக இர வும் பகலும் ஆகாரம் நித்திரையின்றி 'மலையைக்குடைந்து எலியைப் பிடித்தமாதிரி' மூன்று குதிரைகளின் வால்களைக் கெட்டியாய்ப் பிடித்து வைத்திருக்கின்றாரே! சவுகார் பணம் கொடுக்கமுடியாதென் றால் சும்மா விட்டுவிடுவாரா, என்ன, ஒருக்காலமும் ஊஹூம்.

இருவருக்கும் இரண்டு மணிநேரம் விவாதம். கடைசிகாக ஓர் வித ஏற்பாடு.

ரூபாய் 500 பெற்றுக்கொண்டு வீட்டை சவுக்காருக்கு விக்கி றையம் எழுதிக்கொடுத்து விட்டார்.

வீடுகை விட்டுப் போனாலும் 'ரேஸ்' கைவிட்டுப் போகலாமா என்ன; ஒரு ரேஸ் தவறினால் தலை சுக்கல் சுக்கலாக வெடித்துவிடுமே!

முதலியார் ரூபாய் 500 உடன் அன்றுபகல் மூன்று மணிக்குப் புறப்பட்டு விட்டார். ஆனந்தம் சொல்லமுடியுமா? வழிநெடுக மனக் கோட்டைகள் தான்.

ஏறினார் 'பஸ்' சேர்ந்தார் 'கிண்டி'

இவர் பொருக்கியிருந்த குதிரைகள்.

1. 'Certainly'—'சர்டன்லி'
2. 'My Mistake'—'மை மிஸ்டேக்'
3. 'Never Mind'—'நெவர் மைண்ட்'

உண்மையிலேயே ஜயமடையக் கூடியதானாலும்; அன்று இவர் வினைப்பயன் இவருக்கு முன்போய் நின்றதால் அபஜயமே!

இவருக்கோ! குதிரைகளின்மீது பூரணநம்பிக்கை. ரூபாய் 5000 த்துக்கு குறையாமல் வீடு திரும்பப் போகிறோமென்ற ஓரே தீர்மானம்.

4 மணிக்கெல்லாம் ஆரம்பித்து விட்டார். ஆட்டத்தை. பஞ்சபாண்டவாள சகுனியுடன் சூதாடின மாதிரித்தான்.

'டப்ளிங் மேல்டப்ளிங்., ட்ரிப்ளிங் மேல்ட்ரிப்ளிங்'

சொல்லவேண்டுமா! 5 மணிக்கெல்லாம் சர்வமும் க்ஷவரம், வீடு திரும்ப 'பஸ்' சார்ஜ் பாக்கெட்டில் தகாறு.

முகம் மூன்றும் பேஸ்த் ஆசாமி யதைப்போலாய்விட்டது. பெருமூச்சு இருதயத்தைப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்ப, நெற்றியில் வியர்வை சொட்ட மனந்தத்தளிக்க எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கம். ஐயோ! இனி நம்மை சனியன்லால், வீட்டை விட்டு அப்புறப்படுத்தி விடுவானே! எங்கே போவது, நம்மை ஆதரிப்பவரும் சேர்ப்பவரும் யாருமில்லையே! கோமளம் சொன்ன புத்திமதிகளைக் கொஞ்சமும் கவனிக்காமல் போய்விட்டோமே! அவளும் நம்மைக்கைவிட்டு விடுவாளே! என்று அலறி தலைகுனிந்த வண்ணம் திரும்பலானார். ஆனால் மூன்று குதிரைகளும் இவர் மனதை விட்டகலவில்லை. உடனே குதிரைகள் ஞாபகம் ஏற்பட, மற்ற கவலைகள் ஓட்டம் பிடித்து விட்டன.

என்ன ஆச்சரியம் கண்டிப்பாய் 'வின் அண்டு ப்ளேஸ்' மூன்று குதிரைகளும் அடித்திருக்க வேண்டுமே! ஊம், என்னமோ! சூது நடந்து விட்டது. மோசம், மோசம்., படுமோசம். என்று கைகளை உதறி தனக்குத்தானே பேசிக்கொண்டு நடந்தார்.

இவர் மானேஜராக உத்தியோகம் செய்தகாலத்தில் இவரிடம் அட்டண்டராக இருந்த 'முனுசாமி' இவர் தலையிறக்கத்தோடு எதிராக வருங் கோலத்தைக்கண்டு பரிதாபப்பட்டு.

'என்ன, சார்., ரேசுக்குப் போய்த் திரும்புகிறீர்களா? என்றான். குனிந்த தலையை நிமிர்த்த

மாணிக்கம்:—'Certainly'—சர்டன்லி.,

முனுசாமி:—என்ன சார், உங்கள் யோக்யதை யென்ன; கவுரவமென்ன. எல்லாம் போயும் இன்னமுமா! சார்., நீங்கள் இந்த ரேஸ் ஆடவேண்டும்.

மாணிக்கம்:—'My Mistake'—மை மிஸ்டேக்.,

முனுசாமி:—ஐயோ! பரிதாபம்- சு, சு, சு, சு, இன்று எவ்வளவு துலேத்து விட்டீர்களோ?

மாணிக்கம்:—'Never Mind—நெவர் மைண்ட்.

என்று சொல்லிக் கொண்டே நடந்தார் வழிநெடுகவும்; இம் மூன்று குதிரைகளின் 'நாமஜெபம்' மந்திரமாக மாற அதை ஜபித்த வண்ணம் மாலே 7 மணிக்கு வீட்டிற்குள் நுழைய.

கோமளம்:—எவ்வளவு புத்தி சொல்லியும் அந்த ரேஸ் இழவிற் குத்தானே போய்வந்தீர்.

மாணிக்கம்:—'Certainly'—சர்டன்லி.

கோமளம்:—இதுகாறும் துலேத்தது போருதா? இன்னுமா! துலேத்து வந்தீர்.

மாணிக்கம்:—'My Mistake'—மை மிஸ்டேக்.

கோமளம்:—ஐயோ! உமக்கு ஏதுபணம்? வீட்டை ஏதாகிலும் ஒழித்து விட்டீர்களோ?

மாணிக்கம்:—'Never Mind'—நெவர் மைண்ட்., என்றார்.

அவ்வளவு தான். கோமளம் ஒரு புறம் தலேயில் மோதி அடித்துக் கொண்டு கண்களில் நீர் தாரை தாரையாக வடித்து ஓவென்ற லற, முதலியார் மற்றொருபுறம்; Certainly—சர்டன்லி., My Mistake—மை மிஸ்டேக்., Never Mind—நெவர் மைண்ட், எனும் சிவமந்திரத்தை ஜபித்தவண்ணம்:—எவ்வளவு ஆனந்தம்.

கோமளம் வாக்கு, அம்பாள் வாக்காய் பலித்து விட்டது. முதலியாருக்கு உண்மையாகவே பயித்தியம் பிடித்துவிட மந்திரங்களே உச்சரித்தவண்ணம் தெருத் தெருவாய் திரியலானுர்,

இவரை சந்திக்கும் பையன்கள்:—

'அடே ரேஸ் பயித்தியம் வருதுடோய்' என்ற ஒரே இரைச்சல் தான்.

'ரேசின் பயித்தியமும்'—'மாணிக்கம் கண்ட மருத்துவமும்.

---

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.

# சகல மேக சித்தாதி எண்ணெய்



இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30 }

இப்படிக்கு.
அண்ணாவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் முன்னம் அனுப்பிய சகலமேக சித்தாதி எண்ணெய்யை சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்டீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2-7-1934.

பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்
சேலம் ஜில்லா.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்

னித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயை கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி, சீனிவாச ஐயங்கார்,

சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,

இராஜாத்தினம் செட்டி.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

## அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப்பாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு . ரூ3.

# காங்க்ரீன்

என்னும்

# இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தாரத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனால் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வ தாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினல் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

---

பிரம்மஸ்ரீ கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்கள் திவ்ய சமுகம். கனம் தங்கிய ஐயா, சுமார் $1\frac{1}{2}$ வருஷத்திற்கு முன் என்னுடைய வியாதியின் பொருட்டு தாங்களனுப்பிவித்த சகல மேக

சித்தாதி எண்ணெயும், இரணசஞ்சீவியும் எனக்குற்ற சில அசந்தர்ப்பங்களில் உபயோகிக்கமுடியாமல், இரண சஞ்சீவியை மட்டும் உபயோகித்ததில் யான் அடைந்த பலன் இச்சிறு லெட்டரில் எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். இது ஒரு வரப்பிரசாதமென்றே அடியேன் நினைக்கிறேன். டிசம்பரில் ஷை எண்ணெய்யும் உபயோகித்து பூரண சௌக்கியம் அடைய கடவுளை தியானிக்கிறேன். இரண சஞ்சீவியால் $\frac{3}{4}$ வாசி குணமடைந்திருக்கிறேன். ஆதலால் தயவு செய்து இன்னும் 1 புட்டி இரணசஞ்சீவியை மட்டும் V. P. P. யில் அனுப்பிவைக்கக் கோருகிறேன். அதனுடன் கியாட்லாக் ஒன்றும் சேர்த்து அனுப்பவும். மற்ற விபரம் தங்கள் வி. பி. பி. யைப் பார்த்து எழுதுகிறேன். நமஸ்காரம். தங்கள் உண்மையுள்ள,

V. Mani. V. இராதா கிருஷ்ணையர்,
12-11-1935. முனிசிபல் ஸ்கூல் உபாத்தியாயர்
கான்பாளையம் 2வது தெரு, மதுரை.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :-

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் கொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானமிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எங்கோமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

**வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.**

### கைகண்ட பலன்

திருமயம்
13–1–24.

கனம்பொருந்திய டாக்டர் அவர்களுக்கு,

தாங்கள் 28–11–33ல் அனுப்பிய 'காஸ்டோலின்' என்னும் உயரிய படை மருந்தில் கொஞ்சம் எடுத்து எனது தேகத்தில் படையுள்ள பாகமெங்கணும் பூசி 1 மணி நேரத்திற்குப்பிறகு சோப்புத் தேய்த்து வெந்நீரால் கழுவிவிட்டேன். உபயோகித்த 3 நாட்களிலேயே நான் ஆச்சரியப்படும்படி படை முற்றும் நிவாரணமாயிற்று. தற்சமயம் எனது தேகத்தில் படைகளிருந்த சுவடுகள் கூடக்கிடையாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலி வைத்தியர்கள் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி பாமர மக்களை ஏமாற்றி வருகிற இக்காலத்தில் ஒரு கற்பகம் போன்று உயர்தர மருந்துகளை சகாய விலைக்குக் கொடுத்துதவும் தங்கட்கு இவ்வுலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மேலும் தங்கள்மேலான மருந்துகளை ஒரு முறை உபயோகித்தவர்கட்கு யாம் எடுத்துக்கூற வேண்டுவதொன்றுமில்லை. தங்களின் அரிய மருந்துகளை இதுநாள்வரை அனுபவித்தறி

யாத எனது நண்பர்கள் யாவரும் தங்கள் உயர்ந்த மருந்துகளையே உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறேன். தங்களன்புள்ள,

கே. ஆர். குப்புசாமிதாஸ்.

---

திருநெல்வேலி, 23—12—33.

சென்னை கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு

திருநெல்வேலி, டி. எஸ். சங்கய்ய பிள்ளை எழுதிக்கொள்வது உபயக்ஷேமம்: எனக்கு துடையின் இடுக்கிலும் சாமான்கூட்டின் மேலுமிருந்த படையானது 6 மாத காலமாக கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. தங்களுடைய (Castoline) போட்டதில் மிகவும் குணம் உண்டு. 'குணமது கைவிடேல்' என்கிற பழமொழிக்கிணங்கி என்னுடைய மற்ற சிக்குகளுக்கும் தங்களுடைய மருந்தை உபயோகித்து குணமடையலாமென்கிற முழு நம்பிக்கையுடன் இந்த லட்டர் யெழுதி யிருக்கிறேன். தங்கள் அன்புள்ள,

டி. எஸ். சங்கய்ய பிள்ளை.

---

திருவாளர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அன்பு மிகுந்த ஐயா,

தாங்கள் முன் அனுப்பிய காஸ்டோலின் மருந்துகள் மிகுந்த பலனளித்தன. என் மனைவியின் முதுகிலிருந்த கருத்த தடித்த பருக்கள் பல இம்மருந்தைத் தடவித் தேய்த்து வந்ததில் தடிப்புகள் உதிர்ந்து கருத்த புள்ளிகள் மட்டும் காணப்பட்டன இதுவும் நிறம் மாறி வருகின்றன. புடவைகட்டும் பாகமாகிய இடுப்பில் ஏற்பட்டு வெகு நாளாய்த் தொந்தரவு உண்டாகிப் புண்ணுகவும் சீழ் வந்து கொண்டுமிருந்தது இம்மருந்தைத் தடவி வந்தால் புண் ஆறி அரிப்பும் நீங்கி அந்தத் தொந்திரவே இல்லாமல் சௌக்கியமடைந்து விட்டது என் கன்னங்களில் ஏற்பட்டிருந்த மேகநீர் தடிப்புகளுக்கும் தடவி வந்ததில் அவ்வியாதியும் அநேகமாய் நீங்கிவிட்டது. மற்றும் என் நண்பர்களுக்கும் இவைகளைப்பற்றிச் சொன்னதில் அவர்களுக்கும் வரவழைத்துக் கொடுத்ததில் அவர்களுக்கும் நல்ல பலனளித்ததாகச் சொன்னார்கள். மூலைக்காம்புகளின் அரிப்பையும் வெடிப்பையும், புண்ணையும் சொஸ்தம்பண்ணி யிருக்கிறது. பரோபகாரமும் உத்தமமானதுமான தங்கள் மருந்துகளைச் சமயம் வந்தபோது மற்றவர்களுக்கும் சொல்லிக்கொண் டிருப்பதுடன் 'தமிழரசு' பத்திரிகை மூலம் நிவர்த்தி விவரங்களைச் சொல்லி சிபார்சு செய்தும் வருகிறேன்.

அன்றியும், சமீபத்தில் தங்களிடமிருந்து வரவழைத்த 'சகல மேக சித்தாதி எண்ணெய்' நானும் என் மனைவியுமாய் மூன்று மூன்று வேளை சாப்பிட்டதில் எனக்கு தேகமெங்குமிருந்த கிரந்தி

போல் உடைந்தால் இரத்தம் ருளை, சீழ் ஆகியவை வந்த சிரங்குக் கட்டிகளும் அரிப்பும் நீங்கி அவை உதிர்ந்து தோலோடு தோலாய் கருப்புத் தழும்புகளாகி, அத்தழும்புகளும் வரவர மறைந்துவிட்டன. என் மனைவிக்கிருந்த அதிக உஷ்ண சப்பந்தமான வெட்டை வியாதியும் அநேகமாய் நீங்கினதென்றே சொல்ல வேண்டும். மேலும் சாப்பிடச் செய்யலாமென்றால் இடம், பொருள் சௌகரியம் இடம் கொடுக்கவில்லை.

எனவே தங்களது அதியற்புத எண்ணெயைப்பற்றி அதிகம் சொல்ல இச்சிறிய கடிதம் போதாது.

மற்றும் இத்துடன் ஆறணா ஸ்டாம்பு அனுப்பி யிருக்கிறேன். ஒரு பாட்டில் காஸ்டோலின் அன்ரிஜிஸ்டர் பார்சலில் அனுப்பி வைக்க வேண்டுகின்றேன். இங்ஙனம் தங்களன்பு மறவாத,

பி. பரிமணப் பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர், போர்டு ஆண்பாடசாலை,
மேலக்கல் கண்டார்கோட்டை போஸ்டு, பொன்மலை திருச்சி.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully

E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

## தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப் படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ் சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.